
கோகுலம்

GOKULAM

மார்ச் '89 ரூ. 3/—




பாலின் சத்து.
ட்ருவின் அன்பு.
புதிய
ட்ரு
ப்யூர்
மில்க் பிஸ்கட்
TRUE
PURE
Milk Biscuits
சிறந்த பொருட்களைக் கொண்டு அன்புடனும்
அக்கறையுடனும் தயாரிக்கப்படுவது



உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் — பாரதியார்.

கோகுலம்

1989 மார்ச் மாத இதழ்
மலர்: 7 இதழ்: 2
தனிப் பிரதி ரூ. 3/-
ஆண்டுச் சந்தா ரூ. 36/-

கௌரவ ஆசிரியர்:
அழ. வள்ளியப்பா.



புகைப்படம்: கோவை சீதாராம்.

அருமைச் சிறுவர் சிறுமியரே,

1986 மே மாதம் உங்களில் பலர், தனித் தனியாகவும் கூட்டாகச் சேர்ந்தும் மொத்தம் 8,500 பேர், அப்போதிருந்த முதல்வர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் அனுப்பியிருந்தீர்கள். அதில்,


- தமிழில் எங்களுக்கு வண்ணப் படங்களுடன் நிறையப் புத்தகங்கள் வெளிவர வேண்டும்.
- எல்லாப் பள்ளிகளிலும் நூலகங்கள் இருக்க வேண்டும்.
- எங்களுக்கான திரைப்படங்கள் வேண்டும்.


என்று பணிவோடு கேட்டுக் கொண்டிருந்தீர்கள். சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்து இலட்சக்கணக்கான குழந்தைகளின் வயிற்றுப் பசியைப் போக்க வழிவகுத்த அவர், உங்களின் அறிவுப் பசியைத் தீர்க்கவும் ஏற்பாடு செய்வார் என எதிர்பார்த்தோம். ஆயினும், உடல்நலக் குறைவால் அவர் நினைத்த பல திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் போயிற்று.


இப்போது தமிழக முதல்வராகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற கலைஞர். டாக்டர். மு. கருணாநிதி அவர்களும், கல்வி அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கும் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களும் தமிழ் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டவர்கள்; கலை வளர்ச்சியில் அதிக ஈடுபாடு உடையவர்கள் என்பதை அனைவரும் அறிவர். அவர்கள் நிச்சயம் உங்கள் ஆவலை, கூடிய விரைவில் நிறைவேற்றுவார்கள் என்று நம்புகிறோம்.


அழ. வள்ளியப்பா.

இந்த இதழ் எழுத்தாளர்கள்


பால நடராஜன்


வி. சுவாமிநாதன்


வேணு சீனுவாசன்.



கமலா நடராஜன்.

பிருந்தாவனக் கவிஞர்கள்


டி. ஆர். பார்த்தசாரதி


இரா. பரமசிவம்



ஏ. சாகுல் அமீது



எம். செந்தில் வேலன்.

பிருந்தாவனக் கதாசிரியர்


சோ. மருடேசவரன்

வண்ண அட்டைப்படம்: ஜலராம் கம்பைன்ஸ்.






ஜி.டி. நாயுடு

தோற்றம்: 23.3.1893 மறைவு: 4.1.1974

மின்மினிக் கதைகள்

அங்கே போவதுதானே?



வெண்டல் பிலிப்ஸ் என்பவர் அமெரிக்கப் பிரமுகர்களில் ஒருவர்.

அவர் நீக்ரோக்களுக்கு சம உரிமை வழங்க வேண்டும் என்ற கொள்கை உடையவர்.

அவர் ஒருநாள் புகை வண்டியில் பிராயாணம் செய்து கொண்டிருந்தார்.

அடுத்த ஊரில் அவர் இருந்த பெட்டியில் பாதிரியார் ஒருவர் ஏறினார். அவர் நிறவெறி மிகுந்தவர். நீக்ரோக்களுக்குச் சம உரிமை கொடுக்கக் கூடாது என்ற கொள்கை உடையவர்.

தான் ஏறிய பெட்டியில் பிலிப்ஸ் இருக்கிறார் என்பதைப் பாதிரியார் அறிந்தார்.

''நீர்தானே பிலிப்ஸ்?'' என்று பாதிரியார் கோபத்தோடு கேட்டார்.

''ஆமாம்!'' என்று பிலிப்ஸ் அமைதியான குரலில் கூறினார்.

''நீக்ரோக்களுக்குச் சம உரிமை வழங்கவேண்டும் என்று சொல்பவர் நீர்தானே?'' என்று பாதிரியார் கேட்டார்.

''ஆமாம்!'' என்று பிலிப்ஸ் கூறினார்.

''அப்படியானால் நீர் இங்கே ஏன் பிரச்சாரம் செய்கிறீர்?'' என்று பாதிரியார் கேட்டார்.

''பின் எங்கே செய்ய வேண்டும்?'' என்று பிலிப்ஸ் கேட்டார்.

''நீக்ரோக்களுக்காகப் பிரசாரம் செய்யும் நீர், நீக்ரோக்கள் இருக்கும் இடத்திற்குச் சென்றல்லவா பிரச்சாரம் செய்ய வேண்டும்?'' என்று பாதிரியார் கேட்டார்.

இதைக் கேட்டதும் பிலிப்ஸ் சிறிது நேரம் பேசாமலிருந்தார்.

பிலிப்ஸ் பதில் ஒன்றும் கூறமுடியாமல் மௌனமாகிவிட்டார் என்று பாதிரியார் நினைத்தார்.

இந்த நிலையில், ''நீங்கள் பாதிரியார்தானே?'' என்று அவரைப் பார்த்துப் பிலிப்ஸ் கேட்டார்.

''ஆமாம்!'' என்று பாதிரியார் கூறினார்.

''நரகத்தில் வேதனைப்பட்டுக் கொண்டிருப்பவர்களைக் கரை யேற்றுவதுதானே உங்கள் வேலை. அதற்காகத்தானே பிரச்சாரம் செய்து வருகிறீர்கள்?'' என்று பிலிப்ஸ் கேட்டார்.

''ஆமாம்,'' என்று பாதிரியார் கூறினார்.

''அப்படியானால் அதற்காக இங்கே ஏன் பிரச்சாரம் செய்கிறீர்கள்? அங்கே போவதுதானே – அதாவது நரகத்திற்குப் போவதுதானே?'' என்று பிலிப்ஸ் கேட்டார்.

பாதிரியார் ஒன்றுமே பேசவில்லை. ''ஏன் இந்த மனிதரிடம் வாயைக் கொடுத்தோம்?'' என்று எண்ணியபடியே மௌனமாக இருந்தார்.

ஊருக்கு உபதேசம்



ஓர் ஊரில் குப்பன், சுப்பன் என்று இரண்டு பேர் இருந்தார்கள். இருவரும் நண்பர்கள்.

ஒருநாள் சுப்பன், குப்பனைக் காணவந்தான். இருவரும் பல விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது 'மனிதன் மற்றவர்களுக்கு உதவியாக இருக்க வேண்டும்' என்று சுப்பன் சொன்னான்.

''நீ சொல்வது உண்மைதான். இனிமேல் நான் அப்படித்தான் வாழப்போகிறேன்'' என்று குப்பன் சொன்னான்.

''உறுதியாகவா?'' என்று சுப்பன் கேட்டான்.

''ஆமாம்!'' என்று குப்பன் சொன்னான்.

''அப்படியானால் உனக்கு ஐம்பதாயிரம் ரூபாய் பணம் வந்தால் எனக்கு இருபத்தையாயிரம் ரூபாய் தருவாயா?'' என்று சுப்பன் கேட்டான்.

''நிச்சயமாகத் தருவேன்'' என்று குப்பன் சொன்னான்.

''உன்னிடம் இருபது காணி நிலம் இருந்தால், எனக்குப் பத்துக் காணி தருவாயா?'' என்று சுப்பன் கேட்டான்.

''நிச்சயமாகத் தருவேன்'' என்று குப்பன் சொன்னான்.

''உன்னிடம் பத்து வீடுகள் இருந்தால் எனக்கு ஐந்து வீடுகள் தருவாயா?'' என்று சுப்பன் கேட்டான்.

''அதில் மட்டும் என்ன வஞ்சகம்! உறுதியாகத் தருவேன்!'' என்று குப்பன் சொன்னான்.


''உன்னிடம் இரண்டு பசுமாடுகள் இருந்தால் எனக்கு ஒன்று தருவாயா?'' என்று சுப்பன் கேட்டான்.

இதைக் கேட்டு குப்பன் அதிர்ச்சி அடைந்தான். ''தரமாட்டேன்!'' என்று சொன்னான்.

அதைக் கேட்டு சுப்பன் ஆச்சரியம் அடைந்தான். ''பெரிய பெரிய பொருள்களை எல்லாம் தருவதாகக் கூறிவிட்டுச் சிறிய பொருளைத் தரமாட்டேன் என்று சொல்கிறாயே, ஏன்?'' என்று சுப்பன் கேட்டான்.

''என்னிடம் இல்லாத பொருள்களையே கேட்டுக் கொண்டு வந்தாய். நானும் தருவதாகச் சொல்லிக் கொண்டே வந்தேன். கடைசியாக என்னிடம் இருக்கும் பொருளையே கேட்டு விட்டாயே! என்னிடம் இரண்டு பசுமாடுகள் இருக்கின்றன! அதில் ஒன்றை உனக்கு எப்படித் தரமுடியும்?'' என்று கேட்ட குப்பன், அங்கிருந்து தன் வீட்டை நோக்கி வேகமாக நடந்தான்.

பணம் போடும் கரடி



ஓர் ஊரில் ஒரு வியாபாரி இருந்தான். அவன் மிகவும் நல்லவன். சாதுர்ய புத்தி உள்ளவன்.

ஒரு நாள் காலையில் அவன் காட்டுப் பாதையில் அடுத்த ஊருக்குப் போய்க்கொண்டிருந்தான்.

ஒரு புதரிலிருந்து கரடியொன்று ஓடி வந்தது. அவனைத் துரத்தத்

தொடங்கியது.

பயங்கொண்ட வியாபாரி ஒரு மரத்தைக் கட்டிப் பிடித்தபடியே மறைந்து கொண்டான்.

மரத்தை நெருங்கிய கரடி, தன் முன்னங் கால்கள் இரண்டையும் தூக்கி அவன் கைகளைப் பிடிக்க முயன்றது.

அந்த நிலையில் அங்கிருந்து ஓடினால் கண்டிப்பாகக் கரடி துரத்தி வந்து, தன்னைக் கொன்று விடும் என்று பயந்து வியாபாரி கரடி, தான் நிற்கும் பக்கம் வந்து விடாமலிருப்பதற்காகப் பிடித்துக் கொண்டான்.

அது சுற்ற, அவன் சுற்ற, கரடியும்,' வியாபாரியும் மரத்தைச் சுற்றிச் சுற்றி வந்தார்கள்.

அப்படிச் சுற்றி வந்த போது வியாபாரியின் மடியிலிருந்த பவுன் காசுகளெல்லாம் கீழே விழுந்து விட்டன.

நண்பகல் ஆகிவிட்டது. வியாபாரி மிகவும் சோர்ந்து விட்டான். ''சிறிது நேரத்தில் நாம் மயங்கி விழுந்து விடுவோம். கரடி நம்மைக் கொன்று விடும்'' என்று அவன் நினைத்தான்.

இந்தச் சமயத்தில் பேராசை பிடித்த வியாபாரி ஒருவன் அப்பக்கமாகக் குதிரையில் வந்து சேர்ந்தான்.

அந்த இடத்திற்கு வந்ததும் குதிரையை நிறுத்தினான். ''ஏன் இப்படிக் கரடியைப் பிடித்துக் கொண்டு சுற்றுகிறாய்?'' என்று கேட்டான்.

கரடியை பிடித்துக் கொண்டு சுற்றிய வியாபாரிக்கு,வந்தவன் பெரிய பேராசைக்காரன் என்பது நன்றாகத் தெரியும்.

''ஐயா! இது பணம் போடும் கரடி. அதனால்தான் பிடித்துக் கொண்டு சுற்றுகிறேன். நூறு சுற்றுகளுக்கு ஒரு பவுன் வீதம் இந்தக் கரடி போட்டுக் கொண்டே இருக்கும். கீழே பார்த்தீர்களா? எவ்வளவு பவுன்கள் போட்டிருக்கிறது'' என்று கெட்டிக்கார வியாபாரி கூறினான்.

''அப்படியா!'' என்று ஆச்சரியத்தோடு கேட்டுக் கொண்டே பேராசை பிடித்த வியாபாரி குதிரை யை விட்டு இறங்கினான்.

''ஐயா, தயவு செய்து இதுவரை கரடி போட்ட காசுகளை எடுத்துக் கொண்டு நீங்கள் போங்கள். குதிரையை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். இனி, கரடியைப் பிடித்துக்கொண்டு நான் சுற்றுகிறேன்'' என்று அவன் கூறினான்.


'நல்லவேளை!' என்று கருதிய வியாபாரி பேராசை பிடித்த வியாபாரியின் கைகளிலே கரடியை ஒப்படைத்தான். காசுகளைப் பொறுக்கிக் கொண்டான். குதிரையில் ஏறிச் சென்று, நிம்மதியாகத் தன் ஊரை அடைந்தான்.

மூன்று நாட்கள்

ஒரு நகரத்தில் ஓர் அரசன் இருந்தான். அவன் அரசாங்க சோதிடராக ஒருவரை வைத்திருந்தான்.

சோதிடர் மிகவும் சிறப்பாகச் சோதிடம் சொல்லி வந்தார். அதனால் அவர் புகழ் நாளுக்கு நாள் பெருகி வந்தது. பொறாமை கொண்ட அரசன் அவரது புகழைக் குறைக்க வேண்டும் என விரும்பினான்.

ஒருநாள், சபையில் அமர்ந்திருந்த சோதிடரைப் பார்த்து, ''ஒவ்வொருவருக்கும் ஆயுள் எப்போது முடியும் என்று உங்களால் சொல்ல முடியுமல்லவா?'' என்று அரசன் கேட்டான்.



''சொல்ல முடியும்'' என்று சோதிடர் கூறினார்.

''உங்கள் ஆயுள் எப்போது முடிகிறது?'' என்று அரசன் கேட்டான்.

அதைக் கேட்டதும் சபையிலிருந்தவர்கள் எல்லாம் சிரித்து விட்டார்கள்.

அரசனிடமிருந்து அந்தக் கேள்வியைச் சோதிடர் எதிர்பார்க்க வில்லை. ஒருகணம் அவர் திகைப்படைந்தார். அரசன் தன்னை அவமானப் படுத்த நினைத்து விட்டான் என்பதை அவர் புரிந்து கொண்டார்.

''அரசரே! எல்லோருடைய ஆயுளைப் பற்றிக் கூறுகிற நான் என் ஆயுளைப் பற்றித் தெரிந்து கொள்ளாமல் இருப்பேனா? நான் எப்போது இறப்பேன் என்று என்னால் உறுதியாகச் சொல்ல முடியும்!'' என்று சோதிடர் கூறினார்.

''எப்போது?'' என்று அரசன் கேட்டான்.

''அரசே! நீங்கள் எப்போது இறக்கிறீர்களோ, அதற்குச் சரியாக மூன்று நாட்களுக்கு முன் நான் இறப்பேன். அதாவது நான் இறந்த மூன்றாவது நாளில் நீங்களும் நிச்சயமாக இறந்து விடுவீர்கள்!'' என்று சோதிடர் கூறினார்.

அதற்குப் பிறகு 'உங்கள் ஆயுள் எப்போது முடிகிறது?' என்று சோதிடரிடம் மன்னன் கேட்க வில்லை. கேட்பதற்கு அவனுக்குத் தைரிய மில்லை. சோதிடர் இறந்தால் நாமும் இறந்துவிடுவோம் என்ற பயத்தால் அன்றுமுதல் சோதிடரை மிகவும் நல்ல முறையில் பராமரித்து வந்தான் அரசன்.


— புலவர் நாக சண்முகம் தொகுத்த 'நன்னெறி புகட்டும் நகைச் சுவைக் கதைகள்' என்ற புத்தகத்திலிருந்து– வெளியிட்டோர்: அன்னை நிலையம், சென்னை – 17.



''சீனு அண்ணா, உங்க மாமா காய் கறி வாங்க மார்க்கெட்டுக்கு ஏணியோட கிளம்பிட்டாரே, ஏன்?''

''அட! அதை ஏன் கேட்கிறாய்? காய் கறிகளோட விலையெல்லாம் கைக்கு எட்டாத உயரத்திலே போயிட்டுதுன்னு யாரோ அவரிடம் சொன்னாங்களாம்.

— ச. காணிக்கை ராஜ்.



விஞ்ஞானி ஜி.டி. நாயுடு

கோவை மாவட்டத்திலுள்ள கலங்கல் என்னும் கிராமத்தில் பிறந்த இவர், எதற்கும் கலங்காத நெஞ்சம் கொண்டவர். கோபால் துரைசாமி நாயுடு என்பதுதான் இவரது முழுப் பெயர்.

பள்ளிப் படிப்பு அதிகமில்லை. ஆனாலும், சுயமாகத் தமிழையும் ஆங்கிலத்தையும் கற்றுக் கொண்டார். சிறு வயதிலிருந்தே ஏதேனும் பெரிதாக ஒரு சாதனை புரிய வேண்டும் என்று விரும்பினார்.

ஒருநாள் லங்காஷியர் என்ற வெள்ளைக்கார அதிகாரி, கோவையிலிருந்து இவருடைய கிராமத்திற்கு மோட்டார் சைக்கிளில் வந்தார். அப்போது அது பழுதடைந்து விட்டது. பலரும் கூடி வேடிக்கை பார்த்தார்கள். சிறுவனாயிருந்த ஜி. டி. நாயுடுவும் அவர்களில் ஒருவர்.

"மண்ணெண்ணையும் துணியும் இருந்தால் சரி செய்து விடலாமே" என்று அவர் கூறவே, நாயுடு ஓடிச் சென்று கொண்டு வந்து கொடுத்தார். அவர் என்ஜினைக் கழற்றிச் சுத்தம் செய்தார். வண்டி சரியாகி விட்டது. அவர் நாயுடுவுக்கு நன்றி சொல்லி விட்டுக் கிளம்பி விட்டார்.

நாயுடு கோவைக்கு வந்தார். ஓர் ஓட்டலில் வேலை பார்த்தார். மாதச் சம்பளம் ரூ. 12. அதில் மிச்சம் பிடித்து ரூ 200/– சேர்த்தார். அதை எடுத்துச் சென்று, அதே வெள்ளைக்காரரிடம் மோட்டார் சைக்கிளை விலை பேசி வாங்கினார். அதைப் பிரித்தும் மாட்டியும் இயந்திர நுணுக்கங்களை அறிந்தார்.

பிறகு ஒரு பேருந்தைத் தவணை முறையில் வாங்கி, அதை அவரே ஓட்டினார். பிறகு அவர் வேறு பலரையும் கூட்டுச் சேர்த்து 'யுனைடெட் மோட்டார் சர்வீஸ்' என்ற நிறுவனத்தைத் தொடங்கினார்.

அவர் நாளடைவில் ஒரு சிறந்த விஞ்ஞானியாக மாறினார். மோட்டாரின் அதிர்ச்சியைச் சோதிக்கும் இயந்திரம், இரும்புச் சட்டம் அல்லது இரும்புப் பொருளில் கண்ணுக்குத் தெரியாமல் இருக்கும் சிறு வெடிப்பையும் கண்டுபிடிக்கும் மாக்னோஃப்ளக்ஸ் டெஸ்டிங் யூனிட், காசைப் போட்டதும் பாடும் இயந்திரம் — இப்படி எண்பதுக்கு மேற்பட்ட கண்டுபிடிப்புக்கள் இவருடையவை.



வட்ட நிலா வானத்திலே
சுற்றி வருகுது — நன்றாய்ச்
சுற்றி வருகுது — அதைச்
சுற்றிச் சுற்றி விண்மீன்கள்
கொட்ட மடிக்குது — நன்றாய்க்
கொட்ட மடிக்குது.

பட்டுப் போல மேனியுடன்
பவனி வருகுது — நன்றாய்ப்
பவனி வருகுது — அதைத்
தொட்டுப் பார்க்க என்றன் மனம்
துடி துடிக்குது — என்றும்
துடி துடிக்குது.

மொட்டை மாடி மீதிலேறித்
தொட்டுப் பார்க்கவே — நிலவைத்
தொட்டுப் பார்க்கவே — நானும்
திட்டம் போட்டு மொட்டைமாடி
ஏறிச் சென்றேனே — நானும்
ஏறிச் சென்றேனே.


மொட்டை மாடி ஏறிச்சென்றும்
வட்ட நிலவினை — அந்த
வட்ட நிலவினை — நானும்
தொட்டுப் பார்க்க முடியவில்லை.
சோர் வடைந்தேனே — நானும்
சோர் வடைந்தேனே.


எட்டி எட்டித் தொட்டிடவே
எண்ணம் கொண்டேனே — நானும்
எண்ணம் கொண்டேனே — அதனை
எட்டிப் பார்த்தும் முடியாமல்
ஏக்கம் கொண்டேனே — நானும்
ஏக்கம் கொண்டேனே.

கொட்டிக் கிடக்கும் தண்ணியிலே
குட்டி நிலவையே — அந்தக்
குட்டி நிலவையே — நானும்
தொட்டுப் பார்க்க என்றன் மனம்
துள்ளி ஆடுதே — மனமும்
துள்ளி ஆடுதே!

புதிர்மேடை


I இவற்றில் ஜோடித் தலைகள் எவை?





II பறவை அலகுகள் மட்டுமா இங்கே உள்ளன? வேறு ஏதாவது உள்ளதா? கண்டு பிடியுங்கள்.

III பாதியையும் மீதியையும் சேர்க்க முடியுமா, பாருங்கள்.



விடைகள்

I விடை: 1–ம், 12–ம.

II விடை: எலி மூஞ்சி.

III விடை: 1–8, 2–6, 3–10, 4–7, 5–9.



பிருந்தாவனக் கதையரங்கம்

சபாஷ் கண்ணன்



ஆறு. அண்ணாதுரை
10403

''சபாஷ் கண்ணன்!''

யார் இந்தக் கண்ணன்? இவனுக்குப் போய் எதற்கு சபாஷ் போட வேண்டுமென்று நீங்கள் கேட்பீர்கள்? இந்தக் கதையைப் படித்து முடித்த பிறகு இவனுக்கு சபாஷ் போடணுமா, வேண்டாமா? என்று நீங்களே சொல்லுங்கள்.

அனுந்தனூர் என்ற கிராமத்தில் மிகப் பெரிய பணக்காரர் செல்வநாயகம். அவருக்கு ஆசைக்கு, ஆஸ்திக்கு எல்லாமே கண்ணன்தான்.

கண்ணன் [illegible]வது வகுப்பு படிக்கும் மாணவன். நான் ஒரு செல்வந்தரின் மகன் என்ற ஆணவம் சிறிது கூட அவனிடம் கிடையாது; அதோடு நல்ல புத்திசாலி. அவனது புத்திசாலித்தனத்தைச் சோதிக்க வந்தது அந்த நிகழ்ச்சி.

அன்று செல்வநாயகம் முக்கிய அலுவல் காரணமாக வெளியூர் சென்று தங்க நேர்ந்தது. அடுத்த நாள் கண்ணனுக்கு அரை வருடத் தேர்வு தொடங்கயிருந்ததால் செல்வநாயகத்தால் அவனை அழைத்துச் செல்ல முடியவில்லை. இரவு தேர்வுக்காக கண்ணன் வெகுநேரம் படித்துக்கொண்டிருந்து விட்டு, விளக்கை அணைத்து விட்டுப் படுத்தான். செல்வநாயகம் இல்லாத சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அந்த ஊரிலுள்ள சில தீயவர்கள் அவர் வீட்டைக் கொள்ளையடிக்க வந்தனர்.

நான்கைந்து பேர் அவர்கள் சுற்றுச் சுவரில்ஏறிக்குதிக்கும்சப்தம்,மறுநாள் தேர்வில் என்ன என்ன கேள்விகள் வரும் என்று நினைத்துப் படுத்துக் கொண்டிருந்த கண்ணனின் காதில் விழுந்தது. எழுந்து, மெதுவாக சன்னலைத் திறந்து பார்த்தான். அப்போது அவர்கள் இரகசியமாகப் பேசுவதைக் கூர்ந்து கேட்டான்.

''ஏண்டா பயப்படுறாய்? பண்ணையார்தான் ஊரில் இல்லையே!''

''டேய், அவர் சம்சாரத்தையும் பிள்ளைங்களையும் மிரட்டினால், பயந்து பணம், நகையெல்லாம் தந்துடுவாங்க'' என்றான்இன்னொருவன்.

''அப்படின்னா இன்னிக்கு நல்ல வேட்டைதான்'' என்றான் மற்றொருவன்.

இந்த உரையாடல்கள் மூலம் 'நம் வீட்டில் திருட, திருடர் கும்பல் வந்திருக்கு' என்பதைத் தெரிந்து கொண்டான். 'இவர்களை விரட்ட வீட்டிலுள்ளவர்களையும், ஊரிலுள்ளவர்களையும் வீணாக எழுப்ப வேண்டாம். நாமே இவர்களைத் தந்திரத்தால் விரட்ட வேண்டும்' என்று தீர்மானித்தான். அடுத்த வினாடி கண்ணனுக்கு 'பளிச்' என்று ஓர் எண்ணம் உதித்தது. அந்த எண்ணம் நல்லதாகப் படவே அதன்படி செயல்பட முடிவெடுத்தான்.

''பெரியப்பா, பெரியப்பா, அந்தத் துப்பாக்கியை எடுங்க. நம்ம வீட்டுக்குத் திருடன்கள் வந்திருக்காங்க. சீக்கிரம் துப்பாக்கியை எடுத்து, அதோ அங்கே குறிபார்த்துச் சுடுங்க'' என்று உரத்த குரலில் திருடர்களுக்குக் கேட்கும்படி கத்தினான்.'


''ஐயோ! பண்ணையார் வீட்டிலே எல்லோரும் தூங்காமே முழிச்சிட்டுயிருக்காங்க. அதோடு துப்பாக்கியும் வைச்சிருக்காங்களே! நம்ம கும்பல் இனிமேல் இந்த வீட்டுப் பக்கம் தலை வச்சுக் கூடப் படுக்கக் கூடாது'' என்று கூறிவிட்டு ஒவ்வொருவராகச் சுவர் ஏறிக் குதித்து ஓடும் சப்தம் கண்ணனுக்குக் கேட்டது.

தன்னுடைய யுக்தி பலித்ததைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தான் கண்ணன். உண்மையிலே கண்ணனுக்குப் பெரியப்பா என்று யாரும் கிடையாது. அதோடு அவங்க வீட்டிலே துப்பாக்கியெல்லாம் கிடையாது. இதெல்லாம் கண்ணனின் சமயோசித வார்த்தைகள்!

கண்ணன் செய்தது சிறு செயல்தான். ஆனாலும், பயப்படாமல் திருடர்களைத்தன்புத்திசாமர்த்தியத்தால் விரட்டியிருக்கிறானே! இப்போது சொல்லுங்கள். கண்ணனுக்கு 'சபாஷ்' போடணுமா? வேண்டாமா? '' என்று.

குழந்தை நட்சத்திரம்

ஆலன்



மு. முத்துக்குமரன்
20464

சத்யா ஸ்டுடியோவில் வந்து அந்தக் கம்பெனிக் கார் நின்றது. அதிலிருந்து குழந்தை நட்சத்திரம் ஆலனும் அவன் சகோதரியும் இறங்கினார்கள். இந்தியாவின் தலைசிறந்த குழந்தை நட்சத்திரம் ஆலன் என்று உங்களுக்குத் தெரியுமல்லவா? அவன் நடித்துள்ள படங்கள் பல.

'தானைத்தமிழன்' என்றபடத்தின் படப்பிடிப்பிற்காக அவன் அங்கு வந்திருந்தான். டைரக்டர் கூறியபடி சிறப்பாக நடித்து டைரக்டரின் பாராட்டைப் பெற்றான்.

அதன் பிறகு ஆலனுக்கு ஓய்வு தரப்பட்டது. அவன் ஈஸிசேரில் அமர்ந்திருந்தான். அப்போது அவனது சிந்தனையெல்லாம் இறந்த காலத்திலேயே இருந்தது.

திருச்செந்தூர் பேருந்திலிருந்து இறங்கும் பயணிகளிடம் எல்லாம் அந்த 10 வயதுச் சிறுவனும், 13 வயதுச் சிறுமியும் ''பதநீர், பதநீர்'' என்று கூவிப் பதநீர் விற்றுக் கொண்டிருந்தனர். அவர்கள் பெயர்கள் — முறையே வைரமுத்து, பவளமல்லி. அவர்கள் பெயரில் ஒன்றும் குறைவில்லை. ஆனால், அவர்கள் வாழ்வில் வறுமை இருந்தது. அவனுக்கு அம்மா இல்லை. அப்பாவும் அவர்களைக் கவனிப்பதில்லை. அவர்களுக்கு ஒரு நாளைக்கு இரு வேளை,

தான் சாப்பாடு. அதுவும் கஞ்சி மட்டுமே. பதநீர் விற்ற காசு இருவேளைச் சாப்பாட்டுக்கே போதாது. சில நாட்களில் வியாபாரம் மந்தமாகி, ஒருவேளைச் சாப்பாடாகி விடும்.

மதியம் 2.30 மணி ஆனது. பதநீர் விற்ற பின் அவர்கள், தங்கள் குடிசைக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் போது, நாகரிகமாக உடையணிந்த ஒருவர், தன் சூட்கேஸைத் தரையில் வைத்து விட்டு, பையிலிருந்த விலாசத்தை எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தார். அந்த விலாசத்திலுள்ளவரை அவர் காணவே அந்த ஊருக்கு வந்திருக்கிறார்.

அப்போது பரட்டைத் தலையுடன் இருந்த ஒருவர், திடீரென்று ஓடி வந்து அவரது சூட்கேஸை எடுத்துக் கொண்டு அந்த இடத்தை விட்டு நழுவுவதைப் பவளமல்லி கவனித்தாள். தன் தம்பியிடம் அதைக் கூறினாள். அத் திருடனின் முகத்தைப் பார்த்ததும் அவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. ஏனெனில் அந்த ஆள் அவர்களுடைய அப்பா மாரியப்பனே தான்!

'ஓஹோ! இப்படித்தான் நம் அப்பா சம்பாதிக்கிறாரோ?' என எண்ணிய அவன், தன்னுடைய தந்தை என்பதையும் பொருட்படுத்தாமல், பசி தன்னை வாட்டுவதையும் பொருட்படுத்தாமல் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு, "ஐயோ பெட்டி! பெட்டி!" என்று உரக்கக் கத்தினான். பல திசைகளிலிருந்தும் ஓடி வந்தவர்கள் அவரை வளைத்துப் பிடிக்க வந்தனர். சூட்கேஸைக் கீழே எறிந்து விட்டு அவர் ஓடி விட்டார். தன்னைக் காட்டிக் கொடுத்தவன் தன் மகன்தான் என்று புரிந்து கொண்டார் மாரியப்பன். உடனே, தன் தம்பியை இழுத்துக் கொண்டு வேகமாகத் தங்கள் குடிசைக்குச் சென்றாள், பவளமல்லி.

சூட்கேஸ் உரியவரிடம் சேர்ப்பிக்கப்பட்டது. அந்த சூட்கேஸுக்குச் சொந்தமானவர் வேறு யாருமல்ல; பிரபல இந்தி தயாரிப்பாளர் கோபாலன்தான். அவர் மொட்டையடித்திருந்தார். தான் தயாரிக்கவிருக்கும் ஒரு படத்திற்காக ஒரு குழந்தை நட்சத்திரத்தைத் தேடிக் கொண்டிருந்தார். அப் படத்தின் கதை ஒரு குப்பத்தைப் பற்றியது. அப்படத்தில் குழந்தை நட்சத்திரத்தின் வேடம் முக்கியத்துவம் வாய்ந்தது.

"நமக்கு உதவி செய்த அந்தச் சிறுவனையே நம் படத்தில் அறிமுகப்படுத்தினால் என்ன? நம் படத்திற்கு வரும் சிறுவனின் முடியும் செம்பட்டையாக இருந்தால், கதைக்கும் பொருத்தமாகத்தானே இருக்கும்? நம் படத்திற்குப் பொருத்தமான ஒரு சிறுவன் கிடைத்து விட்டான்" என எண்ணி மகிழ்ந்தார். அருகிலிருந்த கடையில் அவனைப் பற்றி விசாரித்தார். தந்தையென்று தெரிந்தும், தவறு செய்த அவரைக் காட்டிக் கொடுத்த வைரமுத்துவை, அவன் குடிசைக்குச் சென்று பாராட்டிப் பரிசளித்துச் சென்றார்.

கதவு படாரென்று திறந்தது. மாரியப்பன் உள்ளே வந்தார். "டேய் வைரமுத்து, இப்போ நான் உன்னை என்ன பண்றேன் பார்" என்று கூறியபடி அவன் தலைமுடியைப் பற்றிப் பரபரவென இழுத்தார். அருகிலிருந்த மூங்கில் கம்பை எடுத்துக் கொண்டார். கண்மண் தெரியாமல் அவனை விளாசினார். அவன் துவண்டு தரையிலே விழுந்தான்.

உடனே பவளமல்லியின் கையைப் பிடித்து, "அவன் கத்தும் போது நீ அவன் வாயைப் பொத்தியிருக்க வேண்டியதுதானடி? உனக்கென்ன கையா இல்லை" என்றபடியே அவளையும் அடித்தார். "புள்ளைங்களைப் பெத்துப் போட்டுட்டுப் போயிட்டா. அப்பனையே காட்டிக் கொடுக்கிற தப்பிலிகள்." என்று திட்டி விட்டு வேகமாகச் சென்று விட்டார்.

இந்நிகழ்ச்சி நடந்து இரண்டு வாரங்கள் ஓடி விட்டன. வைரமுத்துவின் குடிசைக்கு இருவர் வந்தனர். தாங்கள் வந்த விஷயத்தை அவனிடமும் அவன் அக்காளிடமும் கூறினர். பின்னர் என்ன? வைரமுத்துவுக்கு நடிப்புத் துறையில் பயிற்சியளிக்கப் பட்டது. வைரமுத்து ஆலன் ஆனான். அவன் நடித்த முதல் படம் வெற்றிகரமாக ஓடியது. பின்னர், பல படங்

களில் நடித்தான். பல மொழிகளில் நடிக்க அவனுக்கு வாய்ப்புகள் வந்தன. ஆலன் இந்தியாவின் சிறந்த குழந்தை நட்சத்திரமானான். அவன் தன் நேர்மையால் உயர்ந்தான்.

அவன் தோளில் ஒரு கை விழுந்தது. அவனுடைய சிந்தனை கலைந்தது. திரும்பினான். அவன் அப்பா தான் அன்போடு அவனைத் தட்டிக் கொடுத்தார்.



அன்றைய செய்தித்தாள்களின் தலைப்புச் செய்தியாக —

''சமீபத்தில் பிடிபட்ட கொள்ளையர் தலைவன் ரங்கா தப்பினான்!'' என்ற செய்தி எல்லோரையும் திடுக்கிட வைத்தது. (உங்களையும் சேர்த்துத்தான்!)

கமிஷனர் ஜோசப் இது பற்றி தீவிர சிந்தனையில் மூழ்கி இருந்த பொழுது —

மகன் டேவிட் உள்ளே வந்தான். ''அப்பா, வாசலில் ஒரு கடிதம் கிடந்தது. உங்கள் பெயருக்கு வந்திருக்கிறது'' என்று கூறிக் கொடுத்தான். ஜோசப் அதைப் பிரித்துப் படித்தார்! அதில்,

கமிஷனருக்கு,

எங்கள் கூட்டத்தைப் பிடிக்கக் காரணமான உங்கள் குடும்பத்தை வேரோடு அழிப்பேன்! அதற்காகத் தான் நான் சிறையிலிருந்து தப்பினேன்; மரணத்தை எதிர்பார்த்திருக்கவும்.

— ரங்கா.

கடிதம் கண்டு அவர் கலங்கவில்லை. அக் கடிதத்தைத் தன் மகன் டேவிட்டிடம் காட்டினார்.

''அப்பா! இந்த மிரட்டலுக்கெல்லாம் பயப்படுபவர் நீங்களா? சரி வாருங்கள். சர்ச்சுக்கு நேரமாகிவிட்டது'' என்றான். இருவரும் மாதா கோயிலை நோக்கிச் சென்றனர்.

தேவாலயத்தில் —

மனம் மெழுகாய் உருக ஜோசப்பும், டேவிட்டும் அந்தக் கொடியவன் ரங்காவை எப்படியாவது மீண்டும் பிடிக்க அருள்புரியும்படி வேண்டினர்!

பிரார்த்தனை முடிந்ததும் —

''அன்புச் சகோதர, சகோதரிகளே! நம் வேண்டுகோளுக்கிணங்க ''எலிசபெத் பதிப்பகம்'' புனித பைபிள் நூலைச் சுருக்கி ''பாக்கெட் புக்'' போல வெளியிட்டுள்ளது. நீங்கள் அனைவரும் இந்நூலை வாங்க வேண்டும் என்பது என் விருப்பம். விலை ரூ 5. விருப்பம் உள்ளவர்கள் என்னிடம் கட்டணம் செலுத்தி நூலைப் பெற்றுக் கொள்ளலாம்'' என்று வெள்ளை உடை தரித்திருந்த பாதிரியார் கூறினார்.

எல்லோரும் அந் நூலை வாங்கினர்!

ஜோசப்பும், டேவிட்டும் ஆளுக்கொன்று வாங்கிக் கொண்டனர்.

டேவிட் தன் சட்டையின் பாக்கெட்டில் அப் புத்தகத்தை வைத்துக் கொண்டான்!

இருவரும் வீதியில் நடந்தனர்!

அவர்களை மறைவாகப் பின் தொடர்ந்தான் ரங்கா மாறுவேடத்தில், துப்பாக்கியுடன்!

ஜோசப் ஒரு பேக்கரியில் பிஸ்கட் வாங்கச் சென்றார்.

இதுவே தக்க சமயம் — அரிய வாய்ப்பு.

அந்த தண்ணீர்த் தொட்டியின் பின்னால் மறைந்து கொண்டு, துப்பாக்கியை எடுத்துக் குறி வைத்தான் ரங்கா, டேவிட்டை நோக்கி! அவ

The following particulars regarding the ownership of 'GOKULAM' the Tamil Monthly newspaper, are published, as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publication: Madras
2. Periodicity of Publication: Monthly
3. Name of Printer: V. Murali
   Nationality: Indian
   Address: AA-117, Shanthi Colony,
   Anna Nagar,
   Madras-600 040
4. Name of Publisher: V. Murali
   Nationality: Indian
   Address: AA-117, Shanthi Colony,
   Anna Nagar,
   Madras-600 040
5. Name of Editor: K. Rajendran
   Nationality: Indian
   Address: 1, Fifth Street,
   Lake Area,
   Nungambakkam,
   Madras-600 034.
6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital: Bharathan Publications Private Limited, 84/1-C, Race Course Road, Guindy, Madras-600 032.

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

V. Murali
Publisher

1.3.1989

மார்புக்கு நேராகக் குறிவைத்தான்!

''டுமீல்'' — ''ஆ! என்ன இது!''— இது டேவிட்டின் உரத்த குரல்.

பிஸ்கட் வாங்கிக் கொண்டு இருந்த ஜோசப் மகனின் குரலைக் கேட்டு, துப்பாக்கிச் சத்தம் வந்த திசை நோக்கிப் பாய்ந்தார்!

ரங்காவின் பின்புறம் சென்று அவன் துப்பாக்கியைப் பறித்து, நான்கு கராத்தே வெட்டுகள் விட்டார்! அவ்வளவுதான்! ரங்கா அடிதாங்க இயலாமல் மயங்கி விழுந்தான்!

அவசரமாக டேவிட் சுடப்பட்ட இடம் வந்து பார்த்த ஜோசப் அதிர்ந்தார்! ஏனெனில், அங்கு ஒரு சொட்டு இரத்தம் கூடச் சிந்தவில்லை! ஏனெனில் டேவிட்டை துப்பாக்கிக் குண்டு ஒன்றும் செய்யவில்லை.

''அப்பா! ரங்கா என் நெஞ்சைக் குறிபார்த்துச் சுட்டான். பாக்கெட்டில் எங்கும் நிறைந்த இறைவனின் புனித பைபிள் புத்தகம் இருந்தது! ரங்கா சுட்ட குண்டு பைபிள் புக் மேலே பட்டதால் எனக்கு ஒன்றும் ஆகவில்லை!'' என்ற மகனை ஆசையுடன் அணைத்துக் கொண்டார் ஜோசப்.

அடுத்த நிமிஷம் ரங்கா கைது செய்யப்பட்டான்.

''தேவா! நீயே பைபிள் புத்தகமாக வந்து என்னைக் காப்பாற்றி விட்டாயே!'' என்று ஜோசப் வாய் மகிழ்ச்சியில் புகழ் மலர்களை அள்ளி வீசியது!

அப்போது —

ஆலயமணி ஒலித்தது! அந்த ஓசை,

''எங்கும் நான் நிறைந்தவன்,
என்னை நம்பினோர் கைவிடப்
படார்.''

என்று இறைவன் கூறுவது போல் இருந்தது.




''பென்சில், ரப்பர், ஸ்லேட்டு, பலப்பம், புத்தகம் எல்லாத்தையும் அடிக்கடி நான் தொலைச்சிடுறேனாம். அதுக்காக எங்க அம்மா செய்த ஏற்பாடு இது.''

— சுதர்ஸன்.

சித்திரப் புதிர்! 34

ஆழி



1 இந்தப் பொருள்கள் யாரை நினைவு படுத்துகின்றன?



2 இது எந்த நாட்டு விமானப் போக்குவரத்தின் சின்னம்?




3 இந்தச் சிற்பம் எந்த நாட்டைச் சேர்ந்தது?



4 மகாராஷ்டிரத்தில் நாகப் பாம்பை பெண்கள் வழிபடும் இந்த விழாவின் பெயர் என்ன?

5 உலகத்திலேயே மிகப்பெரிய மீன் இது. இதன் பெயர் என்ன?



விடை வேறுபக்கம்

தமிழ்நாட்டு முதலமைச்சர்களின் கதை



ஸ்ரீபிரகாசம்

குழந்தைகளே! முன்பு பாரத ஜனாதிபதிகளின் கதையும், பிறகு பிரதமர்களின் கதையும் சொன்னேன் அல்லவா? அப்போதே உங்களில் பலர் 'தமிழ் நாட்டு முதலமைச்சர்களின் கதையை எப்போது சொல்லப் போகிறீர்கள்' என்று கேட்டீர்களே, நினைவிருக்கிறதா? உரிய நேரம் வரட்டும் என்று காத்திருந்தேன். இதோ அந்த நேரம் வந்து விட்டது.

ஆம்! தமிழ் நாட்டில் சட்டசபைத் தேர்தல்கள் முடிந்து, கலைஞர் திரு. மு. கருணாநிதி அவர்கள் புதிய முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ளார்கள். அவருடைய வாழ்க்கை வரலாற்றை இப்போது நாம் பார்க்க வேண்டும். அதற்கு முன், இதுவரையில் நமது தமிழகத்தை ஆண்டுள்ள எல்லா முதலமைச்சர்களைப் பற்றியும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். எனவே, இதோ அவர்கள் கதை— முதலமைச்சர்களின் கதை!

1947 ஆகஸ்ட் 15 ஆம் நாள் விடுதலை பெற்ற நமது நாடு, 1950 ஜனவரி 26 ஆம் நாள் குடியரசாயிற்று. அதற்குப் பிறகுதான் உண்மையான மக்களாட்சி ஏற்பட்டது. எனினும், நாம் விடுதலை பெறுவதற்கு முன்னமேயே, ஆங்கிலேயர்கள் ஆட்சியில் நமது பிரதிநிதிகளுக்கு இடமளிக்கத் தொடங்கி விட்டனர். அது பற்றி முதலில் தெரிந்து கொள்ளுங்கள்.

குடியரசாவதற்கு முன்னால்

ஆங்கிலேயர்கள் 1935—ஆம் ஆண்டு ஒரு சட்டம் கொண்டு வந்தனர். அதன்படி, மத்தியில் கூட்டாட்சியும், மாநிலங்களில் தன்னாட்சியும் வழங்க முடிவு செய்தனர். ஆனால்,



ஓ. பி. ராமசாமி ரெட்டியார்

ஜானகிமணாளன்



பி. எஸ். குமாரசாமி ராஜா

கூட்டாட்சி நடைமுறைக்கு வர வில்லை. மாநிலங்களில் தன்னாட்சி ஏற்படுத்தப்பட்டது. மாநில அமைச் சரவைத் தலைவருக்கு அப்போது 'மாகாணப் பிரதமர்' என்று பெயர். 1936—இல் சென்னை மாகாணப் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வர் யார் தெரியுமா குழந்தைகளே? 'மூதறிஞர் ராஜாஜி' என்று அனை வராலும் அன்புடன் அழைக்கப்படும் சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரி யார்தான்! அவர்தான் தமிழ் நாட்டின் முதல் 'மாகாணப் பிரதமர்' — அதா வது, முதலமைச்சர்!

1950—இல் இந்தியா குடியரசான பிறகும் தமிழ் நாட்டில் பதவியேற்ற முதலாவது தமிழ் நாட்டு முதலமைச் சரும் அவரே! ராஜாஜி 1936—39 ஆண்டுகளில் சென்னை மாகாணப் பிரதமராக இருந்தார். அப்போது, சேலம் உள்ளிட்ட மூன்று மாவட்டங் களில் கள்ளுக் கடைகளை மூடினார். மதுரை, திருச்செங்கோடு போன்ற சிலமுக்கிய ஊர்களின் ஆலயங்களில், தாமே முன்னின்று, 'ஹரிஜன ஆலயப் பிரவேசம்' நடத்தி வைத் தார். சென்னையில், பொது இடத்தி லிருந்து 'நீல்' என்ற கொடியவனான ஆங்கிலேயனின் சிலையை அகற்றி னார். காந்திஜியின் பல நிர்மாணத் திட்டங்களுக்குச் செயல் வடிவம் கொடுத்தார். அப்போது இரண்டாம் உலகப் போர் துவங்கியது. ஆட்சிப் பொறுப்பிலிருந்த காங்கிரஸ் கட்சி யைக் கலந்தாலோசிக்காமலே, ஆங்கில அரசு இந்தியாவைப் போரில் ஈடுபடுத்தியது. அதை எதிர்த்து, எல்லா மாகாணக் காங்கிரஸ் மந்திரி சபைகளும் ராஜினாமா செய்தன. ராஜாஜியும் முதலமைச்சர் பொறுப் பிலிருந்து விலகினார்.


பிற்பாடு, போருக்குப் பின், மீண் டும் மாநில அமைச்சரவைகள் அமைக்கப்பட்டன. அப்போதெல் லாம், சென்னை மாநிலத்தில் ஆந் திரப் பிரதேசமும் சேர்ந்திருந்தது. திரு ஸ்ரீபிரகாசம் சென்னை மாகா ணப் பிரதமரானார் — அதாவது முதலமைச்சர். அவரையடுத்து 1947—49 ஆண்டுகளில் திரு ஓ. பி. ராமசாமி ரெட்டியார் முதலமைச்சரானார். அவர் காலத்தில்தான் நம் நாடு விடு தலை அடைந்தது. பின்னர் 1949—52 ஆண்டுகளில், திரு குமாரசாமி ராஜா முதலமைச்சராக இருந்தார். நம் நாடு குடியரசாக அறிவிக்கப்பட்டதும், இந்தியப் புதிய அரசியல் சட்டப்படி யான முதல் பொதுத் தேர்தல்கள் நடந்ததும் அவருடைய காலத்தில் தான்.

1952 ஆம் ஆண்டு முதலாவது பொதுத் தேர்தல்கள் நடந்தன. ஒரு சட்ட மன்றத்தின் பதவிக் காலம் ஐந்து ஆண்டுகள். இதுவரையில் ஒன்பது பொதுத் தேர்தல்கள் நடந் துள்ளன. சமீபத்தில் நடந்ததுதான் ஒன்பதாவது. இதுவரையில் ஏழு பேர் முதலமைச்சர்களாக இருந்துள் ளனர்.

குடியரசான பிறகு:

திரு சக்கரவர்த்தி ராஜகோபாலாச் சாரியார்:

தமிழ்நாட்டின் முதலாவது முத லமைச்சர். பிறப்பு 1878 டிசம்பர் 10; மறைவு 1972 டிசம்பர் 25. பதவிக் காலம் 1952 — 54. தமிழ்நாடு, ஆந்திரா ஒன்றாக இருந்த காலம். 1952 தேர்தலுக்குப் பின் காங்கிரசுக் குச் சட்டமன்றத்தில் போதிய பலம் இல்லை. இருக்கிற உறுப்பினர்களைக் கொண்டு அமைச்சரவை அமைக்க வேண்டிய கட்டாயம். நிலைமையைச்



சாதுர்யமாகச் சமாளிக்குப் ஒருவர் தேவைப்பட்டார். எனவே, ராஜாஜி அழைக்கப்பட்டார். பதவிக் காலத்தில், பல சிறந்த திட்டங்களை நிறைவேற்றினார். கொத்தடிமைத் தனத்தை ஒழிக்கப் பாடுபட்டார். விவசாயிகளுக்குக் கடன் நிவாரணச் சட்டம் கொண்டு வந்தார். 'ஆறு அவுன்ஸ்' ரேஷன் என்று பரிகசிக்கப்பட்ட நிலைமையைப் போக்கி, தாராளமாக அரிசி கிடைக்க வழி செய்தார். ஆந்திரப் பிரதேசம் தனி மாநிலமாகப் பிரிந்தது. துவக்கக் கல்வியில் சில சீர்திருத்தங்களைக் கொண்டு வர முயன்றார். அதற்குள், காங்கிரஸ் கட்சிக்குள் பிளவுப் போக்கு வளர்ந்தது. எனவே, தானாகவே முன்வந்து, முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார். 1954—இல் நாட்டின் மிக உயர்ந்த குடிமகன் விருதான 'பாரத ரத்னா' விருது பெற்றார். அவ்விருதைப் பெற்ற முதல் நபர் இவரே! பிற்பாடு 'சுதந்திரா' என்ற அரசியல் கட்சியைத் தோற்றுவித்தார். அது சில மாநிலங்களில் ஆட்சியைக் கைப்பற்றியது. ராஜாஜி ஒரு தலை சிறந்த ராஜதந்திரி. பண்பட்ட எழுத்தாளர். ராமாயணம், மகாபாரதம் இரண்டையும் எளிய நடையில் நூலாக்கினார். குட்டிக் கதைகளைக் கூறுவதிலும் எழுதுவதிலும் மிகுந்த கெட்டிக்காரர். நறுக்குத் தெறித்தது போல, அமைதியாக — அதே நேரத்தில், ஆணித்தரமாகப் பேசும் ஆற்றல் மிக்கவர். இவரை 'ராஜாஜி' என்பார்கள்.

திரு. கு. காமராஜ்:

தமிழ் நாட்டின் இரண்டாவது முதலமைச்சர். பிறப்பு 1903 ஜூலை 15; மறைவு 1975 அக்டோபர் 2; பதவிக் காலம் 1954—63. காந்தியவாதி. சிறந்த தேசபக்தர். தன் முயற்சியால் உயர்ந்து எளிமையாக வாழ்ந்தவர். தலைசிறந்த விடுதலைப் போராட்ட வீரர். பல தடவைகள் சிறை சென்றவர். சிறந்த ஜனநாயகவாதி. மக்கள் விருப்பத்துக்குத் தலை வணங்குபவர். ஏழை பங்காளன். கர்மவீரர். கல்வி வளர்ச்சிக்குப் பாடுபட்டார். கிராமம் தோறும் பள்ளிகள் ஏற்படுத்தினார். முதன் முதலாகப் பள்ளிக் குழந்தைகளுக்கு 'மதிய உணவுத் திட்டம்' கொண்டு வந்து செயல்படுத்தினார். பள்ளி இறுதி வகுப்பு வரையில் இலவசக் கல்வியளித்தார். ஆவடி காங்கிரசுக்கு ஏற்பாடுகள் செய்தார். அதில்தான் நேருஜி 'ஜனநாயக சோஷலிசத்தை' வெளியிட்டார். மூத்த தலைவர்கள், இளைஞர்களுக்கு வழி விட்டு, பதவியிலிருந்து விலகும் திட்டம் ஒன்றை, நேருஜிக்கு வகுத்துக் கொடுத்தார்.



அதற்குக் 'காமராஜர் திட்டம்' என்றே பெயர். 1957,62 ஆகிய ஆண்டுகளின் சட்டமன்றத் தேர்தல்களில் வெற்றி வாகை சூடி, மீண்டும் மீண்டும் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற இவர், தாமே முன்னுதாரணமாக விளங்கி, காமராஜர் திட்டத்தின் கீழ் 1963 இல் பதவி விலகினார். பிற்பாடு, அகில இந்திய காங்கிரசின் தலைவரானார். அப்போது, நேருஜிக்குப் பின் லால் பகதூர் சாஸ்திரியும், லால்பகதூருக்குப் பின் இந்திரா காந்தியும், பாரதப் பிரதமர்களாக, எந்தச் சிக்கலும் இன்றி, சுமுகமாகத் தேர்ந்தெடுக்கப் பட வழிவகுத்தவர் இவரே! எனவே இவர் 'கிங் மேக்கர்' **(King Maker)** எனப் போற்றப்பட்டார். அடக்கமானவர். அனுபவ அறிவு மிக்கவர். திருமணம் கூடச் செய்து கொள்ளாமல், நாட்டுக்காக உழைத்த உத்தமப் பெருந்தலைவர்.



திரு. எம். பக்தவத்சலம்:

தமிழ் நாட்டின் மூன்றாவது முதலமைச்சர். பிறப்பு 1897 அக்டோபர் 9; மறைவு 1987 பிப்பிரவரி 12. பதவிக் காலம் 1963–67. விடுதலைப் போராட்ட வீரர். 1936 ராஜாஜி அமைச்சரவையில் உள்ளாட்சித் துறையின் பார்லிமெண்ட் செயலராக ஆனார். அது முதல், தொடர்ந்து, ஸ்ரீபிரகாசம், ஓ. பி. ராமசாமி ரெட்டியார், குமாரசாமி ராஜா, மீண்டும் ராஜாஜி, காமராஜ் ஆகிய எல்லாருடைய அமைச்சரவையிலும் மந்திரிப் பதவி வகித்த ஒரே நபர் என்ற சிறப்புப் பெற்றவர். காமராஜர் பதவி விலகியதும் முதல்வர் ஆனார். பழுத்த அனுபவசாலி. தலைசிறந்த நிருவாகி. பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த போது, கீழ்பவானி அணை அமைப்பு, வைகைத் திட்டம், ஆளியாறு திட்டம், மேட்டூர் கால்வாய்த் திட்டம், மணிமுத்தாறு திட்டம் இப்படிப் பல திட்டங்கள் நிறைவேற உறுதுணையாக நின்றார். நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டம் உருப்பெற உதவினார். கிண்டி தொழிற்பேட்டை அமையத் துணை நின்றார். காதி, கைத்தறி, கிராமக் கைத்தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளித்தார். பல தொழிலாளர் நலச் சட்டங்களைக் கொண்டு வந்தார். தலைசிறந்த பக்திமான். பல திருக்கோயில் திருப்பணிகளை முன்நின்று நடத்தினார். குறிப்பாக, திருவேற்காடு, ஸ்ரீரங்கம், பழநி, திருப்பரங்குன்றம், போன்றவை. திருவெண்காடு, பேட்டைவாய்த்தலை, மதுரை மற்றும் சென்னையில் சிவாச்சாரியார்கள் ஆகமப் பயிற்சி முகாம்களையும், தேவாரப் பள்ளிகளையும் உருவாக்கினார். பழநியில் நாதஸ்வரப் பயிற்சிப் பள்ளி, மகாபலிபுரத்தில் சிற்பக்கலைக் கல்லூரி, மேலும் பல இசைப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளை ஏற்படுத்தினார். எல்லோராலும் 'பெரியவர்' என்றே அழைக்கப்பட்டார்.

திரு. சி. என். அண்ணாதுரை:

தமிழ்நாட்டின் நான்காவது முதலமைச்சர். பிறப்பு: 1909 செப்டம்பர் 15; மறைவு 1969 பிப்ரவரி 2. 1967 தேர்தலில் இவரது தி. மு. கழகம் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றியது. இவர் மேலவை உறுப்பினராகி முதலமைச்சரானார். மக்களால் சுருக்கமாக அன்புடன் 'அறிஞர் அண்ணா' என்றே அழைக்கப்பட்டார். பதவிக்காலம் 1967–69. குறுகிய காலப் பதவி. முதலமைச்சராக இருக்கும் போதே மறைந்த முதலாவது நபர். பல நல்ல சீர்திருத்தங்



களைச் செய்தார். பள்ளிகளில் இரு மொழித் திட்டம் கொண்டு வந்தார். சீர்திருத்தத்திருமணத்தைச் சட்டபூர்வமாக்கினார். சென்னை மாநிலத்துக்குத் 'தமிழ்நாடு' எனப் பெயர் சூட்ட வழி வகுத்தார். தமிழ்ப் பற்று மிக்கவர். சிறந்த பேச்சாளர். 'அடுக்கு மொழி அண்ணா' என்றே பெயர் பெற்றவர். நாடகம் மற்றும் திரைப் படங்கள் மூலம் சீர்திருத்தக் கருத்துக்களை மக்களிடம் புகுத்தியவர். நாடக நடிகரும் கூட. 'தென்னாட்டு பெர்னார்ட்ஷா' எனப்பட்டவர். தமது நாவன்மையால் இளைஞர்களைத் தம் பின்னால் அணிவகுத்துக் கொண்டவர். சென்னையில் 1968 – இல் இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டை நடத்தினார். அவரது இழப்பு, தமிழகத்துக்கு ஈடு செய்ய முடியாத ஒரு பேரிழப்பு!

திரு. மு. கருணாநிதி:

தமிழ்நாட்டின் ஐந்தாவது முதலமைச்சர். பிறப்பு: 1923 ஜூன் 3;



முதலாவது பதவிக் காலம் 1969—76. அண்ணாவின் அருமைத்தம்பி. அவருடைய அமைச்சரவையில் பொதுப் பணித்துறை அமைச்சர். அண்ணாவுக்குப் பிறகு பிப்ரவரி 69—இல் முதலமைச்சர் ஆனார். தமிழ்நாட்டின் சுறுசுறுப்பான முதலமைச்சர் என்று ராஜாஜியால் புகழப்பட்டவர். பிரச்னைகளுக்கு உடனுக்குடன், தயக்கமின்றித் துணிவுடன் முடிவெடுக்கும் பேராற்றல் மிக்கவர். பல சிறந்த நல வாழ்வுத் திட்டங்களைத் தமது ஒவ்வொரு பிறந்த நாளிலும் நிறைவேற்றினார். ஊனமுற்றோர் நல்வாழ்வு, பிச்சைக்காரர் மறுவாழ்வு, பார்வையற்றோருக்குக் கண்ணொளி வழங்கும் திட்டம், கை ரிக்ஷா ஒழிப்புத் திட்டம், முதியோர் ஓய்வூதியத் திட்டம் போன்றவை அவற்றுள் சில. குடிசை மாற்று வாரியம் அமைத்தார். இலவசக் கல்வித் திட்டத்தைக் கல்லூரிப் புகுமுக வகுப்புக்கும் விரிவு படுத்தினார். சென்னையில், வள்ளுவர் கோட்டம், அதில் பளிங்குக் கற்களில் 1330 குறட்பாக்கள், அண்ணா சாலையில் 'அண்ணா மேம்பாலம்,' பூம்புகார் சிலப்பதிகாரக் கூடம் மற்றும் கட்டபொம்மனுக்கு நினைவுக் கோட்டை போன்றவை இவரது சாதனைகளை எடுத்துக்காட்டு. ராஜாஜி, காமராஜர் ஆகியோருக்கு கிண்டியில் நினைவு மண்டபங்களை எழுப்பினார். அண்ணா சமாதியை அழகு படுத்தினார். இப்படி இன்னும் எத்தனையோ சாதனைகள். 1971 தேர்தலிலும் வெற்றிவாகை சூடி மீண்டும் முதலமைச்சரானார். ஆனால் 1976 ஜனவரி 31—ஆம் நாள் இவருடைய ஆட்சி பதவி நீக்கம் செய்யப்பட்டது. அதையடுத்து ஜனாதிபதி ஆட்சி அமல். அப்போது இழந்த முதலமைச்சர் பதவியை இப்போது மீண்டும் பெற்றுள்ளார்.

திரு. எம். ஜி. ராமச்சந்திரன்:

தமிழ்நாட்டின் ஆறாவது முதலமைச்சர். பிறப்பு: 1917 ஜனவரி 17; இறப்பு 1987 டிசம்பர் 24. பதவிக் காலம் 1977 — 87. திரைப்பட நடிகர். அண்ணா வழி நடந்தவர். இறப்பிலும் அவரையே பின்பற்றி விட்டார். ஆம்! பதவியிலிருக்கும் போதே மறைந்த



இரண்டாவது முதலமைச்சர். அண்ணாபெயரில்கட்சியைத்துவக்கி, ஆறே மாதத்தில் இடைத் தேர்தலில் வெற்றிகண்டு, தொடர்ந்து 1977 சட்ட மன்றப் பொதுத் தேர்தலிலும் வெற்றி பெற்று ஆட்சிபீடம் ஏறினார். தொடர்ந்து 80, 84 ஆகிய பொதுத் தேர்தல்களிலும் வெற்றி பெற்றார். மூன்று தடவை வெற்றி பெற்று முதல்வரான ஒரே நபர் என்ற சிறப்புப் பெற்றார். காமராஜரின் மதிய உணவைச் 'சத்துணவாக' விரிவுபடுத்தினார். ஆதரவற்ற முதியோருக்கும் சத்துணவு வழங்க ஏற்பாடு செய்தார். அவர்களுக்கு வேட்டி, புடைவை மற்றும் இலவசப் பயண வசதிகள் செய்து தந்தார். விதவைகளுக்குச் சுய தொழில் வசதி செய்தார். ஏழை மாணவர்களுக்குப் படிப்பு, உதவித் தொகை, இலவசப் புத்தகம், சீருடை மற்றும் காலணி வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தினார். அரசு ஊழியர்களுக்குப் பல சலுகைகளை விரிவுபடுத்தினார். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம், அன்னை தெரசா பெயரில் பெண்களுக்கென்று தனி பல்கலைக் கழகம், தலைவர்கள் பெயரில் பல மாவட்டங்கள் மற்றும் போக்குவரத்துக் கழகங்கள் — இப்படிப் பலவற்றை ஏற்படுத்தினார். தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை அமல்படுத்தினார். பெரும்பாலான கிராமங்களுக்குக் குடிநீர், போக்குவரத்து மற்றும் மின் வசதிகள் செய்து கொடுத்தார். குடிசைகளுக்கு இலவச மின் வசதி, விவசாயிகளுக்குச் சலுகைக் கட்டண மின்சாரம் மற்றும் விவசாயக் கடன் தள்ளுபடி, ஏழைகளுக்குக் குறைந்தசெலவில்வீட்டுவசதி, வேலை கிடைக்காத பட்டதாரிகளுக்கு உதவித் தொகை — இப்படி இன்னும் பல நல் வாழ்வுத் திட்டங்களைக் கொண்டு வந்தார். திறமை மிக்கவர்களை ஊக்கப்படுத்த விருதுகளும் பணமுடிப்பும் வழங்கிச் சிறப்பித்தார். 1984—ஆம் ஆண்டு கடும் நோயினால் பாதிக்கப்பட்டு, நினைவிழந்த நிலையில் அமெரிக்கா எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு உடல் நலம் பெற்று, அங்கிருந்தவாறே இங்கு தேர்தலில் வெற்றி பெற்று, நல்ல ஆரோக்கியத்தோடு திரும்பி வந்து, மீண்டும் தமது பணிகளைத் தொடர்ந்தார். மக்களால் 'புரட்சித் தலைவர்' என்றும் 'பொன்மனச் செம்மல்' என்றும் அழைக்கப்பட்ட இவர், ஒரு நாளிரவு திடீரென மறைந்து விட்டார். இறப்புக்குப் பிறகு இவருக்குப் 'பாரத ரத்னா' விருது வழங்கப்பட்டது.



திருமதி ஜானகி ராமச்சந்திரன்:

தமிழ்நாட்டின்ஏழாவதுமுதலமைச்சர். எம். ஜி. ஆரின் இறப்புக்குப் பின், திரு. இரா. நெடுஞ்செழியன் சில நாட்களுக்கு முதலமைச்சர் பொறுப்பு வகித்தார். பின்னர் திருமதி ஜானகி ராமச்சந்திரன் முதலாவது

பெண் முதலமைச்சர் என்ற பெருமையுடன் பொறுப்பேற்றார். இவர் எம். ஜி. ஆரின் துணைவி. அவர் சார்ந்த கட்சிக்குள் உட்பூசல். எனவே 1988 ஜனவரி 30—ஆம் நாள் தன் பதவியை இழந்தார். ஜனாதிபதி ஆட்சி அமலுக்கு வந்தது.

மீண்டும் கலைஞர் மு. கருணாநிதி:

குழந்தைகளே! அதன் பிறகு கடந்த ஓராண்டாக ஆளுநர் மூலம், தமிழ் நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெற்றது. அதை முடிவுக்குக் கொண்டுவர ஜனவரி 21 — ஆம் நாள், ஒன்பதாவது சட்டமன்றப் பொதுத் தேர்தல் நடந்தது.' அதில் திராவிட முன்னேற்றக் கழகம் 164 இடங்களைப் பெற்றுப் பெரும் வெற்றியை ஈட்டியுள்ளது. எனவே, அதன் தலைவர் கலைஞர் மீண்டும் முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஜனவரி 27 — ஆம் நாள் பதவியேற்றுள்ளார். அன்றுடன் ஜனாதிபதி ஆட்சி முடிவுற்றது.

கலைஞரின் முதல் தேர்தல் கள வெற்றி 1959 — இல். ஆம், குழந்தைகளே! சென்னை மாநகராட்சியைத் தி. மு. கழகத்துக்குக் கைப்பற்றிக் கொடுத்து, அண்ணாவிடமிருந்து, தங்க மோதிரத்தைப் பரிசாகப் பெற்றார். இன்றும் அவர் கையில் அந்த மோதிரம் உள்ளது!

1957, 62, 67, 71, 77 80 மற்றும் 88 சட்டமன்றத் தேர்தல்களில் முறையே, குளித்தலை, தஞ்சாவூர்,



இரு முறை சைதாப்பேட்டை, இரு முறை அண்ணா நகர் மற்றும் தற்போது சென்னைத் துறைமுகம் ஆகிய தொகுதிகளில் போட்டியிட்டுச் சட்டமன்ற உறுப்பினரானார். இப்படி 7 தடவை போட்டியிட்டுத் தொடர்ந்து, தோல்வியே இன்றி, வென்றுள்ள முதல் நபர் — இவர் ஒருவரே!

1983 — இல் இலங்கைப் பிரச்னை தொடர்பாகச் சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தார். பிறகு மேலவை உறுப்பினரானார். எனவே 84 தேர்தலில் போட்டியிடவில்லை. விரைவில் மேலவை ஒழிக்கப்படவே, அப்பதவியையும் இழந்தார். 88 தேர்தலின் போது எந்தவிதப் பதவியிலும் இல்லை. அனைத்தையும் இழந்து விட்டார். ஆனால், எவற்றை இழந்தாலும், இன்று வரை அவர் இழக்காதது தன்னம்பிக்கை, விடா முயற்சி, அயரா; உழைப்பு, தளரா மனத்துணிவு ஆகியவை. இவற்றின் உதவியுடன்தான் அவர், 1976 டிசம்பர் 31 — ஆம் நாள் தாம் இழந்த முதலமைச்சர் பதவியை, 13 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் பெற்றுள்ளார்.

'மாநிலத்தில் சுயாட்சி; மத்தியில் கூட்டாட்சி' — இது அவரது இலக்கு. மேலும், உறவுக்குக் கைகொடுத்து, உரிமைக்குத் துணிந்து, குரல் எழுப்பும் தீரர். அண்ணா வழி நின்று, ஆட்சியில் தமிழுக்கு உரிய இடமளிப்பவர். முத்தமிழ் வித்தகர். நல்ல நாடக நடிகர். தலைசிறந்த திரைப்பட வசன கர்த்தா. உள்ளங்கவரும் பேச்சாளர். அத்துடன் தலைசிறந்த எழுத்தாளர். தமிழ் இவரது நாவில் நர்த்தனம் புரியும். இவரது பேனா வாள்நுனியை விடக் கூர்மையானது. இவர் படைத்த இலக்கியங்கள் ஏராளம். 'நெஞ்சுக்கு நீதி' இவரது சுயசரிதை. 'குறளோவியம்' படைத்தவர். எதிலும், தமக்கென ஒரு பாணியைக் கடைப்பிடிப்பவர். அதைப் பின்பற்றத் தமக்குப் பின்னால் ஓர் அணி அமைத்தவர்! கட்டுக் குலையாமல், தமது கட்சியைக் கட்டிக் காப்பதில், அவருக்கு நிகர் அவரே!

அவரது வெற்றியைப் பாராட்டுவோம். மேலும் மேலும் புகழ் பெற்று, அவர் பல்லாண்டு வாழ வேண்டும் என்று, எல்லாம் வல்ல இறைவனிடம் வேண்டிப் பிரார்த்திப்போம்!



பிள்ளையார் உதவ மாட்டார்!

மணி நாலரை ஆகி விட்டதற்கு அறிகுறியாக அந்தப் பள்ளியின் மணி ஒலிக்கத் துவங்கியது. எட்டாம் வகுப்பு 'அ' பிரிவில் பயின்று கொண்டிருக்கும் கோபு, பள்ளிக் கூடத்தை விட்டு வெளியே வந்தான்.

நாளை அரையாண்டுத் தேர்வு ஆரம்பம். அவனுடைய ஆசிரியர் கூறியிருந்தது அவன் காதுகளில் ரீங் காரமிட்டுக் கொண்டிருந்தது.

"மாணவர்களே, நாளை தொடங் கும் அரையாண்டுத் தேர்வில் முதல் மதிப்பெண் வாங்குபவர்கட்கு, நான் பேனா ஒன்றைப் பரிசாகக் கொடுக்க இருக்கிறேன். எனவே, நன்றாகப் படியுங்கள்" என்று கூறியிருந்தார்.

வீட்டிற்குள் நுழைந்ததும் கை கால் களைக் கழுவிக் கொண்டு, நேராக அம்மாவிடம் சென்று, "அம்மா! அந்த மூலையிலே தேங்காய்கள் இருக்கே, அதிலே ஒன்றை எடுத்துக்கிறேன் அம்மா. பிள்ளையாருக்குச் சிதர் தேங்காய் போட வேண்டும்" என்று கூறி, தான் முதல் ரேங்க் எடுக்க வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்ய இருப்பதாகவும் கூறினான்.

தேங்காயை வாங்கிக் கொண்டு.

வி.சுவாமிநாதன்

பிள்ளையார் கோவிலுக்குச் சென்று, மூன்று முறை வலம் வந்து, சிதர் தேங்காயைப் போடக் கையை ஓங்கியவன், ஏதோ நினைவிற்கு வந்தாற் போலச் சட்டென்று நின்றான்.

'நான் முதல் ரேங்க் எடுக்காமல், சோமு அதிக மதிப்பெண் பெற்று, முதல் ரேங்க் வாங்கி விட்டால் என்ன செய்வது? பரிசு எனக்குக் கிடைக்குமா? கிடைக்காது. சென்ற முறை, காலாண்டுத் தேர்வில் என்னை விட சோமு ஒரு மதிப்பெண் கூடுதலாகப் பெற்று, பரிசைத் தட்டிக் கொண்டு போய் விட்டானே! அந்த மாதிரி விட்டு விடலாமா? கூடாது! அப்படியானால், அவன் முதல் ரேங்க் எடுக்கக் கூடாது'' என்று கண்களை மூடியபடி இரைந்து வேண்டிக் கொண்டு தேங்காயைப் போட்டு உடைத்தான்.

'நல்லவேளை! யாரும் கோவிலில் இல்லை' என்று திரும்பியவன், 'அடே, அங்கே போவது யார்?' கண்ணன்தானே அது? நான் இப்போது வேண்டிக்கொண்டது அவன் காதில் விழுந்திருக்குமோ? சேச்சே, இருக்காது! அவன் சரியாய்க் கவனித்திருக்க மாட்டான்?' என்றெண்ணியவாறு வீட்டிற்குத் திரும்பினான்.

மறுநாள் நடக்க இருக்கும் தேர்வில், சோமு முதல் மதிப்பெண் வாங்கக் கூடாது என்று எண்ணி வேண்டிக்கொண்டானே தவிர, அதிக கவனம் செலுத்திப் படிக்கவில்லை. பிள்ளையார் அருள்புரிவார் என்ற திடமான நம்பிக்கை அவனுக்கு!

வகுப்பறைக்குள் ஆசிரியர் பேனாவுடன் நுழைந்தார். புத்தம் புதிய பேனா. விலை இருபத்து ஐந்து ரூபாய் இருக்கலாம்.

''மாணவர்களே, கோபு அரையாண்டுத் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற காரணத்தால், அவனுக்கு இதைப் பரிசாக அளிக்கின்றேன். கோபு, உடனே வந்து வாங்கிக் கொள்'' என்று கூறினார். கோபு பெருமிதத்தோடு எழுந்தான். அப்போது —

''என்னடா, இன்னும் தூக்கம்!!!! தேர்வுக்கு நேரமாகி விட்டது. எழுந்திரு'' என்று சத்தம் போட்டபடி கோபுவை எழுப்பினாள் அவனுடைய தாய் கமலம்.

''அடடா! கண்டது அத்தனையும் கனவா!'' என்று நினைத்துக் கொண்டு பள்ளிக்குப் புறப்பட்டான்.


இவன் வகுப்பறையை நெருங்குகையில் இரண்டு பேர் வாயிற்படியில் நின்றபடி இரைந்து பேசிக் கொள்ளும் சத்தம் கேட்டது. சோமுவும், கண்ணனும்தான்!

''கண்ணா, நல்ல காரியம் செய்தாய். கோபு ஒரு தேங்காய் உடைத்து, நான் முதல் ரேங்க் வரக் கூடாதுன்னு வேண்டிக்கிட்டதை நீ என்கிட்டே வந்து சொன்னாய். நல்லவேளை, நான் இரண்டு தேங்காய் வாங்கி, கோபு முதல் ரேங்க் வாங்கக் கூடாதுன்னு உடைச்சுட்டேன். பிள்ளையார், ஒரே ஒரு தேங்காய் உடைச்ச அவன் சொன்னதைக் கேட்பாரா, இல்லை, இரண்டு தேங்காய்கள் உடைச்ச என்னுடைய வேண்டுதலை நிறைவேற்றுவாரா? யார் பக்கம் பிள்ளையார்?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டான்.

'திக்'கென்றது கோபுவிற்கு. 'ஐயையோ! என்ன செய்வது இப்போது! நான் முதல் ரேங்க் எடுக்கக் கூடாதென்று இரண்டு தேங்காய்களை, சோமு உடைச்சிருக்கானே', என்று பயப்பட்டான். தேர்வில், அவன் படித்த சில பாடங்கள் மறந்து

சித்திரப்புதிர்: 34
விடை

1. மகாத்மா காந்தி.
2. சவூதி அரேபியா (SAUDI ARABIA)
3. சீனா.
4. நாக பஞ்சமி.
5. சுறா (SHARK)



போய் விட்டன. வெகு சுமாராக எழுதி விட்டு, யாரோடும் பேசாமல் வீட்டிற்கு வந்தான்.

ஒரு வாரம் சென்றது. வகுப்பறைக்குள் ஆசிரியர் நுழைந்தார். அவரை நிமிர்ந்து பார்க்காமல், தலை குனிந்தபடியிருந்தான் கோபு.

"கோபு" என்று கனிவாகக் கூப்பிட்டார் ஆசிரியர். "என்ன ஐயா" என்று மெதுவாக எழுந்து நின்றான்.

"கோபு, போன தடவை இரண்டாவது ரேங்க் எடுத்திருந்தாய். இப்போ, ஐந்தாவது ரேங்க்கிற்குப் போய் விட்டாயே! ஏன், சரியாகப் படிக்கவில்லையா?" என்று வினவினார்.

இனி மேலும், இவரிடம் மறைக்கலாகாது என்று எண்ணிய கோபு, "ஐயா, சோமுதான் நான் முதல் ரேங்க் எடுக்கக் கூடாதென்று இரண்டு தேங்காய்களை, பிள்ளையாருக்கு உடைத்திருக்கிறான். அதனால்தான் நான் இரண்டாவது ரேங்க்கூட எடுக்க முடியவில்லை" என்று வருத்தம் தோய்ந்த குரலில் கூறினான்.

"அப்படியா? அது சரி, சோமு முதலில் வரக் கூடாதென்று நீ ஒரு தேங்காய் உடைத்தாயே! அதற்குப் பலன் என்னவாயிற்று? உனக்குத் தெரியுமா? சோமுதான் இப்போதும் முதல் ரேங்க்" என்று சிரித்தவாறே கூறினார்.

'ஆசிரியருக்குத் தெரியாது என்று நினைத்திருந்தோமே! எப்படி அவருக்குத் தெரியும்? பேசாமல் மன்னிப்புக் கேட்டு விட வேண்டியதுதான்' என்று நினைத்து,

"ஐயா, என்னை மன்னித்து விடுங்கள்" என்றான்.

"கோபு, நீ அந்த மாதிரி செய்தாய் என்று கண்ணன் என்னிடம் கூறினான். அதனால்தான் சோமுவையும், கண்ணனையும் அவ்வாறு உன் காதில் விழும்படி பேசிக் கொள்ளச் சொன்னேன். உண்மையில், சோமு ஒரு தேங்காய்கூட உடைக்கவில்லை" என்றார்.

"உண்மையாகவா! அப்படியானால், நான் ஏன் மதிப்பெண் குறைவாக எடுத்தேன் என்று தெரியவில்லையே!"

"கோபு, அடுத்தவன் கெட்டுப்

பறக்கும் பலூன்கள்!



இந்தியாவில் பலூனிங் கிளப்பை 1970 நவம்பரில் அங்குரார்ப்பணம் செய்து வைத்தவர் விண்வெளி விஞ்ஞானி நீல் ஆம்ஸ்டிராங். முதன் முதலில் சூடான காற்று அடைக்கப்பட்ட பலூன் பறக்கும் லைசென்ஸ் அமெரிக்காவிலுள்ள லிவர்மோரில் விஸ்வபந்து குப்தாவுக்கு வழங்கப்பட்டது!

1973—ம் ஆண்டு பிப்ரவரியில் விஸ்வபந்து குப்தா முதல் உலக சூடான காற்று பலூன் சாம்பியன் போட்டியில் கலந்து கொண்டார்! 1973—ம் ஆண்டு அக்டோபரில்தான் முதல் இந்திய சூடான காற்று பலூன் 'உதான் கட்டோலா' உருவாக்கப்பட்டு, புதுதில்லியிலுள்ள சப்தர்ஜங் விமான நிலையத்தில் வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டுப் பறக்க விடப் பட்டது!

இந்தியாவில் லே பகுதியிலிருந்து கன்யாகுமரி வரை இந்திய இரண்டாவது சூடான காற்று பலூன் பயணம் தொடங்கப்பட்டது. சென்னை ராஜரத்தினம் ஸ்டேடியத்தில் ஜனவரி 24—ந் தேதி விமானி விஸ்வபந்து குப்தா சூடான காற்று பலூனில் பரிசோதனையாகப் பறந்து சென்று ரசிகர்களை மெய்சிலிர்க்க வைத்தார்! விலை இரண்டு லக்ஷம் ரூபாய்! ஸ்நைலான நைலான் இழையில் தயாரான சூடான காற்று பலூன் 'இந்திர தனுசு' பறந்து சென்றதைப் பார்த்து அதிசயித்தனர் சென்னை மக்கள். நேருஜி நூற்றாண்டு விழாவில் இந்தப் பலூன் பயணத்தினால் இந்திய மக்களை ஒருங்கிணைத்து விடலாம் என்ற நம்பிக்கையில் தொடங்கப்பட்டது இந்தப் பயணம். லடாக் பகுதியிலிருந்து கன்யாகுமரி வரை முப்பத்தோரு நாட்கள் ஐயாயிரம் கிலோ மீட்டர் தூரம் இந்தப் பலூன் பயணம் நடைபெற்றிருக்கிறது! இந்தப் பலூன் பயணத்தை 1783—ம் ஆண்டில் மாண்ட் கோல்ஃபினர் சகோதரர்கள் தொடங்கி வைத்திருக்கிறார்கள்! இந்திய டுபாக்கோ கம்பெனி இந்த அதிசய விளையாட்டுக்களுக்கு 'ஸ்பான்சர்' செய்து உதவியுள்ளது!

— பி. எஸ். எம்.


போக வேண்டும் என்று வேண்டிக் கொண்டால், எந்தத் தெய்வமும் காது கொடுத்துக் கேட்காது. நீ முன்னேற வேண்டும், முதல் ரேங்க் வாங்க வேண்டும் என்று வேண்டிக் கொள்வதோடு, நன்றாகப் படிக்கவும் வேண்டும். அதை விட்டு விட்டு மற்றவர் முன்னேறக் கூடாது என்று வேண்டிக் கொள்ளலாமா? இப்படிக் கேடு நினைக்கும் உன் வேண்டுகோளைப் பிள்ளையார் கேட்பாரா? அதனால்தான், நீ படித்த, எளிய, சில கேள்விகளுக்குக்கூடப் பதில் எழுத முடியவில்லை'' என்று கூறினார்.

உண்மையை உணர்ந்த கோபு,

''ஐயா, என்னை மன்னித்து விடுங்கள், நன்றாகப் படித்து அடுத்த முறை முதல் ரேங்க் எடுக்க முயற்சி செய்கிறேன்'' என்று கூறினான்.

டாக்டர் பக்கம்...

விக்கலை நிறுத்த வழி?



டாக்டர். கு. கணேசன்

வாருங்கள். உங்களுக்கு இரண்டு புதிய நண்பர்களை அறிமுகப்படுத்துகிறேன்.

இவன் — அருண்!

இவள் — தீபா!

இருவரும் எட்டாம் வகுப்பில் படிக்கிறார்கள். எதிர்த்த தெருவில் வசிக்கிறார்கள். விடுமுறை தினங்களில் என்னைச் சந்திக்க வருவார்கள். அறிவியல் விஷயங்களை அலசுவார்கள். மருத்துவத்தைத் தெரிந்து கொள்வதில் அதிக ஆர்வம் காட்டுவார்கள்.

இன்று நடக்கும் எங்கள் சந்திப்பை நீங்களும் கொஞ்சம் கவனியுங்களேன்!

அருண், தீபா இருவரும்: வணக்கம், டாக்டர்!

நான்: வணக்கம், நலமாக இருக்கிறீர்களா?

இருவரும்: நலம்தான், டாக்டர்!

நான்: பொங்கல் திருநாளை எப்படிக் கொண்டாடினீர்கள்?

தீபா: புத்தாடை அணிந்து, பட்டாசு வெடித்து, பொங்கலைச் சுவைத்து... மிக மிக இனிமையாகக் கொண்டாடினோம், டாக்டர்!


நான்: மிக்க மகிழ்ச்சி, குழந்தைகளே!

அருண்: டாக்டர், பொங்கல் என்றதும்தான் எனக்கு அது நினைவுக்கு வருகிறது. பொங்கலன்று எனக்கு அடிக்கடி விக்கல் வந்து கொண்டே இருந்தது, டாக்டர். சாதாரணமாக எனக்கு விக்கல் வந்தால் இரண்டு நிமிடங்களில் நின்றுவிடும். ஆனால், அன்று காலையில் ஆரம்பித்த விக்கல் மாலை வரை விட்டு விட்டு வந்து கொண்டே இருந்தது. சரியான தொந்தரவாகப் போய் விட்டது... ஏன் டாக்டர், விக்கல் என்பது என்ன? அதைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்.

நான்: அருண், விக்கல் என்பது ஒரு சாதாரணக் குறைபாடு. குழந்தைகள் முதல் வயது முதிர்ந்தோர் வரை அனைவருக்குமே வரக் கூடியது. அதனால், பயம் ஒன்றுமில்லை.

தீபா: விக்கல் ஒரு நோயா, டாக்டர்?

நான்: இல்லை தீபா! விக்கல் என்பது நோயல்ல.



அருண்: விக்கல் எப்படி வருகிறது டாக்டர்? விக்கலின் போது ஒருவித சத்தம் வருகிறதே, ஏன்?

நான்: குழந்தைகளே, விக்கல் எப்படி வருகிறது என்பதை உங்களுக்குச் சற்று விளக்கமாகவே சொல்கிறேன். கேளுங்கள்.

சாதாரணமாக நாம் சுவாசிக்கும் போது மூச்சை உள் இழுக்கிறோம். அப்பொழுது மார்புத் தசைகள் விரிகின்றன. அதே போல மார்புக்கும் வயிற்றுக்கும் இடையே உள்ள உதர விதானமும் **(DIAPHRAGM)** விரிவடைகிறது. அடித்தொண்டை **(Vocal Cords)** திறக்கிறது. மார்புக்குள் காற்றின் அழுத்தம் குறைகிறது. அதே சமயம் மார்புக்குள் காற்று உட்செல்ல அதிக இடைவெளி கிடைக்கிறது. இதனால் வெளிக்காற்று, திறந்த அடித்தொண்டை வழியாகச் சுவாசப் பைக்குள் எளிதாக நுழைந்து விடுகிறது.

ஆனால் சில சமயங்களில் உதர விதானம் சுருங்கி விடுகிறது. அடித்தொண்டையும் சரிவரத் திறவாத நிலையில் இருக்கிறது. இம் மாதிரிச் சமயங்களில் நாம் சுவாசிக்கும் போது உள் இழுக்கப்படும் காற்று, குறுகிய இடைவெளியில் நுழைய வேண்டியதிருக்கிறது. அப்போது அக் காற்று ஒருவித சத்தத்தை ஏற்படுத்துகிறது. அதைத்தான் நாம் 'விக்கல்' **(HICCUP)** என்கிறோம்.

தீபா: டாக்டர், விக்கல் வருவதற்கும் ஏதேனும் காரணங்கள் இருக்குமல்லவா? அதையும் எங்களுக்குச் சொல்லுங்கள், டாக்டர்!

நான்: சொல்கிறேன், தீபா! விக்கல் வருவதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றில் சாதாரணமாக வரக்கூடிய காரணங்களை முதலில் சொல்கிறேன்; கேட்கிறீர்களா?

அவசர அவசரமாக உணவு சாப்பிட்டால் விக்கல் வரும்.

அளவுக்கு அதிகமாக உணவு சாப்பிட்டாலும் விக்கல் வரும்.

சூடான உணவுகளை உட்கொண்டு விட்டு, தேவையான அளவு தண்ணீர் சாப்பிடா விட்டாலும் விக்கல் வரும்.

இவை தவிர உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் சில மோசமான நோய்களின் அறிகுறியாகவும் விக்கல் வரலாம். ஆனால், அவையெல்லாம் உங்களை மாதிரிச் சிறுவர்களுக்கு வருவதில்லை. பெரியவர்களுக்கு மட்டுமே அந் நோய்களினால் விக்கல் வரக்கூடும்.

அருண்: டாக்டர், நாங்களும் ஒரு காலத்தில் பெரியவர்களாக வளரத் தானே போகிறோம்! அதனால், அந் நோய்களையும் நாங்கள் தெரிந்து கொள்கிறோமே!

நான்: சரி அருண், நீ விரும்புவதால் அவற்றையும் சொல்கிறேன்; கேள். மூளைக் காய்ச்சல், மூளை உறைக் காய்ச்சல், மூளையில் கட்டி, சிறுநீரக நோய், ஈரல் நோய், நீரிழிவு நோய், குடல் அடைப்பு, உணவுக் குழாயிலும் சுவாசக் குழாயிலும் புற்று நோய் வருதல் போன்ற கொடிய நோய்களின் அறிகுறியாகவும் விக்கல் வரலாம். சில பேருக்கு மனநோய் காரணமாகவும் விக்கல் வரும்.

தீபா: டாக்டர், சாதாரணமாக வரக்கூடிய விக்கலுக்கும், இம்மாதிரி மோசமான நோய்களினால் வரக்கூடிய விக்கலுக்கும் எப்படி வித்தியாசம் கண்டுபிடிப்பது?

நான்: தீபா.... சாதாரண விக்கல்

யாருக்கு வேண்டுமானாலும் வர லாம். மேற்சொன்ன மோசமான நோய்கள் வயது முதிர்ந்தோருக்கே வரும். இது தவிர சாதாரணமான விக்கல், சில நிமிடங்களில் தானா கவே நின்று விடும். ஆனால், நோய் களின் மூலமாக வரும் விக்கல், நாள் கணக்கில் நீடிக்கலாம். நோய் தீரும் போதுதான் அவர்களுக்கு விக்கலும் தீரும்!

அருண்: சரி டாக்டர். விக்கல் என் பது சாதாரணக் குறைபாடு என்று சொன்னீர்கள், அது கேட்டு எங் களுக்குச் சந்தோஷமே! ஆனால் சில சமயங்களில் நாங்கள் படித்துக் கொண்டிருக்கும்போதோ, பேசிக் கொண்டிருக்கும்போதோ விக்கல் வந்து விட்டால் அது பெரிய தொந் தரவாகத் தெரிகிறது எங்களுக்கு. அதனால் விக்கலை நிறுத்த என்ன வழிகள் என்பதை எங்களுக்குச் சொன்னால் உபயோகமாக இருக் கும்...



நான்: அருண்! விக்கலை நிறுத்து வதற்கு எளிய வழிகள் பல உள்ளன. அவற்றையும் உங்களுக்குச் சொல் கிறேன். கவனமாகக் கேளுங்கள். விக்கலை நிறுத்த முதல் வழி ஒரு பெரிய தம்ளர் நிறையக் குளிர்ந்த தண்ணீரை எடுத்துக் கொண்டு, அதை மெதுவாகவும், சிறிது சிறிதா கவும் சாப்பிட்டால் விக்கல் நின்று விடும்.

இரண்டாவது வழி கற்கண்டுக் கட்டி அல்லது வெல்லக் கட்டி ஒன்றை வாயில் அடக்கி, சிறிது சிறிதாக உமிழ்நீரைக் கூட்டி விழுங் கினால் விக்கல் நின்று விடும். சில சமயம் ஐஸ் சாப்பிட்டாலும் விக்கல் நிற்க வாய்ப்புண்டு. மூக்கில் திரியை நுழைத்து, தும்மலை உண்டாக்கினால் விக்கல் நிற்கும். விக்கலை நிறுத்த இன்னொரு வழி, நன்றாக மூச்சை உள்ளிழுத்துக் கொள்ள வேண்டும். சில விநாடிகள் வரைக்கும் மூச்சை வெளியேவிடாமல்அடக்கிக்கொள்ள வேண்டும். பிறகு, சிறிது சிறிதாக மூச்சை வெளியில் விட வேண்டும். இம்மாதிரி 10 தடவைகள் செய்தால் விக்கல் நின்று விடும். விக்கலை நிறுத்த மற்றொரு வழி ஒரு காகிதப் பையினுள் மூச்சை விட வேண்டும். பின்பு, அதையே சுவாசிக்கவும் வேண்டும். இவ்வாறு பலமுறை செய் தால், கரியமில வாயுவின் அளவு நுரையீரலில் அதிகமாகும். அந்த அளவுக்கு அதிகமான கரியமில வாயு விற்கு விக்கலை நிறுத்தும் திறனுண்டு. அதனால், விக்கல் நிற்கும். இத்தனை வழிகளில் ஏதேனும் ஒன்றைக் கை யாண்டு, விக்கலை நிறுத்தி விடலாம் இல்லையா?


தீபா: எனக்கு ஒரு சந்தேகம் டாக்டர். அடிக்கடி விக்கல் வந்தால், நம் உறவினர்கள் நம்மை நினைக் கிறார்கள் என்று என் பாட்டி சொல் லுவாள். அது உண்மையா டாக்டர்?

நான்: உண்மையில்லை தீபா! விக்கலுக்கும், உறவினர்கள் நினைப் பதற்கும் சம்பந்தம் இல்லை!

அருண், தீபா இருவரும்: நன்றி டாக்டர். விக்கலைப் பற்றி எங்களுக் குத் தெரியாத பல புது விஷயங்களைச் சொன்னீர்கள். எங்களுக்கு மிகவும் உபயோகமாக இருந்தது. மீண்டும் நன்றி, டாக்டர். நாங்கள் வருகி றோம்.


புஸ் புஸ் டவுன் பஸ்!

-தஞ்சை மாலா



ஆஸ்திரியக் கதை

மலைச்சரிவு மந்திரவாதி



தமிழில்: சந்திரநாத்

(முன் இதழ் தொடர்ச்சி)

ரூபின் செய்து பார்த்த பரீட்சைகள் வெகு சுலபமாகக் கைகூடி வந்தன.

ஆனால், ஒருநாள் அவன் யாருமில்லை என்று நினைத்து ஒரு மந்திரத்தைத் திரும்பத் திரும்ப உச்சரித்துப் பார்த்துக் கொண்டிருந்த போது, கிழவன் பின்புறமாக வந்து விட்டான்! அவன் காதில் மந்திர வார்த்தை விழுந்து விட்டது!

''அடே, திருட்டுப் பயலே'' என்று கோபத்தில் கத்தினான் கிழவன் டூவி. ''ஏமாற்றி விட்டாயே, என்னை! என் புத்தகங்களை எல்லாம் எனக்குத் தெரியாமல் படித்து விட்டாய். படிக்கத் தெரியாது என்று நீ சொன்னது வடிகட்டின பொய்'' என்று கத்தினான்.

ரூபின் திடுக்கிட்டுப் பேசத் தெரியாமல் நின்றான்.

''முட்டாள் பையா. இந்தக் கிழவனையா ஏமாற்றி விடலாம் என்று நினைத்தாய்? நீ கற்றதை எல்லாம் உபயோகிக்கச் சந்தர்ப்பமே இல்லாமல் செய்து விடுகிறேன், பார்.''

கிழவன் ஒரு தாவுத் தாவி மண்டையோட்டு அறைக்குள் போனான். அடுத்த கணம் ஒரு மந்திரக் கோலுடன் திரும்பி வந்தான்.

''உன்னை எரித்துச் சாம்பலாக்கி விடுகிறேன் பார்'' என்று கூவிக் கொண்டே மந்திரக் கோலைத் தூக்கினான்.

ரூபின் இதை எதிர்பார்த்து உஷாராக இருந்தான். கிழவனின் மந்திரக் கோல் சுழல்வதற்கு முன்னாலேயே அவன் வேறொரு மந்திரத்தை உச்சரித்து ஓர் அழகான புறாவாக மாறி, 'விருட்'டென்று ஜன்னல் வழியாக வெளியே பறந்தான்.

''ஓ, அப்படியா விஷயம்?'' என்று கத்தினான் கிழவன். ''நீ உலகின் எந்த மூலைக்குச் சென்றாலும் உன்னை நான் விட மாட்டேன்! பார் என் கைவரிசையை'' என்று கொதித்து எழுந்தான்.

அடுத்த கணம் அவன் ஒரு பருந்தாகத் தன்னை மாற்றிக் கொண்டான். புறாவைத் துரத்திக் கொண்டு வானத்தில் பறந்தான்.

புறா மிக வேகமாகப் பறந்தது. பருந்தும் விடாமல் மூச்சிறைக்க அதைத் துரத்தியது.

பல மைல் தூரம் இந்த வேட்டை நடந்தது. கடைசியில் புறாவின் இறக்கைகள் சோர்வடைந்து விட்டன. அதன் வேகம் குறைந்தது.

''அகப்பட்டுக் கொண்டான்,

மோசடிப் பையன்'' என்றவாறே, அதற்கு மேலே பறந்த பருந்து, அதைக் கொத்தக் கீழ் நோக்கிப் பாய்ந்தது.

அப்போது அவை' இரண்டும், முன்பு ரூபின் பார்த்த அந்தப் பெரிய அரண்மனையின் விசாலமான தோட்டத்தின் மீது பறந்து கொண்டிருந்தன.

தோட்டத்தில் எங்கே பார்த்தாலும் பெரிய பெரிய பூக்கள் பூத்துக் குலுங்கின. பச்சைப்பசேல் என்று புல் விரித்துக் கிடந்தது.

அந்தப் புல்வெளியின் நடுவில் ஒரு அழகான பளிங்குத் தடாகம் இருந்தது.

அதன் கரையிலிருந்த சிறு மேடையில் ஓர் அழகான இளம் பெண் சோகமாக உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

அவள் தடாகத்துத் தண்ணீரையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''கடவுளே, என்னை வந்து கல்யாணம் செய்து கொண்டு, இந்த நரகத்திலிருந்து மீட்கப் போகிறவனின் முகத்தை எனக்கு இந்த தண்ணீரில் காட்டு'' என்று அவள் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாள்.

அவள் கண்களிலிருந்து நீர் முத்து முத்தாக விழுந்து அவள் மடியை நனைத்துக் கொண்டிருந்தது.


அவள் அந்த நாட்டின் இளவரசி. ராஜாவுக்கும் ராணிக்கும் செல்லப் பெண்ணாக இருந்தவள்.

திடீரென்று அவள் அம்மா இறந்து விட்டாள். அவளுடைய அப்பா இன்னொரு கல்யாணம் செய்து கொண்டார்.

வந்த சித்திக்கு ஏனோ இளவரசியைக் கண்டாலே பிடிக்கவில்லை. அவள் தந்திரமாக,தன் அழகால் மன்னனை மயக்கி தன் கைக்குள் போட்டுக் கொண்டாள்.

ராஜாவுக்கு அவள் ஒரு காட்டு இலையைச் சுருட்டிச் சுருட்டிக் கொடுத்தாள். மன்னன் அதில் புகைபிடிக்க ஆரம்பித்தான். அது அவனை எப்போதும் மயங்கிய நிலையிலேயே வைத்திருக்கும்.

அவன் தன் அருமை மகளையே



மறந்து போனான். இளைய ராணி, இளவரசியை அரண்மனையிலிருந்து இந்தத் தோட்டத்திற்குக் கொண்டு வந்தாள். இதில் உள்ள சிறு வீட்டில் வைத்து, தோட்டத்தின் கதவுகளை மூடி விட்டாள்.

சாப்பாடு கொண்டு வருகிற பணிப் பெண்கள் தவிர, வேறு யாரையும் அவள் சந்திக்க முடியாமல் போயிற்று.

''என்னைச் சிறையிலிருந்து விடுவிக்க யார் வருவார்கள்?'' என்று ஏங்கிய வண்ணம் அவள் நாட்களைக் கழித்து வந்தாள்.

இந்தத் தடாகம்தான் அவளுக்குத் தோழி. இதன் கரையிலேயே எப்போதும் உட்கார்ந்து கண்ணீர் விட்டுக் கொண்டிருப்பாள்.

இன்று அவள் அப்படி உட்கார்ந்திருந்த போதுதான் அவள் தலைக்கு மேலே புறாவின் மீது பருந்து பாய்ந்தது.

ரூபின் சட்டென்று நகர்ந்து பருந்தின் மூக்கின் தாக்குதலிலிருந்து தப்பித்துக் கொண்டு, தான் படித்த இன்னொரு மந்திரத்தைச் சொன்னான்.

அடுத்த கணம் அந்த மந்திரத்தின் மகிமையால் அவன் ஒரு சிறு தங்க மோதிரமாக மாறி இளவரசியின் மடியில் விழுந்தான்.

இளவரசி திடுக்கிட்டு, சுற்று முற்றும் பார்த்து விட்டு, அதை எடுத்து விரலில் அணிந்து கொண்டாள்.

ஆகாசத்திலே அந்த மந்திரவாதிப் பருந்து இதைக் கண்டு தன் பெரிய சிறகுகளை ஆத்திரத்துடன் வேகமாக அடித்தது; கோரமாகக் கத்தியது.

இளவரசியின் விரலில் ஏறி விட்ட மோதிரத்தைக் கொத்திப் பிடுங்க வழி தெரியாமல் தவித்தது. சிறிது நேரம் யோசித்த பின், அவன் ஓர் அழகான ராஜகுமாரனாக மாறி, இளவரசியின் முன் போய் நின்றான்.

''அழகுக்கும் புத்திசாலித்தனத்திற்கும் பெயர் போன பொன் வண்ண இளவரசியே, வணக்கம்'' என்று குனிந்து வணங்கினான், மந்திரவாதி.

இளவரசிக்கு ஒரே ஆச்சரியம். இவ்வளவு கட்டுக் காவல் உள்ள இடத்தில் இந்த ராஜகுமாரன் எப்படி வந்தான்? என்று அவளுக்கு வியப்பாக இருந்தது.

'ஒருவேளை என்னை மீட்க கடவுளே இவனை இங்கே அனுப்பியிருக்கிறாரோ?' என்று அவள் நினைத்தாள்.

மந்திரவாதி டூவி, அவள் முகத்தைப் பார்த்தே அவள் நினைப்பதைப் புரிந்து கொண்டு விட்டான்.

''பேரழகியான இளவரசியே, உன் துன்பங்களை எல்லாம் ஒரு நொடியில் போக்கி, உன்னை இந்த நாட்டின் மகாராணியாகவே செய்து விடுகிறேன். எனக்கு நீ என்ன தருவாய்?'' என்று கேட்டான்.

அவனுடைய வார்த்தைகளில் அன்பே இல்லாதது இளவரசிக்கு அவனிடம் வெறுப்பை ஏற்படுத்தியது. பொய் பேசுகிற ஒரு மோசக்கார வியாபாரி மாதிரி அவன் நடந்து கொள்வது இளவரசிக்குப் பிடிக்கவில்லை.

இருந்தாலும் இவன் மனசைத் தெரிந்து கொள்வோம் என்று தீர்மானித்து, ''என்ன வேண்டும், உனக்கு?'' என்று கேட்டாள்.

''உன் கையிலே இருக்கிற அந்த மோதிரம் வேண்டும்!'' என்றான் மந்திரவாதி.

''ஐயோ, இதற்காகத்தான் எனக்கு உதவ வருகிறானா? என் மீது உள்ள அன்பினால் இல்லையா?'' என்று ஆத்திரமாக வந்தது இளவரசிக்கு.

''முடியாது. அதைத் தரவே மாட்டேன். கடவுள் எனக்கு அளித்த பரிசு அது'' என்றாள் இளவரசி.

இனி அவள் மசிய மாட்டாள் என்று தெரிந்து விட்டது டூவிக்கு. உடனே அவன் தன் பழைய நிஜ உருவத்தை எடுத்துக் கொண்டான்.

அடுத்த கணம், கூரிய மூக்கும் கழுகுக் கண்களும், பாம்பு போல் நகங்கள் நீண்ட கைகளும், இறகுத் தொப்பியும் அணிந்த பழைய மந்திரவாதியாகி விட்டான்!

''ஏய், சின்னக் குட்டி? தெரிகிறதா என்னை?'' என்று உறுமினான் டூவி



"அதோ அந்த மலையிலே, அந்த வீட்டிலே வசிக்கிறேன். மலைச் சரிவு மந்திரவாதி என்றால் உலகம் முழுவதற்கும் தெரியும். கோபம் வந்து விட்டால் நான் என்ன செய்வேன் என்று எனக்குத் தெரியாது. என்னிடம் விளையாடாதே. அந்த மோதிரத்தைக் கழற்றிக் கொடுத்து விடு" என்றான்.

"மாட்டேன்" என்றாள் இளவரசி. "நீ யாராக இருந்தாலும் எனக்குக் கவலை இல்லை. உன் மோதிரமா இது? நீயா ஆகாசத்திலிருந்து என் மடியில் போட்டாய். போ, போ!" என்றாள்.

"ஓஹோ, அப்படியா?" என்று உறுமினான் மந்திரவாதி டூவி. தன் மந்திரக் கழியை எடுத்தான். மூன்று தடவை அவள் முகத்திற்கு எதிரே சுற்றினான். பிறகு மோதிரத்திற்கு நேராக அதை நீட்டினான்.

அடுத்த கணம், அந்த மோதிரம் ஒரு சிறு மணி தானியமாக மாறி அவள் கையிலிருந்து நழுவித் தரையில் உருண்டது.

மந்திரவாதி தன்னை ஒரு கோழியாக மாற்றிக் கொண்டு உருண்டோடும் தானியத்தை நோக்கிப் பாய்ந்தான்.

ஆனால், அதற்குள் இளவரசி தன் பாவாடையை அந்தத் தானியத்தின் மீது விரித்து அதைப் போர்த்திக் கொண்டு, கோழியைத் துரத்தினாள்.

கோழி தூர நின்று ஒரு பெரிய கத்தல் கத்தியது. இறகுகளைக் கோபத்துடன் படபடவென்று அடித்து எகிறிக் குதித்தது.

பிறகு, அது ஒரு சுண்டெலியாக மாறி அவள் காலடியை நோக்கி ஓடி வந்தது.

இளவரசிக்கு சுண்டெலி என்றால் ரொம்ப பயம். அவள் தானியத்தைக் கூட மறந்து விட்டாள். 'ஐயோ, சுண்டெலி' என்று கூவிக் கொண்டு, பக்கத்துத் தடாகச் சுவர் மீது ஏறி நின்று கொண்டு விட்டாள்.

ஆனால், எலி அவள் நின்ற இடத்தை நோக்கிப் பாய்ந்த அதே கணம், தானியமும் ஏதோ மந்திரம் போட்டுக் கொண்டு, மறைந்து வி



டது.

தானியத்தைக் காணாமல் எலி திகைத்துத் தவித்தது. அப்போது தானியம் ஒரு வெள்ளைப் பூனையாக மாறி எங்கிருந்தோ பாய்ந்து வந்து எலி மீது பாய்ந்து கண் மூடித் திறப்பதற்குள் அதைக் குதறிக் கொன்று விட்டது.

எலி இறந்து விழுந்ததும், பூனையும் மறைந்தது. பூனை இருந்த இடத்தில் ரூபின் அழகிய இளைஞனாக நின்றான்.

இளவரசி அவனை ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

ரூபின் அவளை இடுப்பளவு குனிந்து வணங்கினான்.

"இளவரசியே, உனக்கு எப்படி நன்றி சொல்வது என்றே தெரியவில்லை. நீ என்னை இந்தத் துஷ்டனிடமிருந்து காப்பாற்ற அரும்பாடு பட்டாய்" என்றான்.

இளவரசி, இவன்தான் புறாவாகவும் மோதிரமாகவும் இருந்தவன் என்பதைப் புரிந்து கொண்டாள்.

அவனுடைய பணிவு, மென்மை, தோற்றம் எல்லாம் அவளுக்குப் பிடித்து விட்டது.

ரூபின், தன் கதையை எல்லாம் அவளிடம் சொன்னான். அதை எல்லாம் கேட்ட அவள் அவனையே மணக்க முடிவு செய்தாள்.

ரூபின், "நானும் உன்னை உன் எதிரிகளிடமிருந்து காப்பாற்றுவேன்" என்றான்.

அவன், தான் கற்ற மந்திரங்களைப் பிரயோகித்து இளவரசியின் சித்தியை நாட்டை விட்டே விரட்டினான். நோயுற்றுப் படுத்த படுக்கையாகக் கிடந்த அவளுடைய தந்தையைக் குணப்படுத்தினான்.

அவர் அவனுக்கு இளவரசியை மணம் செய்து கொடுத்தார். அவன் அந்த நாட்டிற்கே அரசனானான். வீரர்களை அனுப்பி, தன் பெற்றோர்களை அழைத்து வரச் செய்து, தன்னுடன் வைத்துக் கொண்டான். சந்தோஷமாக வாழ்ந்தான்.

அவன் அரசனானதும் இட்ட முதல் உத்தரவு: "இனி எவரும் காட்டிலுள்ள எந்த மரத்தையும் வெட்டக் கூடாது."

கிழவி கொடுத்த தேங்காய்

எண்பது வயது அன்னம்மாக் கிழவிக்கு நடமாட்டம் ரொம்பவும் குறைந்து போய் விட்டது.

ஒரு சமையல்காரப் பெண்ணும் வேலைக்கார முருகேசுவும்தான் துணை.

கிழவிக்குப் பிள்ளையாரிடத்தில் அளவுக்கு மீறிய பக்தி!

'அடே, முருகேசு, இந்தத் தேங்காயைக் கொண்டு போய் அடுத்த தெருப் பிள்ளையார் கோயிலில் உடைச்சுடுடா'.

தேங்காயை அவனிடம் கொடுக்கும்போதே காரணமும் சொல்வாள்: 'என் பெரிய மகள் கடிதாசு போட்டிருக்கா. அவ புருஷனுக்கு உடம்பு நல்லா ஆயிருச்சாம்.'

அடுத்த அரை மணியில், கிழவி கொடுத்த தேங்காய் மூன்று ரூபாய்க்கு விலைப் போக, முருகேசுவுக்கு ஒரு



கமலா நடராஜன்

வார பீடிச் செலவு மிச்சம்!

கூடியவரை இப்படி வாய்ப்புக்கள் தொடர்ந்து கொண்டேதான் இருக்கும்.

கிழவிக்கு மூன்று பெண்கள், நிறையப் பேரன் பேத்திகள். எல்லா வீட்டு நல்லது கெட்டதற்கும் இவள் பிள்ளையாரைத்தான் வேண்டிக் கொள்வாள்.

முருகேசுவும் பீடிச் செலவுக்கென்றே தேங்காய்க் காசை ஒதுக்கி விடுவான்.

'அடே பாவம்டா' என்று மனசுக்குள் ஒரு குரல் ஒலிக்கும்.

முருகேசு அதை லட்சியம் செய்யவே மாட்டான்.

ஒரு நாள் —

ஏதோ காரியமாக அடுத்த தெரு வழியே இவன் போன போது, இவனுடைய ஒரே மகன் தர்மலிங்கம் பிள்ளையாருக்கு எதிரில் பெரிய தேங்காய் ஒன்றைப் போட்டு உடைத்துக் கொண்டிருந்தான்.


'அடப் பாவி, நாலு ரூபாயாவது தேறுமே' என்று அலறியது இவன் மனசு.

தர்மலிங்கம் தன் பின்னால் வந்து நின்ற அப்பாவைக் கவனிக்கவில்லை. கண்களை மூடியபடி பிள்ளையாரை வேண்டினான்.

''பிள்ளையாரப்பா, இப்போ நான் எட்டாவது பாஸ் பண்ணிட்டேன். வகுப்பிலேயே முதல் மார்க்! எல்லாம் உன் மேலே வச்ச நம்பிக்கையாலேதான். அந்த நம்பிக்கையை எனக்கு உண்டாக்கினது பக்கத்து வீட்டு அன்னம்மாப் பாட்டிதான். 'அடே தருமு, பிள்ளையாரை நம்பு. அந்த நம்பிக்கையே உன் ஊக்கத்தை வளர்க்கும். அறிவைக் கொடுக்கும். இன்னும் பெரிய படிப்பெல்லாம் படிக்கலாம்; கலெக்டராக்கூட வரலாம். பெத்தவங்க கஷ்டமெல்லாம் பஞ்சாப் பறந்துடும்'னாங்க. இந்தத் தேங்காயைக் கூட நான் பாஸ் பண்ணினதுக்காக, அவங்கதான் எங்கிட்டே கொடுத்து என் கையாலேயே உனக்கு உடைக்கச் சொன்னாங்க. அவங்களையும் எப்படியாவது எழுந்து நல்லபடி நடமாட வைக்கணும், பிள்ளையாரப்பா!''


அந்த எண்பது வயதுக் கிழவி எப்படியாவது நல்லபடி எழுந்து நடமாடணும்னு எதிர்பார்க்கற தன் பிள்ளையின் புத்திக்கும், அவள் கொடுக்கிற தேங்காய்களையே விற்றுப் பீடி குடிக்கும் தன் புத்திக்கும் உள்ள வித்தியாசத்தை எண்ணி முருகேசு குன்றிப் போனான்.

தன்னை அறியாமலேயே மகனோடு சேர்ந்து காதைப் பிடித்துக் கொண்டு தோப்புக்கரணம் போட்டான்.








பொன்முடி அசுரனும் பொன்மனக்குமரனும்
விறகு வெட்டி கந்தன் நல்ல உழைப்பாளி. அவன் மனைவி குப்பம்மா...
கதை: ஆனந்தி படம்: வினு
பொழுது சாய்ந்து விட்டது, கிளம்புங்க. புலிகிலி வரப்போவுது...
அவர்கள் காட்டின் எல்லையில் ஒரு குடிசையில் வசித்தனர்... ஒரு நாள்...
அம்மா! வழிதப்பி வந்துட்டேன்... பசிக்குது...
உள்ளே வாங்க....
குப்பம்மா கிழவியை உபசரித்தாள்...
கம்பங்களி... சாப்பிடுங்க... குடிக்கப் புளிச்சமோர் தரேன்!
கிழவி பசி ஆறியதும்...
நீ மகராஜியா இருக்கணும்!
குப்பம்மா சிரித்தாள்...
புருஷன் விறகு வெட்டி... திங்கிறது கம்புக்களி... எங்களுக்கு ஆள எந்த ராஜ்ஜியம் கிடைக்கும்?


கிழவி சற்றுக் கோபமாக...
குப்பம்மா! என் வாக்கு பொய்க்காது... இதோ விளையாடுகிறானே, உன் மகன்... இவன் இந்த நாட்டு இளவரசியை மணப்பான்!
கிழவி காட்டுக்குள் சென்றாள்...
நான் போய் வருகிறேன்!
குப்பம்மா பார்த்துக்கொண்டேயிருக்கையில் கிழவி ஒரு வன தேவதையாக மாறினாள்!
இதென்ன அதிசயம்?
தோழி கமலம் வர, குப்பம்மா நடந்ததையெல்லாம் கூறினாள்...
கனாக் கண்டியா?
இல்லே, கமலம்! அத்தனையும் நிஜம்!
கமலம் கிண்டலாக...
அடபயலே...! நீ ராசாவாகப் போறே... இனிமே உனக்குத் தினம் தினம் கும்பிடு போடணும்..!


வெளியே போயிருந்த கந்தன் திரும்பியதும்...
... இதுதாங்க நடந்தது... இங்கே பார்த்தா கிழவி.. ..! அங்கே பார்த்தா குமரி!
நம்பவே முடியலையே!
நான் கண்ணாலே பார்த்தேன்; காதாலே கேட்டேன். நீங்க நம்ப மறுத்தா எப்படி?
சரி, சரி, யார்கிட்டேயும் இதையெல்லாம் சொல்லிக்கிட்டிராதே, நமக்கேன் வம்பு?
ஆனால் குப்பம்மாவால் சும்மா இருக்க முடியவில்லை...
ராஜாப்பயலே! நீ யானைமேலே ஏறி பவனி வரப்போறே.... இந்த நாட்டு இளவரசிக்கு நான்தான் மாமியார்!
குப்பம்மா தனக்குத் தெரிந்தவர்களிடமெல்லாம் தமுக்கடித்தாள்..
இளவரசியின் மாமியாராகப் போகிறேன், தெரியுமில்லே?


செய்தி ஊரெல்லாம் பரவி... அரண்மனையையும் எட்டியது...
என்ன உளறுகிறாய்...?
மன்னிக்கணும்... நடப்பதைச் சொன்னேன்; குப்பம்மா ரொம்ப உறுதியாகப் பேசுகிறாள்...
அரசனும் அரசியும் பயந்து போய்...
குப்பம்மாவை அழைத்து வாருங்கள்; நேரில் விசாரிப்போம்!
குப்பம்மா தைரியமாக நடந்ததைக் கூறி...
அரசே! நான் உங்களுடைய வருங்கால சம்பந்தி! என்னை மரியாதையாக நடத்துங்கள்!
குப்பம்மாவை அனுப்பி விட்டு அரசன் கவலையுடன்...
தேவி! உனக்குப் பிறக்கப் போவது பெண்குழந்தையாக இருந்தால்...?
அந்த வனதேவதையின் வாக்கு பலிக்குமோ...?
அரசி அருவருப் படைந்து...
குப்பம்மாவும் கந்தனும் நமக்குச் சம்பந்தியாவதா? கஷ்டம்! கஷ்டம்!


மன்னன் வீரசேனன் மந்திரியுடன் ஆலோசிக்க...
கவலைப்படாதீர்கள்! குப்பம்மாவுக்குக் குழந்தை இருந்தால்தானே பிரச்னை!
மறுநாள்... குப்பம்மாவின் குழந்தை வாசலில் விளையாடிக் கொண்டிருந்தது...
மந்திரியின் கட்டளையை நிறைவேற்ற இதுதான் சமயம்...
மந்திரி அனுப்பிய ஆள் குழந்தையைத் தூக்கிச் சென்றான்... ஆனால்...
பாவம்! உன்னைக் கொல்ல மனம் வரலை...
ஒரு மரப்பெட்டியில் குழந்தையை வைத்து ஆற்றில் மிதக்க விட்டான்...
தெய்வம் உன்னைக் காக்கட்டும்...
ஒரு கரும்புக் காடு பக்கமாகப் பெட்டி மிதந்தது...
அதோ பாரு, அப்பா!



முருகன் நீந்திச் சென்று பார்க்க...
அட குழந்தை!
முருகன் பெட்டியைக் கரை சேர்த்தான்...
எனக்கு விளையாட ஒரு தம்பி கிடைச்சுட்டான்... என்ன அழகா இருக்கான்... ...செல்லம்!
முருகனின் மகள் செல்வி குழந்தையைத் தூக்கிக் கொண்டாள்...
அட, தாயத்து!..
செல்வி! இவனைச் செல்லப்பா என்று அழைப்போம்!
செல்வி செல்லப்பாவை அன்புடன் வளர்த்தாள்... ஆண்டுகள் சென்றன.
நீ பலசாலியா இருக்கணும்; வீரனா வளரணும்...
நாட்கள் பறந்தன. ஒரு நாள் அரசர் வீரசேனர் வேட்டைக்கும், வனபோஜனத்துக்கும் வந்தார்...
காட்டின் எல்லையில் என்ன...? கரும்புத் தோட்டமா? போய்ப் பார்ப்போம்.....



செல்லப்பன் அவரை வரவேற்று....
அரசே! கரும்பஞ்சாறு அருந்துங்கள்.
வீரசேனர் செல்லப்பனுடன் அளவளாவினார்...
என் பெயர் செல்லப்பன்! இதுஎன் அக்கா செல்லி... அனாதைக் குழந்தையாக ஆற்றில் மிதந்து வந்த என்னை எடுத்து வளர்த்தவள்...
வீரசேனருக்குச் சந்தேகம் எழ...
எங்கே அந்தப் பெட்டியைக் காட்டு...
பத்திரமாய் வைத்திருக்கிறேன், ராஜா! எடுத்து வருகிறேன்...
பெட்டியைப் பார்த்த மன்னருக்கு அடையாளம் தெரிந்து விட்டது....
செல்லப்பா! நீ செல்வக் குடும்பத்தைச் சேர்ந்தவன். நான் ஒரு கடிதம் தருகிறேன். கொண்டுபோய் மந்திரியிடம் கொடு! பணக்காரனாவாய்!
செல்லப்பன் உற்சாகமாகக் கிளம்பினான்...
பணக்காரனானால் என்னை அன்புடன் வளர்த்த செல்லியை நன்றாகக் கவனித்துக் கொள்வேன்.





மாலை, இருள் கவிய செல்லப்பன் ஒரு மண்டபத்தில் தங்கினான். கட்டுச் சோறு சாப்பிட்டதும்...
அப்பாடா! களைப்பாயிருக்கு...
செல்லப்பன் அசந்து மண்டபத்தில் உறங்கிய போது இரு திருடர்கள் மழைக்கு ஒதுங்க...
இவனிடம் என்ன இருக்கு பாரு...
ரெண்டே ரெண்டு பொற்காசுதான்... ஒரு கடிதம்....
திருடர் தலைவன் ஓலையைப் பிடித்தான்....
ஹூம்.... நம்மை நாடுகடத்திய வீரசேனரைப் பழிவாங்கச் சரியான சந்தர்ப்பம்...
தலைவன் வேறு ஓலை எழுதி வைத்தான்... முதல் ஓலையைத் தீக்கிரையாக்கினான்...
இதுல என்ன எழுதியிருந்தது?
ஓலை கொண்டு வருகிறவனைக் கொன்று விடும்படி வீரசேனர் மந்திரிக்கும் மகாராணிக்கும் எழுதியிருந்தார்!


மழை நின்றது. திருடர்கள் புறப்பட்டார்கள்.
அந்த ஓலையைப் பொசுக்கியாச்சு. மாற்று ஓலையில் நீங்க என்ன எழுதினீங்க?
இளவரசி உலக நாயகியை இந்தப்பரதேசிப் பயலுக்கு விவாகம் செய்து கொடுக்கும்படி எழுதியிருக்கிறேன்! ஹ... ஹா... ஹா!
மறுநாள் செல்லப்பன் அரண்மனையை அடைந்தான். ஓலையைத் தந்து...
மகாராணி! இதோ மன்னர் தந்த அடையாள இலச்சினை...
செல்லப்பனுக்கு ராஜோபசாரம் நடந்தது...
அடேயப்பா! என்னையே எனக்கு அடையாளம் தெரியாது போலிருக்கே!
உலக நாயகிக்கும் செல்லப்பனுக்கும் விமரிசையாகத் திருமணம் நடந்தது...



சிலகாலம் சென்று மன்னர் திரும்பி வந்தார்.. மந்திரி பிரதானிகளுடன் புது மணத் தம்பதியும் அவரைத் தலைநகர எல்லையில் எதிர் கொண்டனர்...
இதென்ன கூத்து.! இளவரசிக்குப் பக்கத்தில் நிற்பது யார்?
சீக்கிரமே அவருக்கு விஷயம் புரிந்தது... அரசியும் மந்திரியும்....
உங்கள் கட்டளைப்படியே செல்லப்பனுக்கு இளவரசியைக் கல்யாணம் செய்து வைத்தோம்...
...ஆனால் ஏன் அத்தனை அவசரமாகக் கல்யாணத்தை முடிக்கச் சொல்லி எழுதினீர்கள்? அதுதான் புரியலை.
தாம் ஏமாந்து போனதை மன்னன் காட்டிக் கொள்ளவில்லை..
நிலவும் ஒளியும் போல், மலரும் மணமும் போல் நீடு வாழ்க!
ஒரு நாள்...
செல்லப்பா! எனக்குப் பின் இந்த நாட்டின் மன்னனாக, நீ உன் தகுதியை நிரூபிக்க வேண்டும்... இந்நாட்டின் எல்லையில் உள்ள பொன்முடி அரக்கனின் தலையிலிருந்து மூன்று பொன் முடிகளைக் கொண்டு வா!


செல்லப்பன்
சில நாள்
பயணம் செய்து
ஒரு கோட்டை
வாசலை
அடைந்தான்...
காவலன்...
இந்த அகழியில்
எப்போதும் பெருகிக்
கொண்டிருந்த நீரூற்று
வரண்டு விட்டது... ஏன்?
பொன்முடி அரக்கனைக்
கேட்டு வருகிறேன்.
அடேயப்பா!
அத்தனை தைரிய
மும் சாமர்த்திய
மும் உனக்கு
இருக்குமானால்
உன்னை எங்கள்
அரசனாக
ஏற்போம்!
மேலும்
சில நாள்
சென்று
செல்லப்பன்
ஓர் ஊரை
அடைந்தான்...
எல்லாரும் இந்த மரத்தைப்
பார்த்தபடி என்ன யோசனை
செய்கிறீர்கள்?
தங்கப் பழங்கள்
கொடுத்து வந்த
இந்த மரம்
இப்போதெல்லாம்
காய்ப்பதே இல்லை.
.. ஏன் என்று
யோசிக்கிறோம்!
காரணத்தை
நான் கண்டு
பிடித்தால்?
இந்த நாடே உனக்குச்
சொந்தமாகும்!



செல்லப்பன் மேலும் பயணத்தைத் தொடர, ஓர் ஆறு குறுக்கிட்டது...
ஓடக்காரா! என்னை அக்கரைக்கு அழைத்துப்போவாயா?
ஏறிக் கொள்!
ஆற்றைக் கடக்கும் போது...
பொன்முடி அசுரனின் மாயத்தால் இந்தத் துடுப்புகள் என் கரங்களோடு ஒட்டிக் கொண்டன... விட முடியவில்லை... என்ன செய்வது?
திரும்பி வரும் போது அதற்கு உபாயம் சொல்கிறேன்... வரட்டுமா... நன்றி...
செல்லப்பன் ஒரு மலையைக் கடந்து மறு பக்கம் ஒரு குகையை அடைந்தான்.
குகை வாசலில்...
யார் நீ? ஓடிப் போய்விடு! என் கணவர் பொன்முடி அசுரன் வந்தால் உன்னை ஒரே நொடியில் கொன்று விடுவார்!




செல்லப்பன் அவளைப் பணிவாக வணங்கித் தன் கதையைக் கூறினான்...
தாயே! எனக்குத் தாங்கள்தான் உதவ வேண்டும்.
நல்லது; நீ வீரனாகத் திகழ்கிறாய்; அடக்கமாகவும் இருக்கிறாய். அதனால் உனக்கு உதவுகிறேன்.
குதிரையை மறைவிடத்தில் கட்டிவிட்டு, செல்லப்பன் சமையலறையில் ஒளிந்து கொண்டான். பொன்முடி அசுரன் திரும்பி வந்து நன்றாகச் சாப்பிட்டு விட்டு உறங்கினான்.
இது தான் சமயம்...
அசுரனின் மனைவி ஒரு பொன் முடியைப் பிடுங்க... அசுரன் திடுக்கிட்டு...
என்ன? என்ன?
மருதநாட்டு நீரூற்று ஏன் வற்றி விட்டது?
இதென்ன அசட்டுக் கேள்வி? நீரூற்றின் மீது ஒரு தவளை உட்கார்ந்திருக்கிறது, அதனால்தான்!



அசுரன் மறுபடி தூங்க, அவன் மனைவி இன்னொரு முடியைக் கிள்ள, அசுரன் திடுக்கிட்டு...
என்ன ஆச்சு?
தங்கப்பழங்கள் காய்க்கும் மரம் இப்போ ஏன் காய்ப்பதில்லை?
அசுரன் அதற்கும் காரணம் கூற, இவ்வாறே மூன்று கேள்விகளுக்கும் செல்லப்பன்...
வீரனே, இந்தா நீ கேட்ட மூன்று பொன் முடிகள்! அசுரன் விழித்துக் கொள்ளுமுன் ஓடி விடு!
தாயே, நன்றி!
விடைகளை ஒட்டுக் கேட்டுத் தெரிந்து கொண்டேன்... இனி....
செல்லப்பன் படகுத் துறையை அடைந்து படகேறினான்.
உன் துடுப்புகளிலிருந்து நீ விடுதலை பெறுவது மிகவும் சுலபம். அடுத்து படகேறும் பயணியிடம் கொடுத்து விடு! அவை உன் கரங்களை விட்டு நழுவும்!
தங்கப் பழங்கள் தந்து வந்த மரத்தை அடைந்ததும்....
மரத்தின் அடியில் எலி, பொந்து அமைத்து வேர்களைச் சுரண்டுகிறது. இரவில் பொறி வைத்து அதைப் பிடித்து விடுங்கள்!


கோட்டை அகழியை அடைந்ததும்....
நீரூற்றின் மீது தவளை உட்கார்ந்து அடைத்துக் கொண் டிருக்கிறது. அதை விரட்டி விடு!
தலை நகரை அடைந்த செல்லப்பன்..
அரசே! இதோ நீங்கள் கேட்ட பொன் முடிகள்.
ஆஹா! பலே!
அரசனுக்குப் பேராசை பிறந்தது...
பொன்முடி அசுரனின் மாளிகை எப்படி, எங்கே இருக்கிறது?
சோலை ஆற்றின் மறுகரையில் மலை ஏறி இறங்கினால் குகை தெரியும். ஒவ்வொரு தூணிலும் வைரங்கள் மின்னுகின்றன!
அசுரனைக் கொன்று அவன் செல்வத்தைத் தனதாக்கிக் கொள்ளும் துர் எண்ணத்துடன் வீரசேனர் கிளம்பினார்...
அந்த அதிசயங்களை நானும் பார்த்து வருகிறேன்....
வழியில்...
அட! அகழியில் நீரூற்று பெருகியிருக்கிறதே! செல்லப்பன் கூறியதெல்லாம் சரிதான்!


மேலும் செல்ல...
ஆஹா, பொன் கனிகள்! திரும்பிப்போகும் போது பறித்துச் செல்கிறேன்!
ஆற்றங்கரையை அடைந்ததும்...
ஓடக்காரா! சீக்கிரம்! என்னை அக்கரைக்கு அழைத்துப்போ!
எனக்குக் காய்ச்சல். துடுப்புவலிக்க முடியவில்லை. உன்னால் முடியுமானால் படகு செலுத்திப் போ!
வீரசேனர் பரபரப்புடன் படகிலேறித் துடுப்பைப் பெற்றுக் கொண்டார்... அடுத்த கணம்...
ஹய்யா! எனக்கு விடுதலை!
ஐயோ! துடுப்பை உதற முடியலையே!
செல்லப்பனும் உலக நாயகியும் சந்தோஷமாக நாட்டை ஆண்டார்கள். மூன்று நாட்டு மக்களும் மகிழ்ந்தார்கள்.
ஓர் ஆங்கில நாடோடிக் கதையைத் தழுவியது

வண்ணத் தோட்டத்தின் வானம்பாடிகள்

7

பூதலூர் முத்து

அரவிந்தனும் மற்றவர்களும் பீட்டரை அவனது இல்லத்தில் சந்தித்தார்கள்.

அவனுக்கு ஏற்பட்ட கண்வலியால் அன்று பள்ளிக்கு வரவில்லை என்பதை அறிந்து கொண்டார்கள்.

''அரவிந்தா! என்னுடைய 'ஹீரோ' பேனாவை இரண்டு நாளாகக் காணவில்லை. நீ பார்த்தாயா?'' என்றான் பீட்டர்.

அலி அர்த்தத்தோடு அரவிந்தனை நோக்கினான்.

அரவிந்தன், ''பீட்டர்! அதை உன்னிடமிருந்து யாரோ திருடியிருக்கிறார்கள். திருடியது மட்டுமில்லாமல் உன்மீது பழி வருவது போல வேலையும் செய்திருக்கிறார்கள்,'' என்று தொடங்கி மாந்தோப்பு நிகழ்ச்சிவரை சொல்லி முடிந்தான்.

''தொடர்ந்து நாம் ஒன்றாக முனைந்து உண்மையைக் கண்டுபிடிப்போம்'' என்றான் அலி.

''நாளையே கண் வலி சரியாகி விடும். நானும் உங்களோடு சேர்ந்து ஒத்துழைப்பேன்'' என்றான் பீட்டர்.

பகத்துக்குப் புதிய சைக்கிள் வாங்கிக் கொடுக்க பல்பீர் சிங் முடிவு செய்தார். அரவிந்தனிடமும் அவனுடைய நண்பர்களிடமும் இது பற்றிச் சொன்னார்.

''அங்கிள்! பகத்தின் பழைய சைக்கிள் அழகானது; விலை உயர்ந்தது. அதைக் கண்டுபிடிக்க நாங்கள் முயன்று வருகிறோம். சில நாட்களுக்கு பகத் என் சைக்கிளிலேயே வரட்டும். நான் வந்து அழைத்துப் போகிறேன்'' என்றான் அரவிந்தன்.

''அரவிந்தா! அந்தச் சைக்கிளுக்காக நீங்கள் தொல்லைப்படுவதை நான் விரும்பவில்லை. எடுத்தவன் எவனோ, அவன் நேரில் கேட்டிருந்தால், அவனுடைய தேவையில் நியாயம் இருக்கிறது என்று தெரிந்தால், ஒரு சைக்கிளையே வாங்கிக் கொடுத்திருப்பேன்; அபகரித்துக் கொண்டது தான் வேதனை ஏற்படுத்துகிறது.''


பல்பீரின் அன்பு நெஞ்சம் அரவிந்தனின் இதயத்தில் சிலிர்ப்பை உண்டாக்கியது.

''சைக்கிள் விஷயம் மட்டுமல்ல... வேறு சில நிகழ்ச்சிகளும் பள்ளியில் நடந்துள்ளன. நல்ல பள்ளி, நல்ல மாணவர்கள் என்ற பெயர் காப்பாற்றப்பட வேண்டும் என்பதில் நாங்கள் அக்கறை உள்ளவர்கள்; ஆர்வம் உள்ளவர்கள்! இதைப் போன்ற வேண்டாத செயல்களில் ஈடுபடுபவர்கள் யார் என்பதைக் கண்டுபிடித்து விட்டால் எல்லாருக்கும் நிம்மதி ஏற்படுமல்லவா... அதனால்தான் முயல்கிறோம்...'' என்ற அரவிந்தனின் பதிலைக் கேட்டு பல்பீர் மகிழ்ச்சியடைந்தார்.

''உங்கள் படிப்புக்கு எந்த இடையூறும் இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்றார்.

அரவிந்தன் உறுதியளித்தான்.

குமரன் தையல் நிலையத்தைச்



சேர்ந்த தையற்காரர் சீனிவாசன் தலைமை ஆசிரியர் அறையில் அமர்ந்திருந்தார்.

அரவிந்தனும் ராமுவும் கொண்டு வந்து கொடுத்த சட்டைகளின் கழுத்துப் பகுதியில் இருந்த தையல் கடை முகவரியைப் பார்த்துத் தமிழன்பன் அவருக்குச் செய்தி சொல்லி அனுப்பியிருந்தார்.

''இவை யாருடைய சட்டைகள் என்று உங்களால் சொல்ல முடியுமா?''

சீனிவாசன் அவற்றை வாங்கிப் பார்த்தார். ''என்னிடம் எத்தனையோ மாணவர்கள் உடைகள் தைத்துக் கொண்டு போகிறார்கள். ஆளைக் குறிப்பிடுவது கடினம் சார்!'' என்றார்.

''அண்மையில் நீங்கள் எந்தெந்த மாணவர்களுக்கு உடைகள் தைத்துக் கொடுத்தீர்கள் என்று கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்.''

ஏதாவது நினைவுக்கு வருகிறதா என்று குறிப்பிட்டுச் சொல்ல அவரால் இயலவில்லை.

அந்த நேரத்தில் ஒரு விந்தை நிகழ்ந்தது. எட்டாம் வகுப்பு மாணவி அருள்மதி அங்கு விரைந்து வந்து கொண்டிருந்தாள்.

''சார்! இந்தப் பேனாவும் பென்சிலும் விளையாட்டுத் திடலில் கிடந்தன.''

அவற்றை மேசையின் மீது வைத்தாள். தமிழன்பன் அவளைப் பாராட்டினார்.


அவள் திரும்பிச் செல்ல முயன்ற போது சீனிவாசனைப் பார்த்தாள். அருள்மதி வீட்டுத் தையற்காரர் அவர் தான்!

''அருள்மதி! அப்பாவிடம் சொல்... நாளை மாலை வருகிறேன்'' என்றார் சீனிவாசன்.

உடைகள் தைப்பதற்காக அளவெடுக்க வருமாறு அவளுடைய தந்தை வீராசாமி கூறியிருந்தார்.

''சரி, சொல்லிவிடுகிறேன்'' என்று அவள் புறப்பட்டபோது தமிழன்பனுக்கு ஒரு யோசனை தோன்றியது.

''அம்மா அருள்மதி! மேசைமீது இருக்கிற இந்தச் சட்டைகள் சீனி



வாசன் தைத்தவை! இவை யாருடையவை என்று கண்டுபிடிக்க முயல்கிறோம். நீயும் கொஞ்சம் பார்.... பலன் இருந்தாலும் இருக்கலாம்'' என்றார்.

அவள் அந்தச் சட்டைகளை எடுத்துப் பார்த்தாள். அவள் முகத்தில் மகிழ்ச்சி தோன்றியது.

''சார்! கண்டுபிடித்துவிட்டேன். சிவப்புக் கோடு போட்ட சட்டை என் அண்ணன் ஆசைத்தம்பியினுடையது. மஞ்சள் சட்டை வேலப்பனுடையது! எனக்கு நன்றாகத் தெரியும்'' என்றாள்.

''நன்றி. போய் வா அம்மா'' என்றவர் சீனிவாசனுக்கும் விடை கொடுத்து அனுப்பினார்.

பள்ளியின் வழிபாட்டுத் திடல், விளையாட்டுத் திடல், வகுப்பறை, நடைபாதை இப்படி எந்த இடமாக இருந்தாலும் கேட்பாரற்றுக் கிடக்கிற பொருள்களைத் தலைமை ஆசிரியரிடம் கொண்டு வந்து கொடுத்துவிட வேண்டும். பொருள்களைத் தவற விட்டவர்கள் வந்து செய்தியை அவரிடம்தெரிவிக்கவேண்டும். அதன் பின்னர் அடையாளம் கேட்பார். கண்டித்துக் கூறிப் பொருளைக் கொடுப்பார். இது நடை முறை!

தொலைந்து விட்ட பொருளைக் கேட்டு யாரும் வராதபோது சீனிவாசன், அருள்மதியை விசாரித்தது போன்ற விசாரணை நடைபெறும்.

பள்ளி விட்டு அருள்மதி வீட்டிற்கு வந்தாள்.

பள்ளி முடிந்ததும் ஆசைத்தம்பியிடம் விஷயத்தைச் சொல்ல நினைத்தாள். அவனைக் காண இயலவில்லை. வழியில் வேலப்பனைப் பார்த்தாள். ஆனால், அவனிடம் சொல்ல விரும்பவில்லை.

வீட்டிலும் ஆசைத்தம்பியைக் காணவில்லை. அவன் வந்ததும் விஷயத்தைச் சொல்ல வேண்டும் என்று நினைத்தாள் அவள்.

எங்கேயோ அலைந்து விட்டு வீட்டுக்கு வந்தான் ஆசைத்தம்பி. அவனுடைய முகத்தில் ஒரு பரபரப்புத் தென்பட்டது.

''அண்ணா, உன்னுடைய சிவப்புக் கோடு போட்ட சட்டை.....'' என்று சொல்லத் தொடங்கினாள்.

அவனுடைய முகம் பேயறைந்ததைப் போல மாறுவதைக் கண்டாள்.

"ஏதோ பொந்துக்குள் இருந்து ஆந்தை விழிப்பதைப் போல ஏன் இப்படி விழிக்கிறாய்?"

பொந்து என்றதும் அவனுடைய பரபரப்பு இன்னும் அதிகமாயிற்று.

"நான் விழிப்பது இருக்கட்டும். அந்தச் சட்டைக்கு என்ன?"

"அந்தச் சட்டையை நீ தொலைத்து விட்டாய் அல்லவா?"

"நான் தொலைத்தது இருக்கட்டும். நீ சொல்லித் தொலை!" என்று எரிந்து விழுந்தான் ஆசைத்தம்பி.

"யாரோ எடுத்துவந்து தலைமை ஆசிரியரிடம் கொடுத்திருக்கிறார்கள். உன் சட்டை மட்டுமல்ல, வேலப்பனுடைய மஞ்சள் சட்டையையும் அவர் வைத்திருக்கிறார். கைக்குட்டைதான் காணமற் போகும். சட்டையையே தொலைக்கிற அளவுக்கு முன்னேறிவிட்டீர்கள்!" என்று சொல்லிச் சிரித்தாள் அருள்மதி.

ஆசைத்தம்பி படுகிற 'அவஸ்தை' தெரியாமல் அவள் விளையாடிக் கொண்டிருந்தாள்.

"அவர் வைத்திருப்பது உனக்கு எப்படித்தெரியும்?" என்றுகேட்டான்.

அவள், நடந்த விவரத்தைக் கூறினாள். அவனுக்குக்கோபம்பொத்துக் கொண்டு வந்தது.

"பரீட்சை எழுதப் போகும் போது சகுனம் சரியில்லை!"

"பூனை குறுக்கே போகுதா?"

"இல்லை! கோழி முட்டை போடுது!"

— கடலூர் கன்னியப்பன்.



"என்ன ஏது என்று தெரியாமல் நீ எப்படி என்னைத் தலைமை ஆசிரியரிடம் மாட்டி வைக்கலாம்?" என்று ஆவேசத்தோடு கேட்டான். அந்தக் கேள்வி அவளுக்கு வேடிக்கையாக இருந்தது.

"உன்னை நான் மாட்டி வைத்தேனா? 'சட்டை யாருடையது' என்று அவர் கேட்டார். உன் சட்டையாருக்கும் பயனில்லாமல் குப்பைத் தொட்டிக்குப் போய்விடக் கூடாதே என்று நான் முந்திக்கொண்டு சொன்னேன். உன்னுடைய சட்டையை உன்னுடைய சட்டை என்று சொன்னேன். உனக்கு ஏன் இவ்வளவு கோபம் வருகிறது? நீயும் வேலப்பனும் முகமூடி போட்டுக் கொண்டு கொள்ளையா அடித்தீர்கள்? என்ன ஏது என்று தெரிந்து கொள்ள இதில் என்ன இருக்கிறது? நீ அந்தச் சட்டைத் துணியை வாங்க அம்மாவிடம்கெஞ்சிப்பணம்வாங்கிக் கொண்டு போனாயே, அதுதான் எனக்கு நினைவு இருக்கிறது. அந்த நல்ல சட்டை மீண்டும் கிடைத்ததில் உனக்கு மகிழ்ச்சியே இல்லை போலிருக்கிறதே!" என்றாள் அருள்மதி.


'நீயும் வேலப்பனும் முகமூடி போட்டுக் கொண்டு கொள்ளையா அடித்தீர்கள்?' என்று அவள் கேட்டது அவனுடைய சினத்தை மேலும் கிளறியது.

தாய் சங்கரி அப்போது உள்ளேயிருந்து வந்ததால், அவன் சினத்தை அடக்கிக் கொண்டு தாற்காலிகமாக அமைதி பெற்றான்.

அவனுடைய செயல் அருள்மதிக்குக் குழப்பத்தை உண்டு பண்ணியது. ஆசைத்தம்பியும் குழம்பிப் போயிருந்தான். 'காலை இடைவேளை நேரத்திலேயே மாந்தோப்புக்குப் போய் சட்டைகளை எடுத்துவிட வேண்டும் என்று வேலப்பனிடம் அடித்துக் கொண்டேன். நம்மைக் கண்காணிப்பார்கள், இப்போது வேண்டாம், பிறகு எடுத்துக் கொள்ளலாம் என்றான். நிலைமை விபரீதமாகப் போய்விட்டதே. உடனே ஓடிப் போய் விஷயத்தைச் சொல்ல வேண்டும் — எச்சரிக்கை செய்ய வேண்டும்' என்று நினைத்தான் அவன்.

"டேய் ஆசைத்தம்பி!"

குரல் கொடுத்துக் கொண்டே



அவனுடைய தந்தை வீராசாமி உள்ளே வந்தார்.

'என்ன விஷயமோ தெரியவில்லையே.' என்று பதற்றத்தோடு அவர் முன்னால் வந்து நின்றான்.

"மாமா சித்தலிங்கம் வந்திருக்கிறான். பாளையத்தில் நெல் அறுவடை நடக்கிறதாம் சாப்பாடு கொண்டு போக ஆள் இல்லையாம். நீ அவனோடு போய் நான்கு நாள் இருந்து விட்டு வா. இடையில் ஓடி வந்தால் அப்புறம் நடக்கிறதே வேறு" என்றவர், வெளியே நின்று கொண்டிருந்த டயர் வண்டியில் அவனை அமர வைத்து வழியனுப்பிவிட்டுத் தான் உள்ளே வந்தார்.

காரியம் கெட்டுக் குட்டிச் சுவராகி விட்டதை உணர்ந்தான் ஆசைத்தம்பி.

மாமா சித்தலிங்கம் வண்டியை விரட்டிக் கொண்டிருந்தார்.

'எதிரே திடீரென்று வேலப்பன் வரமாட்டானா. அவனிடம் செய்தியைக் கூறமாட்டோமா' என்று துடியாய்த் துடித்தான் அவன்.

எல்லபிள்ளைச் சாவடியைத் தாண்டி வண்டி போய்க் கொண்டிருந்தது. வேலப்பன் வரவில்லை.

பாளையத்திலிருந்து அவனுக்குக் கடிதம் எழுதலாம். அவனுடைய தந்தை விமலானந்தம் பத்திரிகை அலுவலகத்திலிருந்து வரும் கடிதம் தவிர மற்றவற்றைப் பார்க்காமலே கிழித்துப் போட்டு விடுவார். தொடர்புடையவர்கள் நேரில் போய்ப் பேசிக்கொள்ள வேண்டியதுதான். பள்ளி முகவரிக்கு எழுதினாலோ கண்காணிப்புப் பலமாக இருக்கும்; சிக்கி விடும்'

வண்டி மேட்டில் ஏறிப் பின்னர் குதித்துக் கொண்டு ஓடியது. ஆசைத் தம்பியின் நினைவுகள் அலை பாய்ந்து கொண்டிருந்தன.

'விவரம் தெரியாமல் வேலப்பன் என்ன செய்யப் போகிறானோ?'

அவனுடைய நெஞ்சம் 'திக் திக்' என்று அடித்துக் கொண்டிருந்தது.

(தொடரும்)



சப்தம்

ஜமதக்னி

''டமால்'' என்ற சத்தம் கேட்டு தூங்கிக் கொண்டிருந்த ராமபத்ரன் கண் விழித்தார். ராமபத்ரன் வயதானவர். அவருக்கு இரவிலேயே தூக்கம் வராது. பகலில் எங்கு நல்ல தூக்கம் வரப் போகிறது? கோழித் தூக்கம்தான். ''டணால்'' மீண்டும் சத்தம். சமையல் அறையிலிருந்து தான் வந்தது.

கண்ணைச் சுருக்கிக் கொண்டு யோசித்தார்.காரணம் புரிந்தது. அவர் பேரன் ராஜன் சமையல் அறையில் ஏதோ வேலை செய்து கொண்டு இருந்தான். அவன் தாயாருக்கு உடல் நலம் சரியில்லாததால் பாத்திரங்களை அலம்பிக் கவிழ்கிறான் போலும்.

''ராஜா.... கொஞ்சம் சத்தம் இல்லாமல் வேலை செய்யப்பா...'' என்று சொன்னார் தாத்தா. ''ம்... தம்... வேலை செஞ்சா சத்தம் வரத்தான் செய்யும்,'' என்று பதிலளித்தான் ராஜா.... தாத்தா மேற்கொண்டு பேசவில்லை.

அவன் பழக்கம் அவருக்குத் தெரியும்.அவன்ஏதாவதுவேலைசெய்தால் சப்தம்தான். அவன் நடக்கும் போது கூட பூமி அதிரத்தான் நடப்பான். படிக்கும்போது சத்தம் போட்டுத் தான் படிப்பான். டெலிவிஷன் பார்க்கும் போது, ரேடியோ கேட்கும் போதுகூட தேவைக்கு அதிகமான ஒலியில்தான் வைப்பான்.

''டேய்...ராஜா உன் தங்கச்சி பாப்பா தூங்கிறது. கொஞ்சம் சத்தம் போடாமல் இரு.'' என்பாள் தாயார். ''ஆமாம், தங்கச்சி தூங்குகிறாள் என்பதற்காகநான்என்னமௌனவிரதமா இருக்க முடியும்?'' என்று கேள்வி கேட்பான்.

அது போல அவன் பாட்டனார் ராமபத்திரன் ஓய்வு எடுக்கும் போது சத்தம் செய்வான். அவன் வேண்டும் என்றுசெய்வதில்லை.அத்தியபழக்கம் அவன் இரத்தத்தில் ஊறி விட்டது என்றே சொல்ல வேண்டும்.

சில நாட்கள் கழிந்தன.

அன்று தாத்தாவுக்கு உடம்பு சரியில்லை. நல்ல காய்ச்சல். தலைவலி. தன் அறையில் படுத்துக் கொண்டிருந்தார். பகல் நேரம். அன்று டெலிவிஷனில் கிரிக்கெட் பந்தயம் காட்டிக் கொண்டிருந்தனர். ராஜனுக்குப் பள்ளி விடுமுறை. கேட்க வேண்டுமா சப்தத்திற்கு?

''ராஜா, கொஞ்சம் 'சவுண்டை'க் குறைத்து வைத்துக் கொள்.'' என்றார் தாத்தா. ''ஆமாம், வேறு வேலை இல்லை உங்களுக்கு'' என்று பதில் சொன்னான் ராஜன்.

''எனக்குத் தலைவலி அதனால் தானே உன்னிடம் கேட்கிறேன். நான் உன்னைப் பார்க்க வேண்டாம் என்று சொல்லவில்லையே! கொஞ்சம் சப்தம் இல்லாமல் கேள் என்றுதான் சொல்லுகிறேன்,'' என்றார் தாத்தா.

ராஜன் பதில் பேசவில்லை. அவர் சொன்னதையும் இலட்சியம் செய்யவில்லை.

''ஸிக்ஸர்... ஸ்ரீகாந்த் என்ன அருமையா ஆடறார்'' என்று அவ்வப்போது ஆட்ட வர்ணனை வேறு. தாத்தா வேறு வழி இல்லாமல் கண்களை மூடிக்கொண்டு படுத்தார். கண்களை மூட முடியும்... காதுகளை மூட முடியாதே! சிரமத்துடன் அன்றையப் பொழுதைக் கழித்தார்.

சில நாட்கள் கழிந்தன. ராஜன் பள்ளியிலிருந்து வரும் போதே சோர்வாக வந்தான். கண்கள் சிவந்து இருந்தன. ''என்னடா ராஜா, ஒரு



மாதிரியா இருக்கே?'' என்று அவனை விசாரித்த தாயார் அவனைத் தொட்டு விட்டு.... ''நல்ல சுரம். நீ போய் படுத்துக்கொள்'' என்று சொன்னாள்.

ராஜனின் தந்தை அலுவலகத்திலிருந்து வந்ததும், அவனை மருத்துவரிடம் அழைத்துச் சென்றார். டாக்டர் பரிசோதனை செய்து விட்டு, பயப்பட ஒன்றும் இல்லை. இது ஒரு விதக் காய்ச்சல். நாலு நாட்கள் மருந்து சாப்பிட்டு ஓய்வு எடுத்துக் கொண்டால் சரியாகி விடும்'' என்றார்.

ராஜன் பள்ளிக்கு செல்ல முடியவில்லை. அவனுக்கு இரவில் தூக்கம் வரவில்லை. பகலில் கொஞ்சம் சிரமப்பட்டுத் தூங்க முயலும் போது, அவன் தங்கை அழுதது ''என்ன அம்மா, ஏன் அவள் அழுறாள். நான் ஏற்கெனவே கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறேன்'' என்று கத்தினான். அம்மா பதில்சொல்லாமல் குழந்தையைச் சமாதானப் படுத்தினாள்.

சிறிது நேரத்தில், மீண்டும் ராஜனின் குரல். ''என்னம்மா... இது துணியைக் கொஞ்சம் மெதுவாகத் தோய்க்கக் கூடாதா?'' அம்மா அப்பொழுதும் கோபம் கொள்ளவில்லை. ''சரி, நான் மெதுவாகத் தோய்கிறேன்'' என்றுசொல்லி விட்டு துணிகளை அலசி உலர்த்தினாள்.

ஆனால், ராஜன் ஓயவில்லை.

''என்ன தாத்தா, நீ இருமிக் கொண்டே இருந்தால், நான் எப்படித் தூங்கிறதாம்?'' என்றான். தாத்தா இருமுவது புதிதல்ல. இருந்தாலும், ராஜனால் அதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

அடுத்த மூன்று நாட்களும் அப்படித் தான் நடந்து கொண்டான். அம்மா, அப்பா, தாத்தா மூவரும் ரொம்பவும் பொறுமையாகத்தான் இருந்தார்கள். எல்லா வேலைகளையும் கூடிய வரையில் சப்தம் இல்லாமல்தான் செய்தார்கள். அவர்கள் சப்தமே செய்யாத போது கூட ராஜன், ''ஏன் சத்தம் செய்கிறீர்கள்'' என்று எரிந்து விழுந்த போதிலும், கோபம் கொள்ளாமல் அமைதியாக இருந்தார்கள். ராஜன் வேண்டும் என்றே எரிந்து விழவில்லை. அவன் உடல் உபாதையின் காரணமாகத்தான் அப்படி நடந்து கொள்கிறான் என்று புரிந்து

கொண்டு பக்குவமாக நடந்து கொண்டனர்.

ராஜன் அதனுடன் நின்றுவிடவில்லை. பக்கத்து வீட்டில், தெருவில் உண்டாகும் ஒலிகளுக்குக் கூட எரிச்சல் பட்டான். ''அம்மா, ஏன் அந்த ஆட்டோ நம்ம வீட்டு வாசலில் வந்து சத்தம் போடறது?'' என்பான்.

''பக்கத்து வீட்டு ராமுவை வேறு எங்கேயாவது போய் விளையாடச் சொல்'' என்பான். வீட்டில் இருப்பவர்கள் அவன் சொல்வதைக் கேட்டுக்கொண்டு அமைதியாக இருப்பார்கள். தெருவில் செல்வோர், அக்கம் பக்கத்தில் இருப்பவர் எல்லாம் ராஜனுக்குக் காய்ச்சல் என்றால் பேசாமல், விளையாடாமலா இருப்பார்கள்?

நான்கு நாட்கள் கழிந்தன. ராஜனுக்கு உடல் நலம் தேறிவிட்டது.

''அம்மா, நாலு நாளா ரொம்ப வேதனை...'' என்றான் ராஜன்.

''உண்மைதான்... அது போதாது என்று தாத்தாவின் இருமல், குழந்தையின் அழுகை, கதவைச் சாத்தும் ஒலி எல்லாம் வேறே...'' என்று சிரித்தவாறே சொன்னாள் அம்மா.

உண்மையில் அந்த நான்கு நாட்களும் அவனால் அந்தச் சாதாரண ஒலிகளைக்கூடத் தாங்க முடியவில்லை.

''உடல் நலம் சரியில்லாத போது அப்படித்தான் இருக்கும்.'' என்றாள் அம்மா.. பின் தொடர்ந்து, ''அப்படி இருக்கும் போது தேவைக்கு அதிகமான ஒலியை நாங்கள் எழுப்பியிருந்தால், உனக்கு எப்படி இருந்திருக்கும்.....?'' என்று கேட்டாள்.


''நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை...'' என்றான் ராஜன்.

''வயதானவர்கள், குழந்தைகள் போன்றவர்கள் தேவையில்லாத சப்தத்தினால் பாதிக்கப் படுவார்கள்.''

''அம்மா, அம்மா, இவ்வளவு நாள் நான் எவ்வளவு சப்தம் செய்திருக்கிறேன். இனிமேல் ... இனிமேல்...'' என்று பேச முடியாமல் தவித்தான் ராஜன்.


''அதிக சப்தம் செய்யாமல் எல்லா வேலைகளையும் செய்வாய், அப்படித்தானே?'' என்றாள் அம்மா.

''ஆமாம்'' என்று சொல்லிச் சிரித்தான் ராஜன்.




பழமொழிப் புதிர்

புதிர்—49



புதிர்—50



ஒவ்வொரு படமும் ஒரு பழமொழியைக் குறிக்கின்றது. எந்த எந்தப் பழமொழிகள்?

— விடை 70 ஆம் பக்கம்.



— வாண்முகில் —

கால்வலி — என்று நட்ட நடுக் காட்டில், ஒரு மொட்டை மரக் கட்டை மேல் குந்திவிட்டார் திப்பிலி ராஜா.

கால்வலிதானே! கவலைப்படேல்! அரை வலி, முக்கால் வலி வரட்டும்; ஓயலாம்! — என மந்திரி ஆறுதல் கூறினார். ஆனால், அவர் ஒரு நீலகிரித் தைல மரத்தின் மேல் முதுகை உரசினார்; இலை பறித்துத் தன் கால்களின் மேல் அழுத்தித் தேய்த்தார்.

''மந்திரி! அம் மரத்திலேறி ஏதாவது வழி தெரிகிறதா என்று பாருங்களேன்!''

மந்திரி மயங்கினார். மரம் ஒல்லி.

''மரம் ஏறத் தெரியாத உம்மை, எந்த மடையன் காட்டு மந்திரியாக்கினான்?''

''அரசே! ஏறத் தெரியும். இறங்கத் தெரியாது!''

''பரவாயில்லை மந்திரி! நீங்கள் மரத்தின் மேலிருந்தே வழி காட்டுங்கள்!'' என்றார் ராஜா. ஆனால், மந்திரி மரத்தடியைச் சுற்றி இலைகளிடையே எதையோ தேடினார்.

''மந்திரி! வழி தேடச் சொன்னால் இலை தேடுகிறீரே!''

''அரசே! இலைதான் இனிமேல் வழி காட்டும். நீங்கள் இன்று காக்காய் வேட்டைக்குப் புறப்பட்ட நேரம் சரியில்லை. புனுகு பூனை மியாவியது. கோழி, குருவி மூக்கின் மேல் உட்கார்ந்தது. காட்டில் வழி தவறிவிடும் என அப்பொழுதே அஞ்சினேன். எனவேதான், நான் வழி நெடுக இலைகளைப் போட்டுக் கொண்டே வந்தேன். அந்த இலை வரிசையைக் கண்டு பிடித்து விட்டால், அரண்மனைக்கு அரை மணியில் திரும்பி விடலாம்! ஆப்பம் சாப்பிடலாம்!''

''லாமா? என்ன இலை!''

''தைல இலை!''

''என்ன தைலம்?''

''நீலகிரித் தைலம்.''

ராஜா மேலே பார்த்தார். அவர் தலை சுற்றியது. நீலகிரித் தைல மரங்கள் தலைகளை ஆட்டிச் சிரித்தன.

அமைச்சர்களும், அதிகாரிகளும், காக்காய்பிடிப்பதைத்தடுக்க, அறுபது ஆண்டுகளுக்கு ஒரு முறை வரும் குரோதன ஆண்டில், ராஜா காக்காய் வேட்டையாட வேண்டுமாம்! அப்படித்தான் குருவியா மலைப் புல் வெட்டுகளில் உள்ளதாம். அதனைத் தொல் பொருள் துறைத் தோட்டக்காரன் கண்டு பிடித்துக் கூறியிருந்தான். மேலும் காமம், குரோதம், முதலானவற்றை ஒழிக்க வேண்டும் என ராஜகுரு ரகசியமாகச் சொல்லியிருந்தார். அதன்படி, நாட்டில் இருந்த குரோட்டன்ஸ், குரோமியம் — முதலானவற்றை ஒழித்துவிட்டுக் குரோ (crow) வேட்டையாடக் காட்டுக்குப் போனார் ராஜா. போன இடத்தில் வழி தவறிப் போனதே!

திடீரென மந்திரி துள்ளினார்.

"என்ன மந்திரி? புற்றிலிருந்து எறும்பு கடித்து விட்டதா?"

"கண்டேன் இலையை! காய் — இலை வரிசையை! பத்து இலைகளுக்கு இடையே ஒரு காய் வீதம் போட்டிருந்தேன். அது தானே இடி சனின் இலை விதி?" என மந்திரி குனிந்து குனிந்து நடந்தார்.

"உம்மை நம்பி வந்தது என் தலைவிதி." என்று தலையிலடித்துக் கொண்ட ராஜா, அவரைப் பின் தொடர்ந்தார். அதைக் கண்ட சூரியன் மறைந்தது. மின்னல் சிரித்தது. இடி மின்னியது.

"இதுவா இடி-சன்-னின் விதி?" என ராஜா கேட்டு முடிப்பதற்குள் வானம் மழையத் தொடங்கிவிட்டது. இருவரும் ஒரு பாறையின் கீழ்ப் பதுங்கினர்.

வழி காட்டும் இலை வரிசையை மழைநீர் அடித்துக் கொண்டு போய் விடுமே என மந்திரி அஞ்சினார். பசிக்குமே என ராஜா கெஞ்சினார். பசி மயக்கத்துடன் கண்களை மூடினார். ராஜாவின் தலையில் ஐந்தறைத்தலைக் கவசம் இருந்தது. அதில் ஒரு விசையை மந்திரி நைசாக அழுத்தினார். கவசத்தில் ஓர் அறை திறந்தது. உள்ளேயிருந்த குளுகோஸ் பொட்டலத்தை மந்திரி எடுத்துக் கொஞ்சம் வாயில் கொட்டினார். பொட்டலம் பிரிக்கும் சத்தம் கேட்ட ராஜா 'டபக்' என்று கண் விழித்தார்; பொட்டலத்தை 'லபக்' என்று பிடுங்கி, மீதிக் குளுகோஸைத் தன் வாயில் கொட்டிக் கொண்டார். இருவரும் மழை நீரைக் குடித்துப் பசியாறினர்.

உண்ட களைப்புடன் ராஜா பாறை மீது சாய்ந்தார்.

படார்!

பாறை பிளந்தது.

உள்ளே

குகை!

"ராஜா! மழைக்கு உள்ளே ஒதுங்கலாமே!"

"மந்திரி! புலியும் பதுங்கலாமே!"

"அஹ்-ஹஹ்-ஹா — புலிக்குப் பயந்தவன் பொறுப்புள்ள காட்டு மந்திரியாக இருக்க முடியுமா? தைரியமாக முன்னால் போங்கள், நீங்கள். நான்



பின்னால் வருகிறேன், காவலாக. 'பெரியவர் பின் செல்' என்று என் பாட்டி சொல்லியிருக்கிறார்!''

குகையினுள் பயங்கரமாக, கறுப்பாக ஏதோ தெரிந்தது.

''மந்திரி! உ ள் ளே ஏதோ கறுப்பாக.....''

''அதுதான் இருட்டு! கண்ணை மூடிக் கொண்டு, வலது காலை முதலில் எடுத்து வைத்து, நுழையுங்கள் ராஜா, இருட்டு மறைந்து விடும்.''

இருவரும் அஞ்சாது உள்ளேறினர். குகை சிறுத்தது. அவர்கள் அங்குதான் தூங்க வேண்டும் என மழை முடிவு செய்தது. மந்திரி குகையினுள் கிடந்த சுள்ளிகளைச் சேர்த்தார். ஐந்தறைக் கவசத்தின் இரண்டாம் அறையிலிருந்த முக்கி-சிக்கிக் கற்களைத் தட்டி நெருப்புண்டாக்கினார். அந்த நெருப்பு வெளிச்சத்தில் தன் தலைப் பாகையைப் பிரித்து, தீப்பெட்டியைத் தேடி எடுத்தார்; அத்தீப் பெட்டியினால் சுள்ளிகளைக் கொளுத்திக் குளிரை விரட்டினார் மந்திரி.

மல்லாந்து படுத்திருந்த ராஜா, திடீரென,

''மந்திரி! அது என்ன வரி?'' என்றார்.

''வரியில்லை ராஜா! நரி!''

''இல்லை! வரிதான். சரி! பார் சுவரில்!''

எரி சுள்ளியின் ஒளியில் குகைச் சுவரில், சில வரிகள் தெரிந்தன. வெள்ளை, சிவப்புக் கோடுகள்!

''ஆ!'' என மந்திரி மண்டையை ஆட்டினார்.


''என்ன? உன் மண்டையில் மண் புழு கொட்டி விட்டதா?''

''இல்லை ராஜா! முடி எப்பொழுதோ கொட்டி விட்டது! மூவுலகும் உங்கள் மேல் புகழ் கொட்டப் போகின்றன. நீங்கள் அரிய குகை ஓவியங்களைக் கண்டு பிடித்துவிட்டீர்களே! இவை குப்தர் காலத்துக் குகை ஓவியங்கள். கொலம்பஸ் காணாக்குகை ஓவியங்கள்!''

என ஆனந்த நடனம் ஆடினார் மந்திரி. ஆடிக் களைத்தபின், இருவரும் ஓவியங்களை ஆராயத் தொடங்கினர்.

முதல் ஓவியத்தில் ஒரு குச்சி மனிதன், இரு கைகளையும் பக்க வாட்டில் மடக்கி மூன்று விரல் காட்டிக் கொண்டிருந்த விநோதமான காட்சி மங்க





லாகத் தெரிந்தது.

"மந்திரி! குகை மனிதன் மூன்று விரல் காட்டுவது ஏன்?"

"ராஜா! அது ரகசியம். அதுதான் திரிநிரந்தரீகத் தத்துவமாக இருக்கலாம். குக்கை மனிதன், தான் வானில் கண்ட மூன்று நிரந்தரப் பொருள்களை ஓவியத் தத்துவமாக்கி விட்டான்."

"மந்திரி! சூரிய சந்திரர்கள் இரண்டு! விரல்களோ மூன்று!"

"காலைச் சூரியன், மாலைக் கதிரவன், சந்திரன் என மூன்று கணக்கிட்டிருக்கலாம்."

"கலாம். மூன்று வேளைச் சோற்றினையும் கணக்கிட்டிருக்கலாம்."

"கலாம். கணவன், மனைவி, ஒரே குழந்தை என மூன்று."

"அல்லது — அந்த நாள் ஆசாமிக்கு மூன்று விரல்களோ?"

"சரி! அதைத் தொல்பொருள் துறைத் தோட்டக்காரன் ஆய்வு செய்யட்டும். அடுத்த ஓவியத்தை நாம் பார்ப்போம்."

அடுத்த ஓவியத்தில், ஒரு குண்டுக் கோமாளி சாய்வாக இருந்தான்.

"மந்திரி! இது உண்டு களைத்த குண்டுக் கோமாளி தரையில் உருண்டு புரளும் ஓவியம்!"

"இல்லை! இவன் நீச்சல் அடிக்கிறான்."

"இது நீச்சல் பயிற்சிக் குகையோ?"

"குகையில் நீச்சலா!"

"அறையில் ஆடி, அரங்கத்தில் ஆடு. குகையில் நீந்திக் குளத்தில் நீந்து என எங்கள் பாட்டி சொல்லியிருக்கிறார்கள்."

"பாட்டி சொல்லைத் தட்டாதே!"

"அந்தக் காலத்தில் குகையிலே நீர் இருந்திருக்கலாம். காலப் போக்கில் அது ஆவியாகி விட்டிருக்கலாம்!"

"கலாம்! அடுத்த படம்?"

அடுத்த படத்தில் ஒரு பையன் கையில் புத்தகம் வைத்துக் கொண்டு படிப்பது போல இருந்தது. அதைப் பற்றி ராஜாவும் மந்திரியும் ரகசிய விவாதம் நடத்தினர். அந்தக் காலத்தில் நூல் ஏது? துணி நெய்ய நூல் இருந்ததே! ஒரு வேளை கல்சிலேட்டாக இருக்கலாம். கல்வெட்டாகவும் இருக்குமோ? ஒற்றைக் கையில் சிறு பையன் கல்வெட்டினைத் தூக்கிப் பிடிக்க முடியுமோ? ஏன் முடியாது? இன்றைய மனிதர் புற்கால மனிதர். அன்றைய மனிதர் கற்கால மனிதர்.

பலசாலிகள்.'' இப்படியெல்லாம் விவாதம் நீண்டது. இறுதியில் ராஜா,

''அந்தப் பையன் ரொட்டித் துண்டைக் கடிக்கப் பார்க்கிறான்,'' என்று தீர்ப்பளித்தார். ராஜாவுக்குப் பயங்கரப் பசி வந்துவிட்டது. அதற்கு மேலும் ஆராய்ந்தால் தன்னையே கடித்து விடுவார் எனப் பயந்த மந்திரி, சுள்ளியை அணைத்துவிட்டுப் பள்ளி கொண்டு விட்டார். ராஜாவும், ஊட்டியில் தான் தொடங்கிய தூக்கத் தொழிற்சாலையை எண்ணி ஏங்கியபடி கண் வளர்ந்தார்.

முதலில் மந்திரி மெதுவாகக் குறட்டை விட்டார். 'கரடி உறுமுகிறது' எனப் பயந்த ராஜா, காதை மூடிக் கொண்டால் கரடியிடமிருந்து தப்பலாம் என எண்ணித் தன் குரங்குக் குல்லாயைக் காது வரை இழுத்து விட்டுக் கொண்டார். அது கண்ணையும் மூடி விட்டது. தூங்கும் பொழுது கண் தெரியாவிட்டால், பரவாயில்லை என ராஜா குல்லாயை அப்படியே விட்டு விட்டார். சிறிது நேரத்தில் அவரும் குறட்டை விடத் தொடங்கினார். நள்ளிரவு கொள்ளிவாய்ப்பிசாசுகளின் வெளிச்சத்தில் ஒரு கழுதைப் புலி இரை தேடி வந்தது. குகையினுள் எருமைச் சண்டை நடக்கிறது என்று அஞ்சி, அது ஆறு கல் தூரம் ஓடி விட்டது.

மறு நாள் மதியம் அங்கு வந்த இடையன் ஏழு மலை, தான் வெயிலுக்கும் மழைக்கும் ஒதுங்கும் குகை திறந்து இருப்பதைக்கண்டு, பயந்தான். குகை வாயிலருகே நின்று வாயினால் ஊ...... என்று ஊளையிட்டான். பின் தைரியமாக உள்ளேறினான். சுவர் ஓரத்தில் எதையோ தேடினான். கிடைக்க வில்லை. தான் பொழுது போக்காகக் குகைச் சுவரில் படங்கள் வரைந்து விட்டு, ஓரமாக வைத்துச் சென்றிருந்த மாவுக்கல்லும், செங்கல்லும் காணவில்லையே எனத் திகைத்தான். காட்டில் திருடியவர்கள் கள்ளர்களா? குகையில் நுழைந்தவர்கள் குள்ளர்களா? திப்பிலி ராஜாவிடம் புகார் செய்ய வேண்டும்.

அன்று மாலை, அரண்மனைக் கழுதை வண்டியொன்று குகை வாசலில் நின்றது. அதனுள்ளிருந்து செய்தி நிருபர்களும், லென்சர்களும், ஆய்வர்களும் அவசரமாகக் குதித்தனர். ராஜா, வண்டியிலேயே எழுந்து நின்றார். அதைக் கண்டு பயந்த இடையன் புதர்களிடையே புகுந்து ஓடினான்.

''ஆதி மனிதன் அதோ ஓடுகிறான் பிடியுங்கள்!'' என ராஜா வண்டியில் நின்ற படியே குதித்தார். கழுதை மிரண்டு வேகமாக ஓடியது!



ஹோட்டலில் சாப்பிடுபவர்: என்னப்பா, மெது வடையில் நூல் வருது?

சர்வர்: நேத்திக்கு வடை 'பஞ்சு' போல் இருக்குதுன்னு சொன்னீங்களே. இன்றைக்கு நூலாயிடுச்சி.

— க. இராமலிங்கம்.

பழமொழிப் புதிர் — விடை:

புதிர் — 49: சுவரை வைத்துத்தானே சித்திரம் எழுத வேண்டும்?

புதிர் — 50: சேற்றில் பிறந்த செந்தாமரை போல்.



மாமல்லன் விருது

பல்லவ மன்னன் மாமல்லன் பேர் தாங்கிச் சிறப்புற்ற விளையாட்டுக் கலைஞர்களுக்கு விருது வழங்கும் விழா 1983 — ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது! இந்த வருடம் புதுமையாக பீஷ்மர் விருது பயிற்சியளிக்கும் 'கோச்' களுக்கு வழங்கியிருக்கிறார்கள். தலைசிறந்த விளையாட்டுக் கலைஞர்களைச் சர்வதேச, தேசிய அளவில் தயாரித்துத் தரும் 'கோச்' களுக்கு இந்த விசேஷ விருது வழங்கப்படுகிறது!

1987 — 88 — ஆம் ஆண்டு கேரளத்தில் நடைபெற்ற தேசியப் போட்டிகளில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பெற்றது தனிச் சிறப்பு!

உயரம் தாண்டலில் 1.40 மீட்டர் உயரம் தாண்டி 1984 — ஆம் ஆண்டிலேயே ஏஞ்செலா லின்சி புகழ்பெற்றாள்! சிதம்பரனார் மாவட்டத்திலுள்ள நாஸரேத்தில் பிறந்த ஏஞ்செலா லின்சி விளையாட்டுக் கலைக் குடும்பத்தைச் சார்ந்தவள்! நாளுக்கு நாள் தன் திறமையை வளர்த்துக் கொண்டு 1.73 மீட்டர் உயரம் தாண்டித் தேசிய ரிகார்டு கண்டிருக்கிறாள்! 1987 — ஆம் ஆண்டில் லின்சி மூன்று தங்கப் பதக்கங்களைச் சூடியது தனிச் சிறப்பு/தென் ஆசிய ஃபெடரேஷன் பந்தயம் கல்கத்தாவில் நடந்த போதும் தேசிய பள்ளி விளையாட்டுப் போட்டியிலும் ராஞ்சியில் நடைபெற்ற தேசிய அதலெடிக் போட்டியிலும் இந்தத் தங்கப் பதக்கங்களைப் பெற்றாள் இவள். இன்று உயரம் தாண்டலில் சர்வதேசப் போட்டியிலும் பங்கு பெறும் அளவுக்கு முன்னேறி வரும் ஏஞ்செலா லின்சிக்கு மாமல்லன் விருது வழங்கப்பட்டுள்ளது!

பளு தூக்கும் கலையில் விற்பன்னர் எம். குமரன்! வட ஆர்க்காடு மாவட்டம் வேலூர் சத்துவாச்சாரியில் பிறந்



தவர் இவர். தேசிய சர்வதேச அளவில் முன்னேறிக் கொண்டிருக்கும் குமரன் தென்னிந்திய ரயில்வேயில் உத்தியோகம் பார்க்கிறார். 1987 — ஆம் ஆண்டில் எர்ணாகுளத்தில் சீனியர் தேசிய எடை தூக்கும் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றவர்! ஆஸ்திரேலியா கான்பெர்ராவுக்கும் சென்று காமன்வெல்த் பளு தூக்கும் போட்டியில் ஒரு தங்கத்தைச் சூடி வந்தவர் குமரன்! மாஸ்கோவுக்குச் சென்ற போது இவரால் வெள்ளிப் பதக்கமே பெற முடிந்தது! சர்வதேச அளவில் பளு தூக்கும் கலையில் இந்தியாவுக்குப் பெருமை தேடித் தரும் எம். குமரனுக்கு 1989 ஜனவரி 7 — ந் தேதி மாமல்லன் விருது கிடைத்திருக்கிறது!

ரயில்வேக்கு ஓர் அதிர்ஷ்டம் பல விளையாட்டுக் கலைஞர்களைப் பெற்றிருப்பதுதான்! 1987 — ஆம் ஆண்டு மூன்று தங்கப் பதக்கங்களை நீச்சல் போட்டியில் பெற்றவர் சனல்குமார். கல்கத்தா தெற்காசிய ஃபெடரேஷன் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற இவர், 1987—88—ஆம் ஆண்டுகளில் திருச்சூரில் நடைபெற்ற தேசீய நீச்சல் போட்டிகளில் தமிழகக் குழுவின் அங்கத்தினராக ஐந்து தங்கப் பதக்கங்கள், ஒரு வெள்ளி பெறக் காரணமாக இருந்தவர். நீச்சல் கலையில் தமிழகத்துக்குப் பெருமை சேர்க்கும் சனல் குமாருக்கு மாமல்லன் விருது இந்த வருஷம் கிட்டியுள்ளது!


மாமல்ல விருது தவிர சாதனைப் பரிசாளர்களாகக் கூடைப்பந்து எம். செந்தில் வடிவேலு, பாக்ஸிங் தேவானந்த், திருநாவுக்கரசு, துப்பாக்கிசுடும்வீராங்கனை ரூபா உன்னி கிருஷ்ணன், துப்பாக்கி சுடும் கலைஞர் கௌதம் ராமதாஸ், சைக்கிள் வீராங்கனை கீதாராணி, அதலெடிக் எம். வி. ராஜசேகர் ஆகியோர் கௌரவிக்கப் பட்டார்கள்!

விளையாட்டுக் கலையில் ஊக்கமும் உற்சாகமும் பெருகுவதற்கு 'மாமல்லன் விருது' உறுதுணையாக அமையும். தமிழ்நாடு ஒலிம்பிக் சங்கத்தின் சேவையினால் தமிழகம் விளையாட்டுக்களில் முன்னேற வழியுண்டு!

— குண்டுமணி.

சந்தன மாலை

வேணு சீனுவாசன்



"அடேயப்பா! இந்த மரம் எவ்வளவு உயரமாக இருக்கிறது! உச்சியைப் பார்க்க விரும்பினால் கழுத்து சுளுக்கிக் கொள்ளும் போல் இருக்கிறதே!" என்று உயர்ந்து ஓங்கி வளர்ந்த காட்டு மரங்களைக் கண்டு அதிசயப்பட்டுப் போனான் சங்கர்.

எங்கு பார்த்தாலும் மரங்கள் நெருங்கி அடர்த்தியாக வளர்ந்து இருந்தன. பலநிற வண்ணத்தில் வித விதமான மலர்கள் மலர்ந்து காற்றில் ஆடிக் கொண்டு இருந்தன. மலர்களை நாடித் தேன் குடிக்க வரும் வண்டுகளின் ரீங்கார ஒலியும், நீர் தேடி வரும் காட்டு மான்களின் சலசலப்பும், மரத்துக்கு மரம் தாவி விளையாடும் குரங்குகளின் கூச்சலும் அந்தக் காட்டுப் பகுதிக்கு ஒரு தனியான அழகை ஏற்படுத்தி இருந்தன.

கோடை விடுமுறையைக் கழிக்க, பரபரப்பான நகரத்தில் இருந்து, இந்த மலைப் பகுதிக்கு வந்த சங்கருக்கு அந்தக் காட்சிகள் மகிழ்ச்சியைத் தந்தன.

சங்கரின் சித்தப்பா காட்டிலாகா அதிகாரியாக அந்தப் பகுதியில் பணியாற்றுகிறார். காட்டைச் சுற்றிப் பார்க்க ஆசை ஏற்பட்டதால் இந்த முறை இங்கு வந்திருக்கிறான். நூறு மைல் சுற்றளவில் பரந்து கிடந்தது அந்தக் காடு.

"சங்கர், அதோ அந்தப் பகுதியில் வளர்ந்து இருக்கும் மரம் என்ன மரம் என்று உனக்குத் தெரியுமா?"

"அவை சந்தன மரங்கள் தானே?"

"அடேடே, எப்படிக் கண்டுபிடித்தாய்? நீ எப்போதாவது சந்தன மரத்தைப் பார்த்து இருக்கிறாயா?"

"இப்போதுதான் பார்க்கிறேன், சித்தப்பா! ஆனால், சந்தன மரத்தின் சிறப்பான இயல்பை ஆசிரியர் கூறி இருக்கிறார். சந்தன மரத்தைச் சுற்றிக் கொடிகள் பின்னி வளர்ந்திருக்கும் என்றும், அந்தக் கொடிகளில் இருந்து சத்து நீரை உறிஞ்சிச் சந்தன மரம் வளரும் என்றும் கூறியதோடு இது ஓர் அரை ஒட்டுண்ணி என்றும் கூறியிருக்கிறார்."

"அடேயப்பா! அறிவியல் செய்தி ஒன்றை அடிப்படையாக வைத்துச் சந்தன மரத்தை ஊகித்து விட்டா

மிக நன்று. இந்தியாவிலேயே வேர்ப் புல்லுருவி சந்தன மரம்தான். வேறு தாவரத்தின் வேர்களுடன் சந்தன மரத்தின் வேர் ஒட்டிக் கொண்டு உணவுச் சத்து மிகுந்த சாற்றை உறிஞ்சி, நன்கு வளர்ந்து வைரம் பாய்கிறது. அதன் வேர்களின் வைரமே சிறந்தது. தனித்த மரம் வைரம் பாயாது.''


''அப்படியா சித்தப்பா, நறுமணம் மிகுந்திருப்பதால்தான் சந்தன மரங்களின் விலை அதிகம், இல்லையா?''

''அதிக விலை மதிப்புள்ளதால், சில பேராசைக்காரர்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமான மரங்களைத் திருட்டுத்தனமாக வெட்டி விற்கின்றனர். அதைத் தடுப்பதற்காகவே காவலுக்குச் சில ஆட்களை வைத்திருக்கிறேன். இந்தக் கட்டுக் காவலையும் மீறி மரங்கள் களவு போகின்றன. அதை மட்டும் நான் எவ்வளவுதான் முயன்றாலும் தடுக்கவோ, கண்டுபிடிக்கவோ முடியவில்லை.'' இதைச் சொன்ன சங்கரின் சித்தப்பாவின் குரலில் எல்லையற்ற துயரம் தெரிந்தது.

''சந்தன மரம் உள்ள பகுதியில் வேலி கூட அமைத்து இருக்கிறீர்களே! அப்படியுமா மரம் களவு போகிறது?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டான் சங்கர்.

''ஆமாம். அந்தக் கம்பி வேலியில் இரவு நேரங்களில் உயர் அழுத்த மின் சாரம் பாய்ச்சப்படுகிறது. ஆடு மாடுகளோ, மனிதர்களோ அதைத் தீண்டினால் உயிர் இழப்பது உறுதி. அப்படி இருந்தும், கம்பி வேலியை விலக்கி உள்ளே புகுந்து விடுகின்றனர். இது எப்படிச் சாத்தியம் என்பது தெரியவில்லை'' என்றார் சங்கரின் சித்தப்பா.

சங்கர் தன்னுடைய சித்தப்பாவை அனுப்பி விட்டு, இரவிலே மின்சாரம் பாயும் அந்தக் கம்பி வேலியைச் சுற்றித் தனியாக, மண் தரையில் எதையோ கூர்ந்து கவனித்துக் கொண்டே நடந்தான். ஓர் இடத்தில் அவன் கால்கள் தாமாக நின்றன. மண்ணில் பதிந்து இருந்த அந்த அடையாளத்தைப் பார்த்ததும், அவன்



கண்களில் ஒரு புதிய ஒளி தோன்றியது.

அவசரமாக வீட்டிற்குத் திரும்பியவன், சித்தப்பாவின் காதில் ஏதோ ரகசியமாகக் கூறினான். அதைக் கேட்டதும் அவர் முகம் மலர்ந்தது. உடனே அவர், வேடுவர் குடிசையை நோக்கிச் சென்றார். சிறிது நேரங் கழித்து அவர் திரும்பி வரும்போது அவருடன் இரண்டு வேடர்கள், கன்றுக்குட்டி அளவிற்கு வளர்ந்துள்ள இரு பன்றிகளை ஓட்டிக் கொண்டு வந்தனர். எல்லோருமாகக் கம்பி வேலிக்கு அருகே இருந்த ஒரு பெரிய புதருக்குள் பதுங்கிக் கொண்டனர்.

இரவு ஏறிக் கொண்டே இருந்தது. காட்டு மிருகங்களின் ஓலம் நெஞ்சை நடுங்கச் செய்தது. வேறு சில ஏற்பாடுகளைச் செய்து விட்டு வந்த சங்கர், ஒரு டார்ச் விளக்குடன் மற்றொரு புதரில் பதுங்கி மறைந்து கொண்டான்.

ஆந்தை ஒன்று பயங்கரமாக அலறியது. அப்போது அவர்கள் மறைந்திருக்கும் புதருக்கு அருகே கடுமையான இரண்டு சிறிய குன்றுகள் அசைவது புலப்பட்டது. சங்கர் உற்றுக் கவனித்தான். அடர்த்தியான இருளின் நடுவே அவை யானைகள் என்று தெரிந்தது. மூச்சை இழுத்துப் பிடித்தவாறே, நடப்பதைப் பார்த்துக் கொண்டு இருந்தான். நீண்டு வளர்ந்திருந்த தந்தங்களினால் இரண்டு யானைகளும் வெகு லாகவமாக மின்சார வேலியை விலக்கி விட்டு, வழியை ஏற்படுத்தின. மூன்று அல்லது நான்கு பேர் கொண்ட சிறிய குழு ஒன்று மறைவில் இருந்து வெளியே மெல்ல வந்து வேலிக்குள் நுழைய யானைகளைத் தூண்டிக் கொண்டு இருந்தது.

இரண்டு யானைகளும் அவற்றின் உடல் மின்சார வேலியில் படாமல் பக்குவமாக உள்ளே நுழைந்து சந்தன மரங்களை வேரோடு பிடுங்கிக் கொண்டு சிறிது நேரத்தில் வெளியே வர ஆரம்பித்தன. யானைகள் கம்பி வேலியை நெருங்கும் நேரத்தில், சங்கர் தன் கையில் இருந்த டார்ச்



விளக்கை இயக்கி, ஒளியைத் தன் சித்தப்பாவின் மீது பாய்ச்சினான். உடனே அவர்கள் ஒளிந்திருந்த புதரில் இருந்த இரண்டு காட்டுப் பன்றிகளும் ஆவேசமாக உறுமிக் கொண்டு திருட்டுக் கும்பலை நோக்கி ஓடின. பன்றியின் உறுமலைக் கேட்டதும் இரண்டு யானைகளும் கதிகலங்கி, நிலைகுலைந்து துதிக்கையில் வைத்திருந்த மரங்களால் அந்தத் திருடர்களைத் தாக்கியவாறே தறிகெட்டு ஓட ஆரம்பித்தன.

இந்த நிகழ்ச்சியால் ஏற்பட்ட அதிர்ச்சியினால் திகைத்து நின்றவர்களைத் துப்பாக்கிகளுடன் சென்ற காவல் வீரர்கள் வளைத்துப் பிடித்தனர். பல மாதங்களாக ஏமாற்றி வந்த திருட்டுக் கூட்டத்தைக் கையும் களவுமாகப் பிடித்த செய்தி காட்டுத்தீயாய்ச் சுற்று வட்டாரங்களில் அடுத்த நாளே பரவிவிட்டது.

சங்கரின் திறமையே கள்வர்களைக் கைது செய்தது என்று அவன் சித்தப்பா கூறிய போது, எல்லோரும் அதிசயித்தனர். இத்தனை சிறிய பையனுக்கு, இவ்வளவு அறிவுக் கூர்மையா என்று எல்லோரும் வியந்தனர்.

''கம்பி வேலியை விலக்கும் போது யானைக்கு மட்டும் மின்சார அதிர்ச்சி ஏற்படாதா?'' என்று கேட்டார் அவன் சித்தப்பா!

''யானையின் தந்தங்கள் ஓர் அரிதில் கடத்தி. அதில் மின்சாரம் பாயாது. மின்சாரம் தாக்காத வகையில் தந்தங்களாலேயே கம்பி வேலியை விலக்கி வழி ஏற்படுத்த நன்றாகப் பழக்கி, இந்தத் திருட்டுத் தொழிலில் ஈடுபடச் செய்து இருக்கின்றனர். நகரங்களில் சிலர் சில்லறைத் திருட்டுக்குக் குரங்குகளுக்குப் பயிற்சி கொடுத்து, அவைகளை ஈடுபடச் செய்வதைப் போலவே, சந்தன மரங்களைத் திருட இந்தக் கூட்டத்தினர் யானையைப் பழக்கி இருக்கின்றனர்'' என்ற சங்கரை, இடைமறித்து, ''அது சரி, பன்றிகளை எதற்குக் கொண்டு வரச் செய்தாய்?'' என்று ஆவலுடன் கேட்டார் அவன் சித்தப்பா.

''யானை எவ்வளவுதான் பலசாலியாக இருந்த போதிலும், ஒரு பன்றியின் உறுமல் ஒலி அதை நடுநடுங்கச் செய்து விடும்'' என்றான் சங்கர்.


''என்ன! இது உண்மையா? அதிசயமாக இருக்கிறதே!'' என்றனர் எல்லோரும்.

அதற்கு சங்கர், ''இது அதிசயம் மட்டும் அல்ல. சரித்திரம் காட்டும் உண்மை. ரோம் மக்கள் தம் மீது ஏவப்பட்ட பிர்ரஸ் அரசரின் யானைப் படைகளை, பன்றிகளின் உறுமல் ஒலியை எழுப்பச் செய்து குழப்பம் அடைய வைத்துத் திசைக்கு ஒன்றாக யானைகளைச் சிதற அடித்துப் பெரிய வெற்றி கண்டனர் என்று ரோம சரித்திரம் கூறுகிறது. அதே உத்தியை நானும் இங்கு கையாண்டு பார்த்தேன். நான் நினைத்தபடியே திருட்டுக் கும்பல் பிடிபட்டு விட்டது'' என்று கூறிய போது அங்கிருந்த அனைவரும் அவனது அறிவுக் கூர்மையைப் பாராட்டினர். அவன் காட்டிய தீரத்திற்குப் பரிசாக ஒரு சந்தன மாலையை அணிவித்து வாழ்த்தினர்.

மதங்களும் மலர்களும்

இந்த தேசத்தில் பல மதங்கள் இருந்தாலும், அவை ஒரு நந்தவனத்தில் உள்ள பலவித மலர்களைப் போல் இருக்க வேண்டும். அழகிய ரோஜாவில் முள் இருப்பது போல், நம் மதத்திலும் சில குறைகள் இருக்கின்றன. மலரிலுள்ள முட்கள் இயற்கையானவை. ஆனால், மதத்திலுள்ள குறைகளோ செயற்கையானவைதான்.

— ராஜாஜி



பிருந்தாவனக் கவியரங்கம்



விமானம்

மேலே பறக்கும் விமானம்
  மெதுவாய்த் தரையில் இறங்குது.
மாயா ஜாலம் போலவே,
  மனசைப் பறிக்க இழுக்குது!

பஞ்சுப் பொதியாய் மேகமும்
  பார்த்து வழியைக் காட்டுது.
அஞ்ச வேண்டாம் என்றுதான்
  அந்த விமானம் சொல்லுது.

குட்டிக் குட்டிப் பசங்களும்,
  கொம்பு பிடித்த கிழவரும்,
வட்ட மடித்துப் பறக்கவே
  விமானம் நோக்கி வருகிறார்.

உலக மக்கள் யாவரும்
  ஒன்று சேர்ந்து செல்லவே,
இறைவன் கொடுத்த பரிசுதான்
  இந்த விமானம் என்பேனே!

— டி. ஆர். பார்த்தசாரதி (16,354),
சென்னை — 83.



தோட்டத்திலே ஒரு மலர்

தோட்டம் நடுவே ஒருமலர்!
தூய்மை யான தனிமலர்!

பார்க்க அழகாய் இருக்குது.
பல்லைக் காட்டிச் சிரிக்குது.

இனிய தேனைச் சுரக்குது.
கரிய வண்டை இழுக்குது.

இதழை விரித்துச் சிரிக்குது.
இலைக ளுக்குள் ஒளியுது!

பூஜை அறையில் இருக்குது.
மாலை யாக ஜொலிக்குது.


மலரைப் போல நாமுமே
மகிழ்ச்சி யாக வாழ்வோமே!

— இரா. பரமசிவம் (16,320),
புதுமாத்தூர் (தஞ்சை).

அழுது புலம்ப வேண்டாம்

பரீட்சை நாளை இருக்குது.
பாடம் நிறையப் படிக்கணும்.
பாழாய்ப் போன மனசுதான்
பாடம் படிக்க மறுக்குதே!

பள்ளி செல்லாப் பிள்ளைகள்
பாங்காய்த் தெருவில் ஆடிடும்,



பாண்டி மற்றும் பலவிலும்
பாழும் மனசு பாயுதே!

நானும் சென்றேன் ஆடவே,
நாளை தேர்வு இருந்துமே!
எழுந்து படித்தேன் காலையில்
ஏற வில்லை மூளையில்.

பரீட்சை நானும் எழுதினேன்.
பதில்கள் எல்லாம் தவறுதான்.
தேர்வு முடிவு வந்ததே,
தேற வில்லை நானுமே!

அழுதேன் நானும் அதிகமாய்.
அதனால் தேற முடியுமோ?
நன்றாய்ப் படிப்பேன் நானுமே,
என்று கொண்டேன் உறுதியே.

பரீட்சை நேரம் வருகையில்
பல விதமாய் மனத்தையே
அலைய விட்டால் நாமுமே
அழுது புலம்ப நேருமே!

— ஏ. சாகுல் அமீது (20,268),
கோட்டுச்சேரி.

ராணுவ வீரர்

எங்கள் வீரர் போர்வீரர்,
எல்லை காக்கும் நல்வீரர்.

வீரம் என்றும் அவர்மனத்தில்,
வெற்றி என்றும் அவர்நினைவில்.

நாட்டைக் காக்க நல்வழியில்,
நலங்கள் துறந்தார் பலவழியில்,



குளிரை ஏற்றார் உடம்பினிலே,
குண்டடி பட்டும் அஞ்சவில்லை.

ஆயுதம் ஏந்தினார் கையினிலே,
அழித்தார் எதிரியைப் போரினிலே.

வெற்றி பெற்றுத் திரும்புகிறார்
வீரரைக் கூடி வரவேற்போம்.

நாமும் அவர்போல் வீரர்களாய்
நாட்டைக் காக்க முனைவோமே.

— ஓ. செந்தில்நாதன் (11,392).



மூட்டை ஸார்

மூட்டை ஸார், வாருங்கோ!
சேட்டைத்தனம் ஏனுங்கோ!

வீட்டில் வாழப் பயமுங்கோ!
வீண் தொல்லை ஒழியுங்கோ!

நட்ட நடுச் சாமத்தில்
நல்ல தூக்க நேரத்தில்

கொட்டக் கொட்ட விழிக்கிறேன்.
கொடுமை, கொடுமை அல்லவா?

பாய்க் கட்டில் மூலையில்
பஞ்ச ணையின் மீதினில்

பதுங்கிப் பதுங்கி வாழ்கிறீர்!
பரித விக்கச் செய்கிறீர்.

உடம்பி லுள்ள இரத்தத்தை
உரிமை யுள்ள டாக்டர்போல்

உறிஞ்சி உறிஞ்சி எடுக்கிறீர்!
உபத்தி ரவம் கொடுக்கிறீர்!

தூங்கா விரதம் கொள்ளவா?
தூர தேசம் செல்லவா?

தாங்குமா இத்தேகம் ஸார்!
தயவுசெய்து போங்கோ ஸார்!

— தேனி எம். செந்தில்வேலன்
(குமார் 141), தேனி.

கவிதை பிறந்த கதை

சின்னஞ் சிறு கிளியே



தே.ப.பெருமாள்

சிறுவர்களுக்கு இளம் பருவத்திலேயே நல்லொழுக்கங்களையும், பண்புகளையும் போதிக்க வேண்டும் என்ற கருத்துடன் நான் எழுதிய பாடல்கள் பலவாகும். அவற்றுள் ஒன்று 'மறவாதே' என்பது. அந்தப் பாட்டை நான் என்றும் மறப்பதில்லை'' என்று கூறுகிறார் கவிஞர் தே. ப. பெருமாள் அவர்கள். அந்தப் பாட்டு —



பெற்ற தாயை மறவாதே
பேணும் தந்தையை மறவாதே
கற்ற குருவை மறவாதே
கடவுள் எண்ணம் மறவாதே!

கல்வியை என்றும் மறவாதே.
கற்றதைச் செய்ய மறவாதே
நல்லவர் சொல்லை மறவாதே.
நாட்டுப் பணியை மறவாதே!

ஒழுக்கம் தன்னை மறவாதே.
உண்மை பேச மறவாதே.
முழுக்க முழுக் நற்செயல்கள்
'முயன்றும்' செய்ய மறவாதே!

''தாய் மொழிப்பற்று இளம்பிராயத்திலேயே வளர வேண்டும் என்பது என் ஆவல்'' என்று கூறும் கவிஞர், அந்த ஆவலைத் தம் பாடல் மூலம் நிறைவேற்றிக் கொள்கிறார்.

எங்கள் இன்பத் தமிழ்மொழி
இசைகள் நிறைந்த உயர்மொழி
தங்கி நிற்கும் திருக்குறள்
தந்த அழகுத் தமிழ்மொழி.

எண்ணும் கம்பன் காவியம்
இசைந்த தெங்கள் தமிழ்மொழி
வண்ணச் சிலம்பின் கதையினை
வகுத்துச் சொல்லும் தமிழ்மொழி.

மண்ணில் நாங்கள் பிறந்ததும்
மழலை மொழிந்த தமிழ்மொழி
பண்ணில் கலந்து தாயுமே
பழக்கித் தந்த தேன்மொழி!

ஒரு மரத்தின் கிளையிலிருந்து கிளி ஒன்றை, ஏழு வயதுச் சிறுமி ஒருத்தி பார்த்து, உள்ளம் பூரிப்படைகிறாள். அதன் அழகைப் பார்த்தும், குரலைக் கேட்டும் மகிழ்ச்சி கொள்கிறாள். அப் பெண், அக் கிளியிடம் பேசினால் எப்படி இருக்கும்? கவிஞரே அதைப் பாடலாக்கித் தருகிறார்:

சின்னஞ் சிறுகிளியே — பச்சை
சேலை அணிந்தவளே!
கன்னல் மொழிபேசி — என்னைக்
களிக்க வைப்பாயோ?

கண்ணும் குளிராகி — நெஞ்சம்
களிப்பில் மூழ்கிடவே
எண்ணி நீ ஈசனிடம் — மரகத
எழிலைப் பெற்றாயோ?

மேற்றிசை வானத்திலே — ஒழுகும்
வண்ணக் குழம்புகொண்டே
ஏற்றிய கோலமதில் — அலகும்
இத்துணைச் செந்நிறமோ?

பாலும் சுவைக்கனியும் — கிளியே
பசிக்கு நான்தருவேன்.
பூவனில் உண்டிடலாம் — என்
அருகே வந்திடுவாய்!



''ஒருமுறை நான் கிராமத்தில் இருந்த போது, மரத்திலிருந்த குரங்கு ஒன்று தாவிக் குதித்து வந்து, வீடுகளின் மேல் நடந்து கொண்டிருந்தது. இதைப் பார்த்த சிறுவர்களுக்கு ஒரே கொண்டாட்டம். துள்ளிக் குதித்துக் கை தட்டி ஆர்ப்பரித்தார்கள். அந்தக் குரங்கிடம் கேட்பது போல், என்னவெல்லாமோ பேசிக் கொண்டார்கள்'' என்று கூறும் கவிஞர், அந்தக் காட்சியைக் கற்பனை செய்து பார்க்கிறார்... கவிதை பிறக்கிறது.

கொப்புவிட்டுக் கொப்பு தாவிக்
குறுகுறுக்கும் குரங்கே! — வழி
தப்பி எங்கள் வீட்டு மோட்டில்
எப்படிநீ வந்தாய்?

ஓடு தட்டிக் கேடு செய்து
உட்காரல் ஏனோ? — கொடும்
காடுவிட்டு நாடு வந்தும்
கடுந்தன்மை தானோ?

குட்டிக் கரணம் போட்டு மாயக்
கும்மாளம் காட்டிட — உன்னைக்
கெட்டித் தனமாய்ப் பழக்கு வானே
கிலுகிலுப்பைக் காரன்!

மனித னைப்போல் தோன்றும் உன்னை
மதிநலம் மிக்கோர் — ஆய்ந்து
மனித இனத்தின் ஆதி என்ற
வார்த்தை உண்மையோ?

இரவு நேரம்!

அழுது கொண்டிருந்த குழந்தையின் அழுகையை அடக்குவதற்காய் அதன் தாய் அதை எடுத்துக் கொண்டு முற்றத்தில் வருகிறாள். குழந்தைக்கு வானவெளியைக் காட்டுகிறாள். அங்கு நிறைய நட்சத்திரங்கள் பிரகாசித்துக் கொண்டிருந்தன. தாய் தன் குழந்தையிடம், அந் நட்சத்திரங்களைக் குறித்துப் பல செய்திகளைச் சொல்கிறாள். அருகே இருந்த கவிஞர் துள்ளிக் குதித்தார். அவருக்குக் கவிதை எழுத கதை கிடைத்து விட்டதே! உடனே காகிதத்தை எடுத்தார். மளமளவென எழுதினார். அந்த மகிழ்ச்சிக் கவிதை இதுதான்:

வானத்தில் மின்னுகின்ற
தாரகையைப் — பாப்பா!
மனத்தாலே கணக்கெடுத்துக்
கூறுவையோ பாப்பா?

கானகத்தின் மலர்போலக்
காட்சிதரும் பாப்பா!
கண்சிமிட்டி நம்மையுமே
கூப்பிடுமே பாப்பா!

நிலாவொளியில் முத்தாகத்
திகழ்ந்திடுமே — பாப்பா!
நெடுவானில் வெண்காசாய்
நிறைந்திடுமே பாப்பா!

பலாப்பழமும் வாங்கிடவே
பயன்படுமோ பாப்பா!
பணமற்றோர் துயர்போக்க
வழிசெய்யுமோ பாப்பா!

பேட்டி: பி. வி. கிரி.

சார் தபால்!

என் ஓட்டு கோகுலத்திற்கே!

* எனது ஓட்டு கோகுலத்திற்கே!
ஆம், சிறுவர் (வார இதழ்கள், மாத இதழ்கள்) தேர்தலில் நின்றால், என் ஓட்டு கோகுலத்திற்கே!

— எம். கணேஷ்பாபு (8519)
சென்னை - 44

* உலகப் புகழ் பெற்ற பாடகியான திருமதி எம். எஸ். அவர்கள் எளிமையாகவும் அடக்கத்துடனும் எழுதியிருப்பது நிறைகுடம் தளும்பாது என்பதையே நினைவூட்டுகிறது.

— வி. வனஜா, குத்தாலம்.

* திக்கெட்டும் புகழ்பரப்பும் இசைமேதை திருமதி எம். எஸ். அவர்களின் குழந்தைப் பருவம் சிறுவயதில் எவ்வளவு அடக்கமாக இருக்கவேண்டும், பணிவாக இருக்க வேண்டும், கவனமாக இருக்க வேண்டும் என்பது போன்ற அவர் மனம் திறந்து கூறிய வரிகள் நெஞ்சில் நன்கு பதிந்துவிட்டன.

— தேனி முருகேசன், தேனி.

* எம். எஸ். சுப்புலட்சுமி அவர்களின் குழந்தைப் பருவம் மிகவும் வித்தியாசமாயிருந்தது. என் போன்ற இசைப் பிரியர்களுக்கு இப்பகுதி பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை.

— பி. பிரசாத், குத்தாலம்

* 'அவன் ஏன் சிரித்தான்' பாடலைப் படித்து நாங்கள் எல்லாருமே சிரித்தோம்.... ஆமாம், ஏன் தொடர்ந்து 'பழைய கதை; புதிய பாடல்,' வருவதில்லை.

— ஆர். ரமேஷ், சென்னை - 18

* திருப்பத்தூர் திருத்தனியான் அவர்களின் 'அவர் ஓர் அசகாய சூரர்!' கட்டுரை, உலகில் இப்படியெல்லாம் கூட விந்தை மனிதர்கள் இருந்தார்களா? என்று வியக்க வைத்தது.

— கே. என். தியாகராஜன், சென்னை-4

* பூதலூர் முத்து அவர்களின் 'வண்ணத் தோட்டத்தில் வானம்பாடிகள்' எளிய நடையில், அருமையான கருத்துக்களை இனிய சம்பவங்களோடு இணைத்து எழுதப்பட்டுள்ளது. அத் தொடர்கதையை ஒரே மூச்சில் படித்துமுடித்துவிட ஆவல். அதற்காகவாவது கோகுலத்தை வார இதழாக மாற்றினால் என்ன?

— இரா. சுந்தரவரதன், சேலம் - 8.

* 'வெண்புறாக்கள் பறக்கட்டும்' சிறுகதை சிறப்பான ஒரு சிறுகதை. இனிய தலைமுறையினரின் நெஞ்சிலே இப்போதே நல்லதை விதைத்தால் ஓர் அமைதியான உலகம் நாளை உருவாகும் என்பது திண்ணம்.

— கிருஷ்ணப்ரியா, அம்மாபேட்டை

* தொடக்கப் பள்ளிகளுக்குப் புத்தகங்கள் வாங்குவது கேட்டு மிகவும் மகிழ்ச்சி. என் தம்பி 4—வது படிக்கிறான். இந்த நல்ல செய்தியைக் கேட்டு அவன் ஒரேயடியாகக் குதிக்கிறான், மகிழ்ச்சியில்.

— என். சீதாலட்சுமி, கோவை - 2

* கல்வித்துறையினரின் முயற்சிக்குப் பாராட்டுக்கள்.

— என். நாதன் பாபு, திருவிடைமருதூர்

* 'மின்மினிக் கதைகள்' ஒவ்வோர் இதழிலும் வெளிவந்து எங்களை மகிழ்விக்கின்றன. இக்கதைகளை எங்கிருந்து, எப்படித்தான் தேடிப் பிடித்து எங்களுக்குத் தருகிறீர்களோ!

— சி. முத்துராமன், வேதபுரி

* எந்த எந்த மாதங்களில் தலைவர்கள் பிறந்தார்கள் என்பதை அறிவதோடு, அவர்களது படங்களையும், அவர்களைப் பற்றிய செய்தியையும் அறிவிக்கும் கோகுலத்தின் பணி சிறந்த பணி.

— இரமேஷ் பெருமாள் (12,072),
சேலம் — 30.

* 'பக்த துகாராம்' ஆனந்தி அவர்களின் கதைக்கு ஓவியர் வினு உயிர் கொடுத்துள்ளார். அருமையான படக்கதை.

— க. செந்தில் முருகன் (11462),
வெறையூர்

* கலப்படம் செய்து விற்றால், மக்களுக்குத் தீமை உண்டாக்கும் என்பதை 'எது பெரிது' கதை அருமையாக விளக்கியது. பிரபாகரனின் கருணை உள்ளத்தையும் காட்டுகிறது.

— செ. குமார் (9102), மயிலாடுதுறை

* கோகுலம் இதழ் வாயிலாக 'தீபாவளி' 'பொங்கல்' வாழ்த்துக்களைத் தெரிவிப்பது போல் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களையும் தெரிவிக்க மறந்ததும் ஏனோ?

— ப. கயல்விழி, மதுரை - 19

(1988 டிசம்பர் இதழில் வெளிவந்த சாந்தா கிளாஸின் கதையைப் படித்தால், கோகுலத்திற்கு 'எம்மதமும் சம்மதமே' என்பது தெரியும்.

— ஆசிரியர்)

சிருந்தாவனம்

எதற்கு எது?

இங்கே வலப்பக்கம் இருக்கின்றன சில சொற்கள். இடப்பக்கமும் சில சொற்கள் இருக்கின்றன. மாறி இருக்கும் அவற்றைச் சரிப்படுத்திப் பாருங்கள்.



1. துள்ளுகின்ற மாடு — அ. நூறிலும் சாவு,
2. குரைக்கிற நாய் — ஆ. அம்மியும் நகரும்,
3. ஆறிலும் சாவு — இ. அக்கரை பச்சை
4. அடிமேல் அடி அடித்தால் — ஈ. கடிக்காது,
5. இக்கரைக்கு — உ. சொல்லுப் போச்சு,
6. பல்லுப் போனால் — ஊ. பொதி சுமக்காது.

விடை: 1 — ஊ, 2 — ஈ, 3 — அ, 4 — ஆ, 5 — இ, 6 — உ.

— ஈ. குலசேகரன் (22,670), செஞ்சி.

மின்சார இதயம்



அமெரிக்க விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் மின்சாரத்தில் இயங்கும் இருதயத்தைப் புதிதாகத் தயாரித்துள்ளனர். இது மிக மிக எளிதாகக் கையில் எடுத்துச் செல்லும் வகையில் உருவாக்கப்பட்டிருக்கிறது என்று கூறுகிறார்கள். இந்த மின்சார இருதயத்தைப் பொருத்திக் கொண்டு நடக்கலாம். உடற்பயிற்சி செய்யலாம். மற்றும் எந்த வேலையையும் செய்யலாம், என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இத் தகவலை பென்சில்வேனியா மாநிலப் பல்கலைக் கழகத்தின் செயற்கை உறுப்புகள் தயாரிப்புத் துறைத் தலைவர் ஷெர்சன்ரோசன்பரக் தெரிவித்தார்.

— சா. இரா. மணி, (21,412), வந்தவாசி

வாங்கிய தீவனம்



ஒரு குடியானவன் தான் வளர்க்கும் கோழி, ஆடு, மாடுகளுக்கு, தீவனம் வாங்க சந்தைக்குச் சென்றான். கோழித் தீவனம் கிலோ ரூ.5. ஆட்டுத்

தழை கிலோ 50 பைசா. மாட்டுப் புண்ணாக்கு கிலோ ரூ.3, மொத்தம் நூறு கிலோவுக்கு 100 ரூபாய் செலவாயிற்று. கோழித் தீவனம் எத்தனை கிலோ? ஆட்டுத் தழை எத்தனை கிலோ? மாட்டுப் புண்ணாக்கு எத்தனை கிலோ?

விடை:
கோழித் தீவனம் — 10 கிலோ.
ஆட்டுத் தழை — 88 கிலோ,
மாட்டுப் புண்ணாக்கு — 2 கிலோ.

— பெ. பாண்டியன் (11,311) செஞ்சி

விடை என்ன?



1. கால் இல்லை ஓடும். கால் உண்டு ஓடாது. அது என்ன?
2. பல் இல்லை கடிக்கும். பல் உண்டு கடிக்காது. அது என்ன?
3. கையில்லை கட்டும். கை உண்டு கட்டாது. அது என்ன?

விடை:
1. கடிகாரம், கட்டில்.
2. செருப்பு, சீப்பு.
3. கயிறு, நாற்காலி.

— ச. பி. ஹோசிமின் (7637), சென்னை — 26.

பார்வையற்றவருக்குச் செய்திகள்

பார்வையற்றவர்களும் அன்றாடச் செய்திகளைத் தெரிந்து கொள்வதற்காக சுவீடன் நாட்டில் இருந்து "கோதபர்க் போஸ்டன்" என்ற நாளிதழ் வெளிவருகிறது.

இந்த நாளிதழின் பிரதிகள் இரவில் அச்சாகும் போது அதில் உள்ள



செய்திகள் கேபிள் மூலம் உள்ளூர் ரேடியோ நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. அங்கிருந்து அந்தச் செய்திகள் ஒலிபரப்பப்படுகின்றன. இந்தச் செய்திகளை வாடிக்கையாளர்களின் கம்ப்யூட்டர் கிரகித்து சப்த அலைகளாக மாற்றி வைத்துக் கொள்கிறது.

காலையில் எழுந்ததும் இந்த கம்ப்யூட்டரின் ஒரு பொத்தானை அழுத்தினால், செய்திகள் ஒலி வடிவில் வருகின்றன.

— எம். முஹம்மது பஜ்ருதீன் (20,924), கொடிக்கால்பாளையம்.

தாடியால் வந்த வினை



ஆஸ்ட்ரியாவில் ஹான்ஸ் என்பவருக்குத் தாடி வளர்ப்பதில் ஆசை. அவ்வாறு அவர் 8 அடி நீளம் தாடி வளர்த்தார். தாடி தரையில் புரண்டது. ஹான்ஸ்க்கு மகிழ்ச்சியாக இருந்தது. ஒருநாள் ஹான்ஸ் படிகளில் இறங்கும் பொழுது தாடி அவர் காலில் தடுத்து விழுந்து விட்டார். அப்பொழுதே ஹான்ஸ் இறந்தார்.

— ஏ. ரசீத் (13,402), கோத்தகிரி.

பெரிய முட்டை



உலகிலேயே மிகப் பெரிய முட்டை கழுகினுடையதோ, தீக் கோழியுடையதோ இல்லை. 'வெள்ளை ஷார்க்' என்ற மீனின் முட்டைதான் மிகப் பெரியதாகும்.

— எஸ். மாதவன் (204),
திருச்சி — 14.

எலிப் பலி



இந்தியாவில் எலிகளின் எண்ணிக்கை மக்கட் தொகையை விட 6 மடங்கு அதிகமாக உள்ளது. ஒரு மனிதனின் உணவை 6 எலிகள் தின்று விடும்.


எலிகளில் ஐநூறுக்கும் மேற்பட்ட வகைகள் உள்ளன. வயல்களிலும், காடுகளிலும், பாலைவனங்களிலும் பலதரப்பட்ட எலிகள் வாழ்கின்றன.

எலி பிறந்த பத்து நாட்களுக்குள் உளி போன்ற கூரிய பற்கள் தோன்றுகின்றன. ஆண்டுக்கு 12.5 சென்டி மீட்டர் வீதம் பற்கள் வளருகின்றன. இப்படி அசுர வேகத்தில் வளரும் பற்களைத்தேய்த்துக்குறைக்கவேஎலிகள் எல்லாப் பொருட்களையும் கடித்துக் குதறுகின்றன.

எலிகள் உணவின்றி ஏழு நாட்களும், நீரின்றி இரண்டு நாட்களும் வாழும்.

— எஸ். ஜெயஸ்ரீ (1254),
திருச்சி — 14.

நம் நாட்டிற்கு உரியவை



நம் நாட்டின் தேசிய விலங்கு, பறவை, மலர் எவை என்று கண்டுபிடியுங்கள்:

1. தேசிய விலங்கு — மான், புலி, சிங்கம்.
2. தேசியப் பறவை — பருந்து, கிளி, மயில்.
3. தேசிய மலர் — தாமரை, ரோஜா, மல்லிகை.

விடை: 1. புலி; 2. மயில்; தாமரை.

— து. வேலுமணி (11,601),
பொடாரம் புதூர்.

விருதுகளும் பரிசுகளும்



நோபல் பரிசு
மாக்சேசே பரிசு,
பாரதரத்னா விருது,
பிரிட்டனின் மிகப் பெரிய பட்டமான ஆர்டர் ஆஃப் மெரிட், போப் ஜான் 23 — வது சமாதானப் பரிசு,

விம்பிள்டன் ஃபவுண்டேஷன் பரிசு

ஜோசப் கென்னடி சர்வதேச விருது.

நேருஜி சர்வதேச விருது.

இப்படிப் பல விருதுகளையும் பட்டங்களையும் பரிசுகளையும் பெற்றவர் யார் என்று தெரிகிறதா? அவர் தான் அன்னை தெரஸா!

— எஸ். மாதவன் (204),
திருச்சி — 14.

மீன் பிடிக்கச் செடி



பிலிப்பைன்ஸ் தீவுகளில் சில பகுதிகளில் மக்கள் தூண்டிலோ, வலையோ இன்றி மீன் பிடிக்கிறார்கள். எப்படி? அங்குள்ள ஒரு வகைச் செடியை ஒடித்து அதன் சாற்றைத் தண்ணீரில் விடுகிறார்கள். அச்சாறு செல்லுமிடத்தில் மீன்களை மயக்கமடையச் செய்கிறது. மயக்கம் அடைந்த மீன் நீரின் மேல் மிதக்க மீனைப் பிடிக்கிறார்கள்.

ஆதாரம்: பிலிப்பைன்ஸ் தீவுகளில் 10 நாட்கள்.

தகவல்: ந. ரவிகுமார் (9258),
சென்னை — 53.

மூன்று 'மை'கள்



உண்மை, வாய்மை, மெய்மை என்று கூறுகிறோம் அல்லவா? இம் மூன்று மைகளுக்கும் என்ன பொருள்?

உண்மை — உள்ளத்தால் தூய்மையாக இருப்பது.

வாய்மை — வாயால் அதாவது பேச்சிலே தூய்மையாக இருப்பது.

மெய்மை — உடலால் தூய்மையாக இருப்பது.

— ஆர். குமரிராஜன் (10,856),
மன்னார்குடி.

ஒரே கேள்வி; இரு விடைகள்:




1. புத்தகத்தின் ஆடை எது?
   இரத்தம் உறிஞ்சும் பூச்சி எது?
2. மலரால் தொடுக்கப்படுவது எது?
   மறையும் சூரியன் நேரம் எது?
3. படித்து முடித்துப் பெறுவது எது?
   பாலர்கள் வானில் பறக்க விடுவது எது?
4. வக்கீல் எடுத்துக் கூறுவது எது?
   படத்திற்குப் போடுவது எது?

விடை: 1. அட்டை; 2. மாலை; 3. பட்டம்; 4. சட்டம்.

— மு. ஜெயசித்ரா ஆதித்தன்
(17,774), மதுரை — 2

PARRY'S PAGE





லேடி பர்ட் வண்டு விளையாட்டு

இது மிகவும் தமாஷான பொழுது போக்கு. பகடைக்காயைப் போட்டு விளையாடுங்கள். அதே சமயம் படமும் போடுங்கள்!


தேவையானவை:
ஒரு பகடை
ஆளுக்கொரு வெள்ளை காகிதம்
ஆளுக்கொரு பென்சில் அல்லது ஸ்கெட்ச் பேனா



இந்த விளையாட்டின் நோக்கம், ஒரு லேடி பர்ட் வண்டின் படத்தை வரைவது. பகடைக்காயைப் போட்டு, அதில் வரும் எண்ணுக்குச் சரியான வண்டின் பாகத்தை வரைய வேண்டும். வண்டுக்கு மொத்தம் 13 பாகங்கள் உள்ளன. ஒவ்வொரு பாகத்திற்கும் ஒரு மதிப்பெண் இருக்கும். பகடையில் எந்த எண் வருகிறதோ, அந்த மதிப்பிற்குரிய பாகத்தை தனித்தாளில் வரைய வேண்டும். பாகங்களின் மதிப்பெண்கள்: 1-உடல் ● 2-ஒவ்வொரு காலுக்கும் (மொத்தம் 6 கால்கள்) ● 3-மீசையின் ஒவ்வொரு பக்கத்திற்கும் (2 பக்கம்) ● 4-தலை ● 5-கண்கள் (மொத்தம் 2) ● 6-வால்.

எத்தனை பேர் வேண்டுமானாலும் விளையாடலாம்! ஒவ்வொருவராகப் பகடையைப் போட வேண்டும். முதலில் உடல் படம் போட்ட பிறகு தான் மற்ற பாகங்களை வரைய முடியும்.

ஆகவே உடலின் மதிப்பெண்ணை (அதாவது '1' ஐ) முதலில் போட வேண்டும். அதே மாதிரி, தலையைப் போட்ட பிறகு தான் கண்களையும் மீசையையும் வரைய முடியும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். பகடையைப் போட்டு, அதில் வரும் எண்ணிற்கேற்ப பாகங்களை, ஒவ்வொருவரும் வரைய வேண்டும். முதன்முதலில் லேடிபர்ட் வண்டின் படத்தை முழுதுமாக யார் வரைகிறார்களோ அவர்களே வெற்றி பெற்றவர்கள். இதன் பிறகு மறுபடியும் எல்லோரும் முதலிலிருந்து விளையாடலாம். வேறு ஏதாவது மிருகம் அல்லது பூச்சி படத்திற்கு இதே மாதிரி மதிப்பெண்களைக் கொடுத்து விளையாடலாம். ஒரு மீனின் படத்தைப் போட்டு விளையாடிப் பாருங்கள். புதுப்புது மிருகங்களைப் போட்டு நீங்கள் விளையாடலாம்.



பாராசூட் வீரன் செய்யுங்கள்!






FIG. 1



FIG. 2





FIG. 3

தேவையானவை:
ஒரு பெரிய கைக்குட்டை அல்லது காகித நாப்கின்;
மெல்லிய நூல்; சிறிய கார்க்; வெள்ளை பேப்பர்; கத்திரிக்கோல்; செல்லோ டேப்; வர்ணங்கள், ஸ்கெட்ச் பேனாக்கள் அல்லது கிரேயான் கலர்கள்



திரைப்படங்களிலும் புத்தகங்களிலும் பாராசூட் வீரனைப் பார்த்து வியந்திருப்பீர்கள். இப்போது உங்களுக்குச் சொந்தமாக ஒரு பாராசூட் செய்து கொள்ள சொல்லிக் கொடுக்கப் போகிறேன்.

நான்கு நூல் துண்டுகளை 30 செ.மீ. நீளத்திற்கு, அதாவது 12 அங்குலம் நீளத்திற்கு எடுத்துக் கொள்ளுங்கள். கைக்குட்டையின் ஒவ்வொரு மூலையிலும் ஒரு நூல் துண்டைக் கட்டுங்கள் (படம் 1). கார்க்கின் நடுப்பகுதியில் வேறு ஒரு துண்டு நூலை எடுத்து அழுத்திக்கட்டுங்கள் (படம் 2) கைக்குட்டையிலிருந்து வரும் நூல்களின் நான்கு நுனிகளை கார்க்கைச் சுற்றிக் கட்டப்பட்டுள்ள நூலில் கட்டுங்கள். (படம் 3 ஐப் பாருங்கள்) காகிதத்தில் ஒரு பாராசூட் வீரன் படத்தை வரையவும். படத்தை காகிதத்திலிருந்து வெட்டி கார்க்கின் மீது செல்லோ டேப்பினால் ஒட்டி விடுங்கள். (படம் 4 ஐப் பார்க்கவும்). பாராசூட் வீரன் தயார்! மாடிப்படியின் மேலிருந்து பாராசூட்டைத் தூக்கி வீசவும். அல்லது மாடி ஜன்னலிலிருந்து போடவும். எவ்வளவு உயரமான இடத்திலிருந்து போட வேண்டும் என்பது தான் முக்கியம். வீசப்பட்ட வீரன், அழகாக மிதந்து இறங்குவதைப் பாருங்கள்.




FIG. 4



CUT AND KEEP

HTA 7129

நிழல் சித்திரத்தில் எந்த மீன் சரியாகப் பொருந்தும்?

இது எந்த மீனின் நிழல்? மீன் 1, மீன் 2, மீன் 3, மீன் 4, மீன் 5 - இவற்றில் எது?







பொய்யாக்கி விட்ட பிரவீணா

சாதாரணமாகச் சொல்வார்கள்:

'வாத்தியார் பிள்ளை (பொண்ணு?) மக்கு'

'கவர்ன்மெண்ட் ஸ்கூலிலே பிள்ளையைச் சேர்த்தால் அவ்வளவு தான்!'

ஆனால், இந்த ஆண்டு பத்தாம் வகுப்பில் தென்னார்க்காடு மாவட்டத்தில் முதலாவதாகவும், கணக்கில் மாநிலத்தில் இரண்டாவதாகவும் (100 மார்க்) ஆங்கிலத்தில் மாநிலத்தில் மூன்றாவதாகவும் (96 மார்க்) வாங்கியிருக்கும் குமாரி ஜே. பிரவீணா இதற்கு விதிவிலக்கு.எப்படி?

இவருடைய பெற்றோர்கள் இருவரும் ஆசிரியர்கள் ஆனாலும், இவர் 'மக்கு' இல்லை; புத்திசாலி!

அப்பா எஸ். ஜெயபிரகாஷ் நாராயணன் கருவாட்சி உயர்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர்.

அம்மா ஜி. வி. பிரேமா விழுப்புரம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், சிறப்பு நிலைப் பட்டதாரி ஆசிரியை.

அப்பாவைப் பெற்ற தாத்தா, எம். எஸ். சங்கர நாராயணன் 'நல்லாசிரியர்' விருது வாங்கிய ஓய்வு பெற்ற நகராட்சிப் பள்ளித் தலைமை ஆசிரியர்.

பிரவீணா படிப்பது, அம்மா வேலை பார்க்கும் அதே கவர்ன்மெண்ட் ஸ்கூல்தான்.

ஆக, பிரவீணா சாதாரணமாகச் சொல்வதைப் பொய்யாக்கி விட்டார்.

இவரிடம் பேசிய போது இவர் கூறிய தகவல்கள் நம்மை இன்னும் திகைக்க வைத்தன.

பிரவீணா என்ன சொல்கிறார், தெரியுமா?

நான் அதிக மதிப்பெண்கள் வாங்க மிக முக்கிய காரணம், வகுப்பில் பாடம் நடத்தும் போது, வேறு எதையும் சிந்தனை செய்யாமல் ஊன்றிக் கவனிப்பேன். சந்தேகம் வந்தால் உடனேயோ பின்போ கேட்டுத் தெரிந்து கொள்வேன்.

வீட்டுக்கு வந்ததும் அம்மா, அப்பாவையும் சந்தேகம் கேட்டுக் கொள்வேன்.

அன்றன்று நடந்த பாடங்களை அன்றே படித்து விடுவேன். பலமுறை பதில்களை எழுதிப் பார்ப்பேன். மிக முக்கியமாக, நிறையக் கேள்விகள் ஃபிரேம் செய்து பாடங்களைப் படிப்பேன்.

சாதாரணமாக, அதிக மார்க் வாங்கியவர்கள். "நான் டி.வி. பார்ப்பதில்லை. நேரத்தை வீணாக்குவதில்லை. எப்போதும் படிப்பு, படிப்புதான்..." என்பார்கள். இது பற்றிக் கேட்டதற்கு, பிரவீணாவின் பதில்..

"டி.வி.யில் கிரிக்கெட் மேட்ச் என்றால் (பள்ளி நேரம் தவிர) அங்கிங்கு நகர மாட்டேன். என் அண்ணன் ஜே. முருகவேல் மாவட்ட கிரிக்கெட் டீம் ப்ளேயர். டி.வி.யில் நியூஸ் கட்டாயம் பார்ப்பேன். ஸ்பான்ஸார்ட் ப்ரோக்ராம்களும், சீரியல்களும் பார்க்கத் தவற மாட்டேன். ஆனால் வீடியோ, சினிமா பார்ப்பதில் விருப்பமில்லை."

"சரி, வேறு பொழுதுபோக்கு என்ன" என்று நாம் கேட்டதும் வரிசையாக அடுக்குகிறார் குமாரி பிரவீணா.

"பரத நாட்டியம் பயின்றிருக்கிறேன். ஒவ்வொரு ஆண்டும் பள்ளி நிகழ்ச்சியில் நடனம் ஆடுகிறேன். தமிழ், ஆங்கிலப் பேச்சுப் போட்டிகளில் நிறையப் பரிசுகள் வாங்கி

யுள்ளேன்.

பள்ளி கய்ட் (guide)லில் இருக்கிறேன். வெளி மாநிலங்களில் நடந்த பல ஜம்போரிகளில் கலந்து கொண்டுள்ளேன். 1987—ஆம் ஆண்டு சிறந்த கய்ட்டுக்கான ஜனாதிபதி பதக்கம் (President's Medal) வாங்கியிருக்கிறேன். வாரப் பத்திரிகைகளை விடாமல் படிப்பேன். மோனோ ஆக்டிங் சிறப்பாகச் செய்வேன்'' பிரவீணா கொஞ்சம் மூச்சு விட்டுக் கொண்டு தொடர்கிறார்.

''ஹிந்தியில் விஷாரத் பாஸ் செய்திருக்கிறேன்.''

''சரி, உங்கள் பெற்றோர் உங்களுக்கு எப்படி உதவி செய்தார்கள்?''

''பாடத்தில் வரும் சந்தேகங்களுக்கு அம்மா அப்பா இருவரும் பதில் சொல்வார்கள். படிப்பதில் எனக்கு முழு சுதந்திரம் கொடுத்தார்கள். 'இந்த நேரத்தில் படி' 'அந்த நேரத்தில் படிக்காதே' 'இதைச் செய்' 'அதைச் செய்யாதே' என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்க மாட்டார்கள். அந்த அளவுக்கு நான் நடந்து கொண்டேன். இரவில் நான் கண் விழித்துப் படிக்கும் போது அம்மாவும் எனக்குத் துணையாக விழித்துக் கொண்டிருப்பார்கள்.''

''ஃப்ரெண்ட்ஸ் எப்படி உதவினார்கள்?''

''எப்போதும் எங்களுக்குள் போட்டி இருக்கும், யார் முதல் மார்க் வாங்குவது என்று. பொறாமையில்லாத அந்தப் போட்டி மனப்பான்மை பெரிதும் உதவியது.''

''மாநிலத்தில் சிறப்பு இடத்தைப் பெற வேறு யார் காரணம் என்று நினைக்கிறீர்கள்?''

''நிச்சயமாக எங்கள் பள்ளித் தலைமை ஆசிரியை திருமதி. சவுந்தரம்பாள் அவர்களுக்கும், வகுப்பு ஆசிரியை கலாவதி உள்பட எல்லா ஆசிரியைகளுக்கும் பெரும் பங்குண்டு.''

''அவ்வளவுதானா?''

''என் ரெட்டைப் பின்னலுக்கும் பங்குண்டு. ஏனென்றால் எனக்கு செண்ட்டிமெண்ட்டல் வெற்றி ரெட்டைப் பின்னலால்தான்! ரெட்டைப் பின்னல் நாளில் தேர்வுகளை நன்றாக எழுதுவேன்.''

சிரிக்கிறோம்.

சிரிக்கிறார்.

''இத்தனை டீ.வி., பரத நாட்டியம், கய்ட்ஸ், பேச்சுப் போட்டி இதிலெல்லாம் கலந்து கொள்ளவில்லையென்றால் மாநிலத்தில் முதலாவதாக வந்திருக்கலாம் அல்லவா?''

''சரி. இந்தப் பருவத்தில் இந்த விஷயங்களிலெல்லாம் கலந்து கொள்ளாமல் முதல் மார்க் வாங்கி விட்டு பின்னால் அய்யய்யோ நம் மாணவப் பருவத்தை வீணாக்கி விட்டோமே என்று கவலைப்படுவதை விட, இரண்டிலும் சிறப்பாக இருப்பதையே நான் விரும்புகிறேன். ஆனால் ஒரு விஷயம் 10 ஆம் வகுப்பு அரசு தேர்வுக்காக மற்ற ஆக்டிவிட்டிகளைக் கொஞ்சம் குறைத்துக் கொண்டேன்.''

பேட்டி: ஈ. வெ. ரா. மோகன்


மரியாதை

''எங்க அப்பா பாடினால் எல்லாரும் எழுந்து நின்னு மரியாதை கொடுப்பாங்க...!''

''அவ்வளவு நல்லாக் கச்சேரி பண்ணுவாரா?''

''இல்லே. விழா முடிவிலே 'ஜன கண மன' பாட்டுப் பாடுவார்!''

— செவல்குளம் 'ஆச்சா'





Now from Lion Pencils, here's another Novelty...
the Pearl finished **LION PINKY** pencil, a pretty pencil to behold.
Superb in looks, super smooth in writing with its HB Lead
strongly bonded to give you unbreakable points.


Also available with rubber tip and hexagonal

Other popular brands of Lion Pencils are:

Lion **MOTO,** Lion **TURBO,** Lion **SWEETY,** Lion **CONCORD,**
Lion Hi-Tech **METALLIC,** Lion **MASH-HOOR,** Lion **EXECUTIVE,**
Lion **NOVELTY,** Lion **GEEMATIC** Drawing Pencils
and **RATTAN** Colour Pencils & Wax Crayons.

LION PENCILS PVT. LTD. 95 Parijat, Marine Drive, Bombay 400 002

National-407


வாழ்க... காட்டு - மிருகம்..
படக்கதை :- ஓவியர் - எஸ்.கே.ராமானுஜம் (ரானு)
பாலன் வேலை தேடி..காட்டின் வழியாகப்பக்கத்து ஊருக்கு கால் நடையாகச்சென்று கொண்டிருந்தான்.
நடுக்காட்டில் பாலன் பசியில் வாடினான்.
அப்பொழுது அங்கு யானை ஒன்று வந்தது...
பாலன், யானையைப்பார்த்து....
எனக்கு, பசி தாங்க முடியவில்லை...
உடனே யானை அருகிலுள்ள மா மரத்திற்கு அழைத்துச் சென்றது...
இனிப்பான மாம்பழங்களைப்பறித்துக் கொடுத்தது.
பசியைத்தீர்த்த யானைக்கு, பாலன் நன்றி கூறினான்.
தொடர்ந்து பாலன் காட்டிற்குள் சென்றான்..அப்பொழுது ஒரு காட்டுமனிதன் அங்கு வந்தான்.


பாலன் காட்டு மனிதனுடன்
சந்தோஷமாகச் சென்றான்.
காட்டு மனிதன் பாலனைத்தன்னுடைய நண்
-பர்களிடம் அழைத்துச் சென்றான்.
பாலனைக்கண்ட அவர்கள்
மகிழ்ச்சியில் மூழ்கினர்...
பாலனும் மகிழ்ச்சியில்
ஆனந்தக் கண்ணீர்
விட்டான்....
பாலனைக்கண்டு
இரக்கப்பட்ட ஒரு காட்டு
மனிதன்....
உன்னுடைய கடைசி
..ஆசை.. என்ன?
அப்பாவியான பாலன்
காட்டு மனிதனிடம்...
எனக்கு மிகவும்
பசிக்கிறது..
இதனைக்கேட்ட
காட்டு மனிதன்
"நாங்களும் பசி
யில் தான்...
இருக்கிறோம்
இன்று நீ.. தான்
எங்கள் பசியைத்
தீர்க்க வேண்டும்"
என்று கூறிப்
பாலனைக்கப்பரை
-யில் கட்டி சமைக்கத்
தொடங்கினர்.
உடனே பாலன் ஓவென்று
அலறினான். அச்சத்தம்
பாலன் முதலில் சந்தித்த
யானையின் காதில்...
விழுந்தது.
உடனே யானை காட்டு மனிதர்களைத்துரத்தி
அவர்களிடமிருந்து பாலனை மீட்டது.
பசியினால் வாடிய பொழுது
உதவியது மிருகம், அத்துடன் என்
உயிரை மனிதர்களிடமிருந்து
காப்பாற்றியதும் அதே மிருகம் தான்,
அதனால் என்றும் நான்
காட்டு
மிருகங்களுக்குக்
கடமைப்
பட்டவன்

கேளுங்கள் சொல்லுகிறோம்

* தமிழில் இதுவரை எங்களுக்காக எத்தனை விஞ்ஞானப் புத்தகங்கள் வெளிவந்திருக்கின்றன என்று கூற முடியுமா?

— ஆர். செல்வராஜ், கும்பகோணம்.

300—க்கு மேற்பட்ட விஞ்ஞான நூல்கள் வெளிவந்திருக்கின்றன. ஆனால், அவற்றில் பெரும்பாலான நூல்கள் 10 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களுக்கே ஏற்றவை.

* ஜவாஹர்லால் நேரு வாழ்ந்த காலத்திலேயே, அவருடைய பிறந்த நாள் — குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்பட்டதா?

— ஆர். பிரசன்னா, சேலம் — 1.

ஆம், தில்லியிலுள்ள நேஷனல் ஸ்டேடியத்தில் அவரது பிறந்த நாளில் ஆயிரக்கணக்கான குழந்தைகள் கூடி அவரை வாழ்த்துவார்கள். அவரது வாழ்த்தையும் பெறுவார்கள். அப்போது அவர் சமாதானத்திற்கு அறிகுறியாக வெள்ளைப் புறாவைப் பறக்க விடுவார். ஒருமுறை, அவர் பறக்க விட்ட வெள்ளைப் புறா மேலே வட்டமிட்டுவிட்டு, மெதுவாகக் கீழே இறங்கி வந்து அவருடைய வெள்ளைக் குல்லாவில் உட்கார்ந்து விட்டது. அப்போது குழந்தைகள் கைதட்டி ஆரவாரம் செய்து அளவில்லாத மகிழ்ச்சியடைந்தார்கள்.

* ராஜாஜி என்று நாம் அன்போடு அழைக்கும் சி. ராஜகோபாலச் சாரியார் அவர்களும் சேலம் சி. விஜயராகவாச் சாரியார் அவர்களும் உறவினரா?

— சே. மணிகண்டன், ஸ்ரீபெரும்புதூர்.



இல்லை.

ஆனால், இருவரும் நம் தேச விடுதலைக்கு அரும்பாடுபட்ட தலைவர்கள், சிறந்த வழக்கறிஞர்கள். காங்கிரஸ் மகா சபையைத் தொடங்குவதற்கு முன்பே, விஜயராகவாச்சாரியார் தேசத் தொண்டில் ஈடுபட்டார். காங்கிரஸ் மகாசபையை 1885 இல் துவக்கும் போது, அதைத் துவக்கிய ஏ.ஓ.ஹியூம், தாதாபாய் நௌரோஜி ஆகியோருக்கு மிக உதவியாக இருந்தார். இந்தியத் தலைவர்களிலே முதல் முதலாக ஆங்கிலேயரால் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு, பற்பல துன்பங்களை அனுபவித்தவர். 1919 இல் அமிர்தசரஸில் கூடிய காங்கிரஸில் மக்களின் உரிமைகளைப் பற்றிய தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்து நிறைவேற்றினார். 1950 இல் ஏற்பட்ட இந்தியக் குடியரசின் அரசியல் அமைப்புச் சட்டம், அந்தத் தீர்மானத்தின் அடிப் படையிலே அமைக்கப்பட்டது. சேலம் விஜயராகவாச்சாரியார் என்று அவர் அழைக்கப்பட்டாலும் அவர் பிறந்தது செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள மதுராந்தகத்தில்தான்!

* மெட்ரோபாலிடன் சிட்டி (Metropolitan City) என்றால் என்ன?

— ஆர்யவர்த்தனன், சென்னை — 79.

ஒரு நகரில் உள்ள மக்களின் ஜனத்தொகை 10 லட்சத்துக்கு மேற்பட்டால், அதை மெட்ரோபாலிடன் சிட்டி என்கிறார்கள்.

* இங்கிலாந்தில் மிகவும் புகழ்பெற்ற பல்கலைக் கழகங்கள் ஆக்ஸ்ஃபோர்ட், கேம்பிரிட்ஜ் என்ற இரண்டும்தான் என்று படித்தேன். இவற்றைப் போல அமெரிக்காவில் மிகவும் புகழ்பெற்ற இரண்டு பல்கலைக் கழகங்களைக் கூறுவீர்களா?

— ஆர். ராஜா, சென்னை — 17.

அமெரிக்காவில் ஹார்வர்ட் பல்கலைக் கழகம், யேல் பல்கலைக் கழகம் இரண்டும் புகழ்பெற்றவை.

* மண்புழுவின் ஆகாரம் என்ன?

— பி. கோபு, செம்பியம்.

மண்புழு மண்ணைக் குடையும் போது, தன் வாயை மூடிக் கொண்டிராது. திறந்து வைத்துக் கொண்டேயிருக்கும். அப்போது, அதன் வாய் வழியாக மண் உள்ளே செல்லும். அந்த மண்ணிலுள்ள சிறு சிறு புச்சிகளும், மட்கிப் போன தாவரச் சத்துக்களும் தான் அதற்கு உணவு. மிஞ்சிய மண் வால் வழியாக வெளியே வந்துவிடும்.

* வரிக்குதிரையை, குதிரையைப் போல உபயோகப்படுத்த முடியுமா?

— சி. அந்தோனி, பெங்களூர்— 2



முடியாது. வரிக்குதிரையைப் பழக்குவது மிகவும் சிரமம். மிகச் சிறு குட்டியாக இருக்கும்போது, பிடித்து வந்து சில இடங்களில் பழக்குகிறார்கள். ஆப்பிரிக்கக் காடுகளில் மட்டுமே காணப்படும் இதைப் பல நாடுகளில் மிருகக் காட்சி சாலைகளில் மட்டுமே காண முடிகிறது.

* **இமயமலைப் பகுதியில் பத்ரிநாத் என்ற புண்ணிய ஸ்தலம் இருக்கிறது என்கிறார்களே, அங்கு நீங்கள் போய் வந்திருக்கிறீர்களா?**

— சி. சோமு, கோவூர்.

போய் வந்ததில்லை. ஆனாலும், அதைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன். பத்ரி என்றால் இலந்தை மரம். 'பத்ரிகாசிரமம்' என்றால் இலந்தை மரம் சூழ்ந்த ஆசிரமம். திருமால் இங்கு தவமிருந்த போது, இலக்குமி அவருக்கு இலந்தை மரமாக நின்று, நிழல் அளித்தாராம். திருமாலை 'பத்ரி நாராயணன்' என்ற பெயராலும் அழைப்பார்கள்.

* **எங்கள் ஊருக்குத் திண்டிவனம் என்ற பெயர் எப்படி வந்தது என்று தெரியவில்லை. உங்களுக்குத் தெரியுமா?**

— சி. நாகு, திண்டிவனம்.

புளியமரத்துக்கு திந்திருணி என்ற ஒரு பெயர் உண்டு. புளியமரங்கள் நிறைந்த வனமாக அந்த ஊர் ஆதிகாலத்தில் இருந்ததால் திந்திருணிவனம் என்ற பெயர் பெற்றது. நாளடைவில் அது திண்டிவனமாக ஆகி விட்டதாம்!

* பாரதியாரின் நண்பரும், சிறந்த தேச பக்தருமான சுப்பிரமணிய சிவா பாரத மாதாவுக்கு ஒரு கோயில் கட்டியிருக்கிறாராமே. அந்தக் கோயில் எங்கே இருக்கிறது?

— அரு. பெரியண்ணன், தேவகோட்டை.

பாரதமாதா கோயிலை அவர் கட்ட விரும்பினார். அதற்கான அஸ்திவாரக்கல்லையும் நாட்டினார். பார்ப்பாரப்பட்டியின் அருகிலுள்ள பாரதபுரத்தில் 1923 இல். ஆனால் அவருடைய ஆசை நிறை வேறவில்லை. 1925இல் அவர் காலமானார். அதற்குப் பிறகும் யாரும் எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை.

* செண்பகப்பட்சி என்ற பறவை இப்போதும் இருக்கிறதா?

— சி. முத்துமணி, வேந்தன்பட்டி.

ஓ! இப்போதும் இருக்கிறது. ஆனால், செம்போத்து என்று அதைச் சொல்கிறார்கள். 'ஹூ.ஹூ' என்று அது கத்தும். அது குயில் இனத்தைச் சேர்ந்தது என்பார்கள். ஆனால் குயிலைப் போல காக்கைக் கூட்டில் முட்டையை வைக்காது. புதரில் கூடுகட்டி முட்டையிடுத் தானே அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும்.

* பாம்புகளிலே மலைப்பாம்பின் நஞ்சு மிகவும் கொடியது என்கிறார்களே, இது சரியா?

— ஆர். பத்ரிநாத், சென்னை-12



மலைப்பாம்பிடம் நஞ்சு என்பதே இல்லை. ஆனாலும், இது மான், ஆடு, பன்றி, முயல் போன்ற பிராணிகளைத் தன் நீண்ட வாலினால் சுற்றி வளைத்துப் பிடித்து, இறுக்கி, தன் பெரிய வலுவான பற்களால் கடித்துத் தின்று விடும்.



சிரிப்பூட்டும் செந்தமிழ்ப் பாடல்

பசியில் பிறந்த பாடல்!

காளமேகப் புலவரைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவர் கும்பகோணத்தில் பிறந்து ஸ்ரீரங்கம் பெரிய கோயிலில் வேலை பார்த்து வந்தார். அவரது சொந்தப் பெயர் வரதர்.

'இம்மென்னும் முன்னே எழுநூறும் எண்ணூறும் அம்மென்றால் ஆயிரம் பாட்டாகாதோ' என்றபடி, யார் எதைப் பற்றிப் பாடச் சொன்னாலும் உடனே தங்குதடையின்றிப் பாடுவார். அதனால் அவரை ஆசுகவி என்றார்கள்.

கார்காலத்து மேகம் பொழிவது போல ஆசுகவிகளையும், சிலேடைக் கவிகளையும் மிக எளிதாகப் பாடியதால், 'காளமேகப் புலவர்' என்னும் பெயர் பெற்றார்.


கவிமழை பொழியும் காளமேகப் புலவர், தமிழ் நாட்டில் பல இடங்களுக்குச் சென்று, தம் கவித் திறமையைக் காட்டிப் பரிசுகள் பெற்று வந்தார்.

காளமேகப் புலவர் ஒரு சமயம் நாகப்பட்டினத்துக்குப் போனார். அங்குள்ள காத்தான் சத்திரத்தில் தங்கினார். அங்கு நெடு நேரமாகியும் அவருக்கு உணவு கிடைக்கவில்லை. 'காத்தான் சத்திரம் தம்மைக் காத்திருக்க வைக்கிறதே. 'ஆகா! பெயர் எவ்வளவு பொருத்தமாய் இருக்கிறது!' என்று எண்ணினார். பசி வயிற்றைக் கிள்ளியது. பசி நேரத்திலும் அவருக்கு ஒரு பாட்டு உதயமாயிற்று. ஒரு கரித் துண்டை எடுத்து அந்தச் சத்திரத்துச் சுவரில் பாட்டை எழுதினார்.

கத்துகடல் சூழ்நாகைக் காத்தான் தன்
சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில் அரிசி வரும்; — குத்தி
உலையிலிட ஊரடங்கும்; ஓரகப்பை
அன்னம்
இலையிலிட வெள்ளி எழும்.

இரவு விடியும் நேரத்தில் அவருக்கு உணவு கிடைத்தது. ஓயாமல் ஒலிக்கும் கடல் சூழ்ந்த நாகப்பட்டினத்துக்





காத்தான் சத்திரத்தில் சூரிய அஸ்தமிக்கும் போதுதான் அரிசி வரும். அதைக் குற்றி உலையிலிடும் போது ஊர் மக்கள் தூங்கி விடுவார்கள். ஓர் அகப்பை அன்னத்தை இலையில் போடும் போது வெள்ளி முளைத்து விடும். (இரவு விடிந்து விடும்) என்னும் கருத்துத் தோன்ற எழுதப் பட்ட பாடலைக் கண்ட சத்திரத்து அதிகாரி மிகவும் வருத்தப்பட்டார்.

அவர் புலவரைப் பார்த்து, ''ஐயா! உங்களுக்கு வயிறார உணவு போட்டு விட்டோம். எங்கள் சத்திரத்தைப் பற்றி இப்படித் தூற்றி எழுதலாமா?'' என்று கேட்டார்.

உடனே காளமேகம் அவரைப் பார்த்து, ''மேலோட்டமாய்ப் படித்தால் அப்படித்தான் பொருள் தெரியும். இந்தப் பாடலில் உங்கள் சத்திரத்தைப் புகழ்ந்துதான் எழுதி இருக்கிறேன்'' என்றார்.


''அது எப்படி?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டார் சத்திரத்துக்காரர்.

''உலகமெல்லாம் அஸ்தமித்துப் போகும் பஞ்ச காலத்திலும், காத்தான் சத்திரத்தில்தான் அரிசி கிடைக்கும். அதைக் குத்தி உலையில் போடும் போது ஊரே திரண்டு வந்து சத்திரத்திற்குள் அடங்கியிருக்கும். ஓர் அகப்பை அன்னத்தை இலையில் போட்டால், அது வெள்ளி போலப் பிரகாசிக்கும். தெரிகிறதா?'' என்றார் காளமேகம்.

இப்படி இரண்டு அர்த்தம் தோன்றக் காளமேகப் புலவர் பாடிய பாடல் நயத்தைக் கேட்டு எல்லாரும் வியப்படைந்து சிரித்தார்கள். புலவரை மேலும் சில நாள் அங்கேயே தங்கியிருக்கும்படி வேண்டினார்கள். குறித்த நேரத்தில் அன்புச் சுவையோடு அறுசுவை உணவும் இட்டு இன்பம் அடைந்தார்கள்.

புலவர் - தணிகை உலகநாதன்

உறுப்பினர் வரைந்த ஓவியங்கள்



க. பாபுயோகேஸ்வரன் (8,672)



க. சங்கர் ஆனந்த் (19,104)



க. காவேரி (15,946)



ம. செல்வம் (19,994)

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: வி. ராஜேந்திரன்.

நிர்வாகக் காரியாலயம்: ரேஸ் கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை – 600 032. போன்: 4 3154 3, 4 34 157.

ஆறு மாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/–; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 60/–; விமானத் தபால்: ரூ. 135/–.
ஆண்டுச் சந்தா – உள்நாடு: ரூ. 36/–; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 120/–; விமானத் தபால் ரூ. 270/–.

"அம்மாவோட காபியை விட என் காபி ரொம்ப நல்லாயிருக்கும்!"



" காபின்னு இப்படித்தான் இருக்கணும்!"



PARRY'S
பாரிஸின் தரமான தயாரிப்புகள்

காராமில்க் • சாக்லேட் எக்ளேர்ஸ்
ட்ரை-மி • கோகனட் கிரீம் • சாக்லேர்ஸ்
லால்லிபாப்ஸ் • காஃபி பைட்

Parry's
The King of Sweets

HTA 7037



சுவைக்கச் சுவைக்க தனியின்பம்
அதுவே கோகனட்
குக்கீஸ் அளித்திடும்
பேரின்பம்
நியூட்ரின்
குக்கீஸ்
பாலும் தேங்காயும் திரண்டு
அளிக்கும் அருஞ்சுவை
THE FINEST, WIDEST RANGE
nutrine
India's largest selling sweets
COOKIES
Visesh/NC/8815/Tam.